தேனருவி

•ஐப்பசி மலர்•



thenaruvi

விலை ·30· சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Always insist on

KANAGALINGAMS CIGARS

சுருட்டுகளிலே
மிகவும் திறமானது
ருசிகரமானது
காரம், மணம், குணம்
ஆகியவை நிறைந்தது
சிறந்த புகையிலையினால்
திறமான தொழிலாளரால்
தயாரிக்கப்படுவது

கனகலிங்கம்
சுருட்டுகளையே

எப்பொழுதும் பாவியுங்கள்.

ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

KANAGALINGAMS

No. 17, St. John's Road, COLOMBO.

Phone: 5883 Cables: KANCIGARS

(சீபர்லிங் டயர்கள்)

உங்கள் பணத்திற்கு பெறுமதி வாய்ந்தவை. உறுதிக்கும், நீடிய கால பாவனைக்கும் உத்தரவாதமுள்ளது. பரிபூரண பெறுமதிக்கு இதை விடச் சிறந்த டயர் சேவையைப் பெறுவதரிது.

SEIBERLING TYRES

A. S. S. சங்கரலிங்கம்பிள்ளை
அன் கம்பனி லிமிட்.,

தபால் பெட்டி இலக்கம்: 435

136, பஞ்சிக்காவத்தை ரோட்,

கொழும்பு-10.

போன்: 4491 தந்தி: ''டயர்டியூப்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீக நங்கையர்களே!

- வண்ணக் கழுத்தணிகளுக்கு!
- மின்னும் காதணிகளுக்கு!
- ஜொலிக்கும் கையணிகளுக்கு!
- ஒலிக்கும் காலணிகளுக்கு!

தரம் குறையாத இமிட்டேசன் நகைகள் தேவையா?

விஜயம் செய்யுங்கள்............

களஞ்சியம் பிரதர்ஸ்

14, சைனா பஜார் சென்னை-1

(நாடோடி மன்னன், கட்டப்பொம்மன், தங்கப்பதுமை, மன்னாதி மன்னன், பார்த்திபன் கனவு, வஞ்சிக்கோட்டை வாலிபன், முதலிய படங்களுக்கு நகைகள் சப்ளை செய்தவர்கள்)

தலைமைக் காரியாலயம்:

161/11, பேங்ஷால் வீதி, கொழும்பு.

கடிதத் தொடர்புகள் சென்னை முகவரிக்கு மட்டும் வைத்துக் கொள்ளவேண்டுகிறோம்.

தேனருவி

உள்ளே!

THENARUVI

(TAMIL MONTHLY)

MANAGER:
S. Arunmolithevan

EDITOR:
"ARUNMOLI"

EDITORIAL: Assistants.
"Eela - Thevan"
"Ilampooranan"
"Mahendran"
"Navukarasan"

ART:
"Sana"
"Satchi"

THENARUVI
31/3, HAMPDEN LANE,
COLOMBO-6.

Price per Copy: 30 Cents.

கதைகள்

முத்துச்சிப்பி
பங்கம்
பிச்சைக்காசு
எச்சில் எனினும்
கலைஞன்

கட்டுரைகள்

இயக்கமும் இலக்கியமும்
தக்ஷிணகானசபா
தேவாரமும் இசைக் குறிப்பும்

கவிதைகள்

கடுகியே பிரிவதேனோ?

தனிப்பகுதிகள்

தகனம்
கவிதை பிறந்த கதை
எண்ண மஞ்சரி
வளரும் கலை
செந்தாமரை

"தேனருவி"
சந்தா விபரம்

இலங்கை, இந்தியா.

ஒரு வருடம் ரூபா 3-50
ஆறு மாதம் ரூபா 1-75

மலாயா வெளிநாடு

ஒரு வருடம் ரூபா 4-50
தனிப் பிரதி சதம் /30

மட்டக்களப்பில்
நமது ஏஜென்சி

கலாநிதி புத்தகசாலை
23, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மத்தியிலே

''தேனருவி'' ஆ! தேன் போல இனிக்கிறது. இலங்கையில் நல்ல மாதசஞ்சிகை இல்லை என்ற குறை இனிமேல் இல்லை. முகப்பை அலங்கரிக்கும் சானாவின் கைவண்ணம் போற்றத் தக்கது. ஆனால் பண்டைக் காலந் தொடக்கம் பாவலரும் ஓவியரும் பெண்களைப் பகிரங்கமாகத் துகிலுரிகின்றனர். பண்பாடமைந்த உடையுடன் பெண்ணினத்தை ஓவியர் சிருஷ்டிப்பாராயின் நாட்டுக்கும் நமது பண்பாட்டுக்கும் அருந்தொண்டு புரிபவர் ஆவர். வாழ்க! தேனருவி!

வணக்கம்.

மீசாலை, **யோ. திருஞானசம்பந்தர்.**

தேனருவி புரட்டாதி **ஊற்றுப்** பார்த்து ஒவ்வொருபக்கமாகச் சுவைத்தேன். இந்தியப் பத்திரிகையுடன் போட்டிபோடும் தேனருவி இன்னும் செழிப்போடு வளரவேண்டுமென்பதே என் அவா!

மட்டக்களப்பு, **''முத்தமிழ்தாசன்''**

ஈழத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தேனருவி என்றும் நிலைத்து வாழ கடவுளை வேண்டி தேன் கலந்த அருவியை நெஞ்சாரப் புகழ்ந்து வாழ்த்துகின்றேன்.

திருகோணமலை, **ந மகேந்திரஜோதி**

தேனருவி எடுப்பாக இருக்கிறது. ஜனங்கள் எதிர் பார்க்குமளவிற்கு கதைகளைக் கூட்டியிருக்கலாம். கவிதைகளை அதிகமாகத் தாங்கின் மக்களிடம் தீவிரமாகச் செல்லாது தேங்கும். அங்ஙனமாயின் நஷ்டம் யாருக்கு?......

கொழும்பு, **எஸ். அகஸ்தியர்.**

''தேனருவி'' சிறந்த ஓர் இலக்கியப் பத்திரிகை. கதை, கட்டுரை, கவிதை அனைத்தும் சற்றேனும் இலக்கியச் சுவை குன்றாது கலை மணம் கமழ்கின்றது. தமிழ் நாட்டில் 'கலைமகள்' எப்படியோ, ஈழத்தில் 'தேனருவி' அப்படியே! எனினும் தற்போதையத் தரம் பொலிவுற நம் ஈழம், கலை எழில் வளம்பெற, நாம் எல்லோரும் உழைப்போம்.

பண்டாரவளை **''கொடியூர் அமரகம்''**

தேன் நிலவிலே ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தேனிலும் இனிய தேனருவியை பருகியவர்கள் தொடர்ந்து பருகாமல் இருக்கமாட்டார்கள். சிறியோர் முதல் பெரியோர்வரை அனைவரும் பார்த்துச் சுவைக்கும் இத்தேனருவி மக்களுக்கு ஒரு பயனளிக்கும் இன்மலராகத் திகழ்கின்றது. தேனருவி ஆசிரியர்க்கும் மற்றும் இதில் பங்கு கொள்ளும். எழுத்தாளர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றி. வாழ்க தேனருவி.

பேராதனை **செல்வி. ஏ. எச். யூ. பரீதா.**

கலைப்பொலிவு நிறைந்ததாகவும், சுவையுள்ளதாகவும், அமைந்துள்ள தேனருவி, புரட்டாதி ஊற்றில் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த, இசை விமர்சனம் வராதது இசை ஆர்வமுள்ள எம்போன்ற மாணவிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது. இனிமேல் இசை விமர்சனம் தவறாது வர ஆவன செய்யவேண்டுகின்றேன்.

திருகோணமலை **செல்வமகள்— நடராஜா**

கான சபா

தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூன்றாக வகுக்கப்பட்டு ''முத்தமிழ்'' என மொழியப் படுவதை யாவரும் அறிவர். இவற்றுள் நடுநாயகமாக விளங்கும் இசைத்தமிழ் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்களால் போற்றி வளர்க்கப்பட்டு சிறந்து விளங்கி இருக்கின்றது. இதனை பழந் தமிழ் நூல்களாகிய தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் வரும் குறிப்புகளிலிருந்தும், சிலா சாஸன ஆதாரம் உடைய சரித்திர ஆராய்ச்சிகளிலிருந்தும் அறியக் கிடக்கின்றது.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் அவதரித்த அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகியவர்கள் பக்திச் சுவையோடு சேர்த்துக் குழைத்துக் கொடுத்த இசைத் தமிழ் செல்வங்களை இன்றும் நாம் அனுபவித்து வருகிறோம்.

ஆனால் அவை காலவேறுபாட்டின் காரணத்தினாலும், அரசியல் மாறுதல்களினாலும் இசைத் தமிழ் இன்று மங்கிக் கிடக்கின்றது.

அடுத்த இதழில்

முருகையன் எழுதிய

கவிதை பிறந்த கதை

கச்சேரிசெய்ய வரும் பிரபல சங்கீத வித்வான்களும் மற்றையோர்களும், பிற பாஷைகளில் உள்ள கீர்த்தனங்களையே திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டும்—கிளிப்பிள்ளை போல் ஒரு சில பாடல்களை மட்டும் ரசிகர்களுக்கு ஒப்புவித்துக் கொண்டும் இருக்கின்றார்கள். இந்த நிலைமையைமாற்றி இசைத் தமிழின் பெருமையைப் பேச்சளவிலும், எழுத்தளவிலும் வைத்துக் கொள்ளாது செயலளவில் காட்ட ஈழத்தின் இசைக் கலைஞர்களும், சபாக்களும் முன்வரல் வேண்டும். இந்த நோக்கத்துடன் ஓரளவு செயல் புரிந்து வரும் சபாக்களில்—திருமலை—தக்ஷிணகான சபா மிகவும் போற்றத் தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். இச்சபாவைப் பற்றிய கட்டுரை ஒன்று இவ்விதழில் இடம் பெறுகின்றது.

''இச்சபாவின் இசைத் தொண்டினை ஆதரிக்க வேண்டியது இல ங்கை வாழ் சங்கீதாபிமானிகளின் தலையாய கடமையாகுமென இக் கட்டுரையை முடிக்கின்ருர் எழுத்தாளர் ''கானலோலன்'' அவர் கள் மற்றும்.

ஐந்து சிறுகதைகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன. பத் திரிகை வேலையிலிருந்து வேர்த்துக் களைத்து வரும் அவனுக்கு, அவள் சந்திப்பு பாலைவனத்தில் கண்ட பசுமலர்ச் சோலையாக இருந்தது. ஆனல்... ''பரராஸ்—வாரித்தம்பி'' கதையைப் பார்த்தால் இதற்கு விடை கிடைக்கும்.

''பங்கம்'' துருவக் கதைகள் என்ற தொடரில் இடம் பெறும் இரண்டு சிறுகதைகளில் யாழ்ப்பாணத்தைப் பகைப் புலமாகக் கொண்ட முதற் கதையே இதுவாகும். தான் வேலை பார்க்கும் இட மான மாத்தறைக்கே தன் மனைவியையும் கூட்டிக் கொண்டு போக லாம் என வந்த சிவக்கொழுந்து பட்ட மான பங்கத்தை தனக்கே உரித்தான தனி நடையில் எழுதியுள்ளார் எழுத்தாளர் எஸ். பொன் னுத்துரை அவர்கள்.

கணபதிப்பிள்ளை இறந்ததும், அவர் மனைவி சின்னுச்சியின் சீவி யம் எல்லாம் புவனத்தின் வீட்டுத் திண்ணையிலேதான் கழிந்தது. புவனம் அவளுடைய மருமகள் தான். இருந்தும் எத்தனை நாளைக்குத் தான் அவளுடைய உதவியுடன் இருக்க முடியும். அரசாங்கத்தாரி னல் அளிக்கப்படும் பிச்சைக் காசு அவளின் மனக் கண்முன் தோன்றி யது. ஆனல் சின்னுச்சியால் அக்காசைப் பெற்றுக் கொள்ள முடிய வில்லை. காரணம்?......''சொர்ணன்'' எழுதிய ''பிச்சைக் காசை''ப் படியுங்கள் விடை கிடைக்கும்.

அவனுடைய தந்தைக்கு ''பழீலா'' எலி கடித்த பழமாகத் தென் பட்டாள். ஆனல் அந்த எலியே அவன் தான் என்பதை ''எச்சில் எனினும்'' என்ற கதையில் ''நுஃமான்'' புலப்படுத்துகின்ருர்

செ. யோகநாதன் கண்ட காட்சி ''கலைஞன்'' என்ற கதையாக உருவெடுத்துள்ளது;

மற்றும் வழக்கம் போல் தொடர் காப்பியம் கட்டுரையுடன் இ. நாகராஜனின் ''கவிதை பிறந்த கதை''யும். கவிதை உலகிலே புதி தாகக் காலடி எடுத்து வைக்கும் இளம் கவிஞர் ஒருவரின் கவிதை யொன்றும் இவ்விதழிற்கு சுவையூட்டுகின்றன,

★ வல்லிக் கண்ணன்.
★ சாகித்திய மண்டலமும்.
★ தமிழ் நூல்களுக்குப் பரிசும்.
★ ரஸிகமணி டி. கே. சி.
★ கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை.

விசித்திர எழுத்தாளர் வல்லிக் கண்ணன்

* எழுத்து வெறி பற்றி, நான் சர்க்கார் ஆபீஸ் குமாஸ்தா வேலையை ராஜிஞமா செய்து விட்டு, 1942-ம் வருஷம் மே மாதம் ஒரு நாள் அதிகாலை வேளையில் வீட்டை விட்டுக் கிளம்பினேன். ஒருவரிட மும் சொல்லிக் கொள்ளா மல் கையிலே காசு இல்லா மற் தான் ஆலிவர் கோல்ட் ஸ்மித் நடந்து நடந்தே ஐரோப்பா பூராவும் சுற்றிஞ ஞமே. மாக்ஸிம் கார்க்கி எங்கெங்கோ திரிந்தாஞமே. நானும் ஏன் திரியக் கூடாது? திருநெல்வேலியிலிருந்து சென்னை சுமார் 400 மைல் தூரம். தினசரி 30 மைல் நடந்தால் ஒருவன் 14 நாட் களில் சென்னையை அடைய லாம். கணக்கின்படி இது மெத்தச் சரி. ஆனல் வச திகளற்ற நிலையிலே ஒருவன் அவ்வாறு செய்ய இயலுமா? அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை. புறப்பட்டுவிட் டேன்.

* நான் சென்னை வந்த புதி தில், ஒரு தடவை 'எபிஷியன்ட்' கணபதி ஐயர் சொன்னுர்.

''நீங்கள் பெரிய ஸினிக் ஆக இருக்கிறீர்கள். ஸினிஸிசம் வாழ்வில் பலன் தராது. மெட்டீரியலிஸ் மனேபாவ மும் தேவை. உலகத்தின் முதல்தர ஸினிக் ஆகிய டயோ ஜீனஸ் கூட கடைசியில் தனது பாத் -டப்பை விற்று விட்டான்'' என்று.

நான் எனது சொத்தாகிய புத்தகங்களை விற்கவேண்டிய அவசியம் இது வரை ஏற்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நான் இசைந்து ஒத்துழைப்பதானால் சினிமா உலகம் எனக்குப் பணம் அளிக்கத் தயாராக இருந்தது. 'வாழ்க்கை வசதிகள் எல்லாம் கிட்டும் கல்யாணம் செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படும், நல்ல வேலை உண்டு' என்று சிங்கப்பூர் தமிழ் பத்திரிகை ஒன்றும், கோலாலம்பூரில் வாழும் சுப. நாராயணனும் என்னைப் பல தடவைகள் அழைத்தனர். 'நல்ல சம்பளத்துடன் ஒரு வேலை' என்று மதுரை தினசரி ஆசை காட்டியது. ஆயினும் சென்னையை வெறுத்துச் செல்லும் எண்ணம் இன்னும் வரவில்லை எனக்கு.

* நான் வாழும் முறை தனிரகமானது. பிறருக்கு ஒத்துக் கொள்ள வேண்டும் என நான் எதிர்பார்க்கவுமில்லை. சில வருஷங்களுக்கு முன்னரே எனது நண்பராக வந்து சேர்ந்த ஜெயகாந்தன் சொல்வார்,

''இவர் பித்தகோரஸாக இருக்கிறார். பித்தகோரசுக்கும் நன்மை செய்ய எண்ணினான் மகா அலெக்ஸாந்தர். வெளியே வெயிலில் அமர்ந்திருந்த அவர் அறிஞரை அணுகினார். உமக்காக நான் என்ன செய்யலாம் என்று கேட்டார். 'என் மீது விழும் வெயிலை மறைக்காமல் தள்ளி நில்லு; அது போதும்' என்றார் அவர்.

இவ்வித விசித்திர சுபாவம் படைத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணனை நமது இலக்கிய ரசிகர்கள் சி. சு. செல்லப்பா சகிதம் சந்திக்கச் சென்றார்கள். அவர்கள் கூறிய சில சுவையான தகவல்கள்:

* கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள ஒரு சேரிப்புறத்தில் ஒரு குடிசை போன்ற வீடொன்றில் வசிக்கிறார். வெளியே இருந்து பார்க்கும் பொழுது குடிசைபோன்றிருந்தாலும் உள்ளே அறையை வெகு அழகாக, துப்பரவாக வைத்திருக்கிறார். எங்கும் புத்தகங்கள்; பத்திரிகைகள். அவருடைய அண்ணன் அசோகனுடன் வசிக்கிறார். அவரும் ஓர் எழுத்தாளர். இருவரும் பிரம்மச்சாரிகள்.

* அவருக்கு 42 வயது ஆகிறது. இன்றுவரை எழுத்தையே நம்பி வாழ்கிறார். மாதம் ஒருகதை கல்கிக்கோ, விகடனுக்கோ எழுதினால் 100 ரூபா கிடைக்கும். அது போதும் ஒரு மாதச் செலவுக்கு. மூன்றுநேரமும் இட்லிதான் சாப்பாடு. உயிர் வாழ்வதற்காக மட்டும்தான் சாப்பிடுகிறார். நாள் முழுவதும் ஊர் சுற்றி, எதையும் உன்னிப்பாக அவதானிப்பதே அவரது பொழுது போக்கு. கையிலிருக்கும் பணம் யாவற்றுக்கும் புத்தகங்கள் வாங்கி விடுவார். நிறையப் படித்து அதிகம் சிந்தித்து, கொஞ்சம் எழுதுகிறார்.

* அவர் 'கோரநாதன்' என்ற புனைபெயரில் காரசாரமாக எழுதிய நூல்களைப் படித்தவர்கள், அவர் தி. மு. க. வை சேர்ந்தவர் என நினைக்கிறார்கள். சிலர் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என 'லேபல்' ஒட்டுகிறார்கள். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவரும் இல்லை. தனிப் போக்குடையவர்.

* அதிகம் பேசமாட்டார். கூச்சம் மிக்கவர். எழுத்தாளர் கூட்டங்களில் அதிகம் கலந்து கொள்வதில்லை. இலங்கையிலிருந்து சென்றிருந்த டொமினிக் ஜீவாவுக்கு சென்னையிலுள்ள சில எழுத்தாளர்கள் நடத்திய வரவேற்புக் கூட்டத்திற்குச் சென்று விட்டு, சொந்தக் குரோதங்களால் அங்கு சில எழுத்தாளர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவைச் சகியாது இடையிலெழும்பி வந்துவிட்டார்.

* அவருக்குப் பிடித்தமான எழுத்தாளர்கள்:

அன்ரன் செகாவ்; டாஸ்டாவஸ்கி.

* அவரும், நாவலாசிரியர் இளங்கீரனும் நெருங்கிப் பழகியவர்கள்; நண்பர்கள்.

* அவருக்குள்ள நல்ல பழக்கம்; ரசிகர்களும் நண்பர்களும் எழுதும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதுவது.

சாகித்திய மண்டலமும் தமிழ்ப் பரிசும்

இம்முறை சாகித்திய மண்டலத்தினர் தமிழில் மொழி பெயர்ப்பு நூலொன்றுக்கும், கட்டுரை நூலொன்றுக்குமே பரிசு வழங்கியிருக்கின்றனர். மூன்று சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருந்தும், அதில் எந்தத் தொகுதியும் பரிசுக்குகந்ததாக அவர்களுக்குப் படவில்லை. கடந்த முறை பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதியுடன் ஒப்பிடும்பொழுது குறிப்பாக காவலூர் ராசதுரையின் 'குழந்தை ஒரு தெய்வமு'ம் நீர்வை பொன்னையனின் 'மேடும் பள்ளமு'ம் தரத்தில் எந்த விதத்திலும் குறைந்ததல்ல. எழுத்தாளர்கள் ஊக்கமுடன் எழுதுவதற்காகவும், நூல்கள் வெளியிடுவதை உற்சாகப்படுத்துவதற்காகவுமே இப்பரிசுத் திட்டம்

ஏற்படுத்தப்பட்டது. எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவதற்காகவேனும் ஏதாவது ஒரு நூலுக்குப் பரிசு கொடுத்திருக்கலாம்.

சிறுகதைத் தொகுதியொன்றுக்குப் பரிசு வழங்கப்படாமைக்கு நிர்வாக சபையில் ஏற்பட்ட மாற்றமோ, அல்லது புலமைக் காய்ச்சலோ தான் காரணமாயிருக்குமென்று பலர் சந்தேகிக்கின்றனர். சிறுகதைத் துறை அப்படி ஒன்றும் இலக்கியத்தில் முக்கியமான துறைஅல்ல என்று அபிப்பிராயப்படுகிறவர்க்ள், நிர்வாக சபையில் ஆதிக்கம் வகிப்பதும் இதற்கொரு காரணமாக இருக்குமா?

தமிழனுக்கு ஆங்கிலம் புரியாது

ஆங்கிலத்தில், தமிழுடன் ஒப்பிடும் பொழுது, இலக்கியம் மிகவும் வளர்ந்திருக்கிறது. என்னதான் ஆங்கிலத்திலுள்ள தரமான இலக்கியங்களை நான் விழுந்து விழுந்து படித்தாலும், தமிழிலுள்ள இரண்டாந்தர நூலொன்றைப் படிப்பதிலுள்ள இன்பம் எனக்கு வேறெதிலுமில்லை. 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா' என்றான் பாரதி. அதில் நூல்களைப் படிப்பதும் ஓர் இன்பம் என்கிறார் க. நா. சு. அதுவும் தமிழ் நூல்களைப் படிப்பது பேரின்பம் எனக் கருதுகிறேன் நான். குறிப்பாகக் கவிதையைப் பொறுத்த மட்டில் தமிழ்க் கவிதையையே என்னால் ரசிக்க முடிகிறது. இதைக் கவியரசர் தாகூர் ஓரிடத்தில் வெகு அழகாக விளக்குகிறார்.

''கவியை அனுபவித்து விடுவதற்காக எத்தனையோ மொழிகளைக் கற்றேன். இங்கிலிஷ் மட்டுமல்ல; பிரஞ்சு பாஷை, ஜெர்மன் பாஷை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தீன், கிரீக் ஆகிய புராதன பாஷைகள் எல்லாம் கஷ்டப்பட்டுக் கற்றேன். என்ன பயன்? கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவேயில்லை. என் தாய்மொழி ஒன்றன் மூலமாகத் தான் அது தெரிய வந்தது. ஒருவன் பிறமொழிகளின் மூலமாகக் கவியின் உயிர் நிலையை அறியப் புகுவது, காதலியின் அருள் முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்.''

ரஸிகமணி டி. கே. சி. அவர்கள், தமிழ்க் குழந்தைகளுக்கு எல்லாப் பாடங்களுமே தமிழிற் தான் போதிக்க வேண்டும் என்ற கருத்துடையவர். ஏன் ஆங்கிலக் கவிதைகளைக் கூட, தமிழிலேயே விளக்கிப் படிப்பிக்க வேண்டும் என்று கூறுவார். ஆங்கிலேயர்கள் கூட லத்தீன், கிரேக்க மொழிகளிலுள்ள கவிதைகளைப் படிக்கும் பொழுது, அந்தந்த மொழி உரைகளுடன் படிப்பதில்லை; ஆங்கில விளக்கத்துடன் தான் படிப்பார்கள். ஆகவே நாமும் ஆங்கிலக் கவிதைகளை, தமிழ் விளக்கத்துடனேயே படிக்க வேண்டும் என்று டி. கே. சி. அடிக்கடி கூறுவார்.

ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றிருந்தும், ''தமிழுக்கு ஆங்கிலம் புரியாது'' என்று முதன் முதல் துணிச்சலாகச் சொன்ன தமிழர் டி. கே. சி. தான். கு. அழகிரிசாமி, டி. கே. சி. யைப் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் ஒரு சுவையான சம்பவத்தைக் குறிப்பிடுகிறார்.

''தாய்மொழிக் கவிதைகளை அனுபவிக்க முடிவது போல, பிறகவிதைகளைப் பரிபூரணமாக அனுபவிக்க முடியாது என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது. இதனாற்றான் 'நமக்கு ஆங்கிலம் புரியாது' என்று டி. கே. சி. அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். ஆங்கிலத்தில் மகா விற்பன்னர் என்று புகழப்பட்ட வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியாராலும் ஆங்கிலத்தைப்புரிந்துகொள்ள முடியாது என்று டி. கே. சி. ஒருநாள் கூறினார். அண்ணாமலை சர்வகலாசாலையில் சாஸ்திரியார் துணைவேந்தராக இருந்தபோது ஐயகர் அங்கு வந்திருந்தாராம். ஐயகர் சர்வகலாசாலையில்பேசும்பொழுது, 'ஆங்கிலத்தையே படித்து சாஸ்திரியார் தம் வாழ்நாளை வீணாக்கிவிட்டாரல்லவா?'' என்றாராம். அப்போது அங்குஅமர்ந்திருந்த டி. கே. சி. உடனே 'ஆம்' என்று கூறினாராம்.''

பழம் பெருமை பேசுவது பற்றி கவிமணி

தாய்மொழியில் இலக்கியங்களைச் சுவைப்பதால் ஏற்படும் அநுகூலங்களையும், ரசானுபவத்தையும்பற்றி எழுதும்பொழுது, நம்மிற் பலர் தமிழ்ப்பற்றுக்குப் பதிலாக, தமிழ் வெறி கொண்டு அலைவதையும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ''உண்மை நிகழ்ச்சிகளைக் கவனியாமல், வரலாற்றுப் பெருமைகளைக் குறித்து வாய்ப்பறையடிப்பதை நாம் ஒரு மகிழ்ச்சியாகவும் பொழுபோக்காகவும் கருதி வருகிறோம்.'' என்று ஓர் எழுத்தாளர் குறிப்பிட்டதில் பெருமளவில் உண்மை இருக்கிறதுபோல் எனக்குத் தோன்றுகிறது.

நமக்கு ஆதர்ஸமாக இருக்க வேண்டிய முன்னோரின் வீரதீரச் செயல்கள், நமது வளர்ச்சிக்குக் குந்தகமாக, இருப்பதை எந்தத் தமிழ் மகனும் விரும்பமாட்டான். நாம் சாதிக்கப்போவதை வைத்தே பெருமைப்படக்கூடிய காலம் வந்துவிட்டது.

நாகர் கோயிலில் நடந்த எழுத்தாளர் மகாநாட்டில் பழம் பெருமை பேசுவதைப் பற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் அழகாக விளக்கியிருக்கிறார்.

''நான் எழுத்தாளர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தமிழில் அது இருந்தது இது இருந்தது என்று பழம் பெருமை பேசிக் கொண்டிராமல் எது தேவையோ அத்துறையில் இறங்கி அவர்கள் உழைக்க வேண்டும். முத்தமிழ், முத்தமிழ் என்று முழக்கம் செய்கிறார்கள். இசைத் தமிழில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? பண்டை நூல்களைப் படித்துவிட்டு நாம் பெருநாரை, பெருங்குருகு என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் இசை ஞானம் உண்டாகி விடுமா? அந்தநாரைகளும், குருகுகளும் மறைந்து போய்விட்டன. இனி நம்முடைய வலைக்குள் அகப்பட்டுப் போவதில்லை. ஓர் ஏழை உண்ணச் சோறும், உடுக்கத் துணியும் இல்லாமற் தவிக்கிறான். அவனிடத்தில் அவனுடைய பாட்டனும், கொள்ளுப்பாட்டனும் பெரிய கப்பலோட்டி வியாபாரிகளாயிருந்தார்கள் என்று பழம் புராணம் படிப்பதனால் என்ன பயன்?''

புத்தியில்லே! புத்தியில்லே!

சுப்பிரமணிய பாரதியார் ஒரு நாள் அம்மன் கோவிலுக்குப் போயிருந்தார். அங்கு ஒரு சடங்கு நடந்து கொண்டிருந்தது. ஏராளமான கூட்டம். அக் கூட்டத்தின் நடுவில் ஒருவன் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தான். மக்கள் அவனுடைய ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தனர். அவன் பின்வருமாறு பாடிக் கொண்டே ஆடினான்.

''பாக்கும் வைச்சான் பழமும் வைச்சான்
வெத்திலே வைச்சான் போயிலே வைச்சான்
ஒண்ணு வைக்க மறந்து விட்டான்
சுண்ணாம் பில்லே! சுண்ணாம் பில்லே!

பாடலைக் கேட்ட பாரதியார் சிரித்தார். பேயாட்டம் ஆடியவனுக்குக் கோபம் வந்துவிட்டது. பாரதியை வெறித்துப்பார்த்து ''நீ ஏன் சிரித்தாய்'' என்று சீறினான். உடனே பாரதியார் பின்வரும் பாட்டைப் பாடி ஆட ஆரம்பித்தார்.

நிலமும் வைச்சான் பழமும் வைச்சான்
நிகரில்லாத செல்வம் வைச்சான்
ஒண்ணுவைக்க மறந்துக்கிட்டான்
புத்தியில்லே! புத்தியில்லே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துச்சிப்பி

[illegible] — வாரித்தம்பி

அவளையும் அவனையும் நினைத்தால்...அவன் அவளைச் சந்தித்து ஐந்து வருடங்களாகின்றன. அவளை அவன் சந்தித்ததே ஒரு விசித்திரமான சூழ்நிலையில்.

அவன் ஒரு பத்திரிகாசிரியன். இலக்கியப் பித்து. இலட்சிய வெறி.

அன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி இருக்கும். இருளின் இடைவெளியில் மின் ஒளி ஐக்கியமாகி கொழும்புக் கோட்டை பஸ் நிலையம் சோபிதமாக மினுங்கியது. பத்திரிகை வேலை முடித்து அச்சகத்தைவிட்டுவேர்த்துக் களைத்துசோர்ந்து தளர் நடை நடந்து பஸ் நிலையத்திற்கு வந்தான் அவன். அவன் விழிகள் பஸ் வரும் வழியில் மொய்த்திருந்தன. பஸ் நிலையம் நிறைய கூட்டம். கூட்டத்தின் நடுவே அவன் நின்றான். அவனின் தோளை இடித்தபடிஅவனை திரும்பிமோகனமாகப் பார்த்து முறுவலித்தபடி அவள் முன்னோக்கி நடந்தாள். அவளின் பின்னால் நூதனமான வாசனை அவன் நாசியைத் துளைத்து மனதை மயக்கி அவளைத் தொடர்ந்து சென்றது. அவளின் முதுகைப் பார்த்தபடி நின்றான். நடந்தபடியே அவனைத்திரும்பவும் திரும்பிப் பார்த்தாள். 'ஒருவேளை என் அபிமான ரசிகைகளில் ஒருத்தியாய்...?'

அவன் அவளைத் தொடர்ந்தான் அவள் நின்றாள். காலா காலம் அவனோடு சேர்ந்து பழகியவள் போல் முறுவலித்து அவனை நோக்கினாள். குசலம் விசாரித்தாள். ரீ சாப்பிடுவோமா என்று கேட்டாள்.

ஆனந்தபவானில் இருவரும் எதிரெதிரே இருந்து ரீ சாப்பிட்டனர். அவளின் கால்கள் இடைக்கிடை அவன் கால்களை வருடின. அப்பொழுதெல்லாம் அவள் அழகாகச் சிரித்தாள். அவளையேஇமை கொட்டாது பார்த்தபடி இருந்தான். அவனையே அங்குள்ளவர்கள் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

நீ...அவன் தடுமாறினான்.

அவள் சிரித்தாள். ''ரீகலில் படம் பார்ப்போமா? குழைவுடன் கேட்டாள். அப்பொழுதான் அவனுக்குப் புரிந்தது அவளை.

அவன் கண்களில் நெருப்பு.

* * *

இரவுமுழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. வாழ்வின் முதல் அனுபவம். மூட்டைப்பூச்சியாக உள்ளத்தைக் குடைந்தது. சீர்திருத்த வாதம் பேசும் அவனுக்கு ஏற்பட்ட முதல் அனுபவம்...? அவளின் அழகு முகம் அவன் கண்களில் தோன்றித் தோன்றி அழிந்தது. அவனின்உள்ளத்தை அவள் ஆட்சி செய்தாள். அவனால் அவளின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவளின் கவர்ச்சியான உடல், இயற்கையும் சேர்க்கையும் கலந்த கலவை அவன் உள்ளம் அவள் அழகை ரசித்தது. தீயின் செந்நாக்கு அதன் அழகு, கவர்ச்சி, அவளின் தீயின் கவர்ச்சியைக் கண்டான். அவள் தீ. அண்மினால் சுட்டுப் பொசுக்கிக்கருக்கிவிடும்.

எத்தனையோ விட்டிற் பூச்சிகள் தினம் தினம் தீ நாக்கின் சுவைப் பொருளாகின்றன. அது நினைவுக்கு வரும்பொழுது அவனுக்கு பயமாக இருந்தது. அவளின் அழகு அவனுக்கு அபினியாக அவன் அறிவை மயக்கியது.

தினம் தினம் இரவு அவளைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. தினம் தினம் இரவு 8 மணிக்கு அவள் அவனுக்காக பஸ் நிலையத்தில் காத்து நிற்பாள். நாளுக்கு ஓர் அலங்காரம். அவளின் குமிழ் சிரிப்பு அவனுக்குப்பனி நடுக்கத்தை, இடைக்கிடைகுதுகுதுப்பையும் கொடுத்தது. களைத்து சோர்ந்து தளர்ந்துவருபவனுக்கு அவளின் புதுப் புன்னகை புதுப் பலத்தை புது உற்சாகத்தை கொடுத்தது. தினம் தினம் இருவரும் எதிரெதிர் இருந்து ரீ சாப்பிடுவார்கள். அவள் அவனைப் பார்த்துச் சிரிப்பாள். அவன் முகத்தில் விழி பதித்து இருப்பாள். இப்பொழுது அவள் அவனைத் தொடுவதில்லை. காலால் வருடுவதில்லை. எவ்வளவோ ஆசையோடு அவனோடு கதைப்பாள். அவள் பேச்சு அவனுக்கு மதுரமாக இனிக்கும். ஒரு நாளாவது ரீ பணம் அவனைக் கொடுக்க அவள் விடவில்லை. அவளைப் பார்ப்பதை அவள் புன்னகையை ரசிப்பதை அவளுடன் சில நிமிடங்கள் பேசிக்கொண்டிருப்பதைத் தவிர அதற்கு மேலாக அவன் அவளிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவளும் அதை வற்புறுத்தவில்லை. அதனாலோ என்னவோ அவள் அவனோடு பழகத்

துடித்தாள். பழகினாள். நாட்கள் கரையப் பழக்கமும் வளர்ந்தது.

* * *

பிறந்த தினம் என் வீட்டுக்கு வாருங்கள் என்று வற்புறுத்தி அழைத்தாள். அவன் மறுத்தான் மன்றாடினாள். பிறிதொருநாள் வருவதாக வாக்களித்தான். அன்றே வரும்படி கெஞ்சினாள். அவனுக்கு அவளைப் பார்க்க, அவள் கோரிக்கையை மறுக்க முடியவில்லை. ராக்சி ஒன்று அவர்களை ஏற்றிக்கொண்டு பறந்தது. கொட்டாஞ்சேனையில் ஓர் ஒழுங்கைக்குள் சென்றது. இரவில் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. எங்கும் இருள். நகரசபை விளக்குகள் அழுது வடிந்துகொண்டிருந்தன.

ராக்சி நின்றது.

அவள் முன்னே சென்றாள். அவன் பின் தொடர்ந்தான். ஒரு ஓதாருக்குளால் நடந்தாள். அவன் காலில் கல் இடறி விழ இருந்தவன் அவளின் தோளைப் பிடித்துச் சமாளித்துக்கொண்டான்.

ஒரு மண்ணெண்ணை சிம்னி விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. ஒரு கிழவி கடைவாயிலில் கால் நீட்டி அரைத் தூக்கத்தில் இருந்தாள். அவனைக் கடந்து உள்ளே சென்றாள். அவன் பின் தொடர்ந்தான். ஒரு விசாலமான அறை. படுக்கை எல்லாம் அலங்காரமாக விரிக்கப்பட்டிருந்தது. மேசையில் ஊதுபத்தி கமகம என்று அறை எங்கும் ஒரே நமறுணம். அறைக்குள் அதிகமாக ஒன்றும்இல்லை. உடுப்புப்பெட்டி பகட்டான சில அலங்காரப் பொருட்கள் சில பட்டுப் புடவைகள் வெளியே கிடந்தன.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவன் அவளைப் பார்த்தான். அவள் அங்கு கிடந்த ஒற்றைநாற்காலியை எடுத்து போட்டாள். அவன் இருந்தான். அவள் புதுப் பலகாரங்களும் ஆவி பறக்கும் தேனீரும் எடுத்து வந்து ரீப்போவில் வைத்தாள்.

இரண்டையும் மாறி மாறிப் பார்த்தான். அவளின் பார்வை அவனை மன்றாடியது. இதையும் தீண்டமாட்டீர்களா என்று கேட்பதுபோல் இருந்தது.

அவன் அவைகளைத்தொடவில்லை. அவளையே பார்த்தபடி இருந்தான்.

சாப்பிடுங்கள் உன் கைபட்டதை நான் சாப்பிட முடியாது.

தீண்டத் தகாதவளா?

நெருங்கத் தகாதவள்.

அவள் அவனைப் பார்த்தாள் உதட்டில் புன்னகை இல்லை. கண்களில் கண்ணீர் முட்டி நின்றது.

எப்படித்தான் உனக்கு மனம் வந்தது? இப்படி உன் வாழ்வைத் திசை மாற்ற.

அவள் சிரித்தாள்.

நீ சமுதாய விரோதி.

அவள் சிரித்தாள்.

சீ நான் அயோக்கியன். உன்னைச் சுற்றித் திரிகிறேன். அவள் அவன் வாயை பொத்தினாள். அதை அவனும் எதிர்பார்க்கவில்லை. அவளும் எதிர்பார்க்கவில்லை. சட் என்று கையை எடுத்துக்கொண்டாள்.

அவளின் ஸ்பரிசம் அவன்உடலை ஒரு கணம் சில்லிடச் செய்தது.

* * *

''என் வாழ்வில் நான் தோல்வி காணாதவள். உங்களிடம்தான் நான் தோற்றேன். நீங்கள் எனக்கு அன்னியர் இல்லை. நீங்கள் யார் என்றே எனக்குத் தெரியாது இந்தப் பதினைந்து வருட காலத்தில் என் நெஞ்சம் உருகியது. அன்பாற் பாகாகியது இதுதான் எனக்கு முதல் அனுபவம். வாலிபத்தின் அழிவில் அன்பைப் பெற்றேன், அனுபவித்தேன். நீங்கள் வள்ளல். உங்கள் வள்ளண்மை உங்களுக்குத் தெரியாது.''

போதை தலைக்கேறியவள் போல் தூணைக் கட்டிப்பிடித்தபடி அவள் பேசிக்கொண்டே போனாள்.

அவன் சிலையாகக் கதிரையிற் சமைந்திருந்தான்.

''நான் உங்களிடம் பைத்தியமாகின்றேன். உங்களுக்கு முன்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. என்னை மறைக்க முடியவில்லை. நடிக்க முடியவில்லை.''

''ஆண்டு தோறுங் 'கலையருவி'யில் நாவற் போட்டி வைக்கின்றீர்கள். கடந்த நான்காண்டுகளாகத் தொடர்ந்துபரிசு பெற்ற நாவலாசிரியை 'விமலி'யை உங்களுக்குத் தெரியாது. ஆயிரமாயிரம் வாசகர்கள் அவளுக்கு இருக்கின்றார்கள். அவர்களுக்கும் அவளைத் தெரியாது.

தன் கதைகளில் பண்பையும் ஒழுக்கத்தையும் வற்புறுத்தும் விமலி நான்என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். நம்ப வேண்டாம்.

ஏன் விழிக்கின்றீர்கள் வாழ்வு வேறு எழுத்து வேறு மன எழுச்சி வேறு. நல்லவராக, ஒழுக்க சீலராக, பண்பாளராக வாழவேண்டும் என்ற விருப்பம் இருக்கலாம் மனப் பலவீனம், நரம்புத்தளர்ச்சி அவர்கள் ஆசையை அழித்து, அவர்கள் எதிர்பாராத வாழ்வையே கொடுத்துவிடும்.

பதினைந்து வயதுக்கு முந்திய வாழ்வைபற்றி எனக்குத் தெரியாது. எட்டாவது வயதில் வீட்டை விட்டு வெளியேறினேன். பசிக்கொடுமை காரணம். இப்

பொழுது என் பெற்றவர்களை எனக்குத் தெரியாது. பல வீடுகளில் எடுபிடி வேலைக்காரியாக இருந்து என் உடலை வளர்த்தேன் உடலில் வனப்பும் மினுமினுப்பும் போட்டிபோட்டு வளர என்னைக் கண்டு வீட்டு எசமானிகள் பயந்தார்கள். மூன்று நான்கு மாதங்களுக்குமேல் ஒரு வீட்டில். நிரந்தரங் கிடைக்கவில்லை.

தாய் அன்பு, சகோதர அன்பு, எசமான அன்பு,-எந்த அன்புணர்வும் இல்லாது உள்ளம் பாழ் வெளியாக இருந்தது.

பதினைந்தாவது வயதில் வெள்ளவத்தையில் ஒரு வீட்டில் வேலைக்கமர்ந்தேன். அது எக்கவுண்டனொருவரின் குடும்பம். அந்த அம்மா நல்லவள். அன்பு காட்டாவிட்டாலும் ஆதரித்தாள். கருணை நெஞ்சம். அவளுக்குமூன்று குழந்தைகள். மூத்தவர்சுதாகர், பதினாறு வயது இருக்கும். அடுத்தது உமா, ஒன்பதுவயதுச் சிறுமி. குமார் இருவயதுக் குழந்தை. குமாரைப் பராமரிப்பதுதான் என்பெரும் பங்கு வேலை சுதாகர் அதிகம் வீட்டில் இருக்க மாட்டார். பகலெல்லாம் படிப்புவிளையாட்டு என்று வெளியே அலைந்து இரவு எட்டு ஒன்பது மணிக்குத்தான் வீடு திரும்புவார் இரவில் நான்தான் அவருக்குச் சாப்பாடு எடுத்துவைக்க வேண்டும். மேசையிற் சாப்பாடுஇருக்க அவர் என்னையே பார்த்துக்கொண்டிருப்பார். கறி போடும்போது கையைப்பிடித்து இழுத்து...

அதை என்னால் ஆட்சேபிக்க முடியவில்லை. அது எனக்கு அவசியந் தேவையாக இருந்தது. நாட் செல்லச் செல்ல அவர் என்னில் எவ்வளவோ உரிமை கொண்டாடினார். அவர் எவ்வளவு உரிமை கொண்டாடினாலும் அவரால் என்னைத் திருப்திப் படுத்த முடியவில்லை. கடும் பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியாக இருந்தேன். ஒருநாளைக்கு அவர் என்னைச் சந்திக்காவிட்டால் துடித்துப் போவேன். அவரை நான் காதலித்ததில்லை. அந்த எண்ணமே எனக்கு ஏற்பட்டதில்லை. அவசியமற்ற கைகூடாத எண்ணங்களை மனதில் வளர்ப்பவளல்ல நான். ஒரு நாள் நானும் அவரும் சமையலறைக்குள் இருக்கும்போது அவரின் தாய் திடீரென்று வந்துவிட்டா. என்னையும் அவரையும் சேர்த்துப் பார்க்கும் போது...

அவர் என்னை அடிக்கவில்லை ஏசவில்லை ஆனால்...

''உனக்கு அழகும் இளமையும். அவனுக்கும் அப்படி, இருவரிலும் நான் தவறு சொல்ல முடியாது. என்னிற்தான் பிழை என் மகனில் எனக்கு இருந்த நம்பிக்கை நீ வெறும் வேலைக்காரி என்ற எண்ணம் இதனால் நான் தவறுவிட்டு விட்டேன். இனி நீ இங்கு இருந்தால் உனக்கும் நல்லதில்லை, அவன் வாழ்வும் பழுதுபட்டுவிடும். இந்தா இதில் நூறு ரூபா இருக்குச் செலவுக்கு எங்காவது போய்விடு.''

அவரைப் பிரிவது கஷ்டமாகத்தான் இருந்தது. காதலால் அல்ல அவர் எனக்குத் தேவையாக இருந்ததால்.

அதற்குப்பின் அடுத்தடுத்துச் சிலவீடுகள். அங்குள்ள ஆண்களும் சுதாகரைப்போலவே இருந்தார்கள். ஒரு வித்தியாசம் சுதாகர் வாலிபன் மாணவர், இவர்கள் மணமானவர்கள், மனைவியோடு வாழ்பவர்கள்.

அவர்கள் என்னோடு உறவாட விரும்பினார்கள். எனக்கும் அவர்களை வேண்டி இருந்தது. அவர்களாற்கூட என்னைப் பூரணப்படுத்த முடியவில்லை. ஒரு வீட்டில் என்னால் இரண்டு மூன்று மாதங்களுக்குமேல் நிலைக்கமுடியவில்லை.

அந்த நேரத்திற்தான் இந்த ஆயாவைச் சந்தித்தேன்.

அவள் எனக்குப் பாதை காட்டினாள். நீ வயிறு வளர்க்க வேலைக்கு அலைய வேண்டாம். உன்னைத் தேடிப் பணம் வர, நீ விரும்பும் திருப்திகிடைக்க, வசதிகள்பெருக வழி செய்வதாகக் கூறினாள் நானுஞ்சம்மதித்தேன் இந்தவீட்டைப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு- எனது பதினாறுவது வயதில் வாடகைக்கு எடுத்தோம். இங்கு குடிவந்ததும் அவள் இந்த அறையை அலங்கரித்தாள். அந்த இரவே என் தொழில் தொடங்கியது. பரிபூரண விருப்பத்துடன் என் தொழிலில் முழு மனதுடன் ஈடுபட்டேன். ஒவ்வொரு நாளுந் தொழில் முடிவிற் களைத்துச் சோர்ந்துவிடுவேன். ஆனாலும் பூரண திருப்தி கிடைக்கவே இல்லை. பணம் பெருகியது எனக்கும் ஏக கிராக்கி. தினம் புதுப்புது மனிதர்கள் என்னைத் தேடிவந்தார்கள். புதுப்புது மனிதர்கள் புதுப்புது மனப்போக்கு, ஆசை வெறி, உட துடிப்புக்கொண்டவர்கள் எல்லாரையும் தனித்து நின்று திருப்திப் படுத்தினேன், மகிழ்வூட்டினேன். அவர்களால் என்னை மகிழ்வூட்டித் திருப்திப் படுத்த முடியவே இல்லை.

இடைக்கிடை சுதாகர் என்னைத் தேடி வருவார். அவர் வந்தால் என் மனம் குதூகலப்படும். அவர் ஆசைகளுக்கு நான் மறுப்புத் தெரிவிக்க மாட்டேன். அவருக்கு விசித்திரமான ஆசைகள். அவர் திருப்திக்காக ஆனந்தத்துக்காக நான் எவ்வளவோ மரணவேதனைகளை அனுபவித்தேன். அவரின் கைச் செலவுக்குக் கணக்கின்றிக் கொடுப்பேன் அவரை நினைத்தால் என் மனம் இப்பவும் குதூகலமடையும்.

பகற் போதெல்லாம் எனக்கு அவமாகப் போனது. வீட்டைவிட்டு வெளியே செல்ல விருப்பம் இருந்தும் ஆயா தடுத்துவிட்டாள் வெளியே சென்றால் எம் மதிப்புக்

குறைந்து விடுமாம் தொழிலைப் பாதித்துவிடுமாம்.

நித்திரை கொள்வதைத் தவிர வேறு வேலை இல்லை. எவ்வளவு நாளைக்குச் சோம்பி இருப்பது பொழுது போக்காகப் புத்தகம் படிக்கத் தொடங்கிய எனக்கு படிப்பு வெறியாக மாறியது. பல ரூபாக்களுக்கு புத்தகங்கள் வாங்கிப் படித்தேன்.

என் தொழிலின் ஈனம், புத்தகங்களைப் படிக்கப் படிக்க எனக்கே நான் அருவருப்பாகபட்டேன் 'நான் சமுதாய விரோதி' என்று என்னையே நான் பழித்துக்கொண்டேன் ஆனாலும் என்னால் என்னை மாற்றிக்கொள்ள முடியவில்லை.

படிக்கப் படிக்க எழுத வேண்டும் என்ற உணர்ச்சி வெறியாகப் பீறிட்டது. என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை. என் தொழிலின் சீரழிவை, ஒழுக்கத்தின் உயர்வை, பண்பின் அவசியத்தை என் சொந்த அனுபவங்களைக் கொண்டு எழுதினேன். என் எழுத்துக்களுக்கு உங்கள் 'கலை அருவி' இடம் கொடுத்தது. என் படைப்புக்கள் சமுதாயத்திற்கு வரப்பிரசாதமாக இருந்தது. பாராட்டுக்களும், புகழுரைகளும், பரிசுகளும் குவிந்தன.

ஆனால் ஊருக்கு உபதேசஞ் செய்தநான் என்வாழ்வை மாற்ற முடியவில்லை. என் வாழ்வில் மாற்றம் இல்லை. ஒரு மாதத்திற்குமுன்பும் என் தொழிலில் எனக்குச் சலிப்புத் தட்டவில்லை. என்தொழிலில் எனக்கு இன்னமுங் கிராக்கி இருக்கின்றது. இனியாவது நினைத்தால் நான் நாளைக்கே கௌரவமாக வாழமுடியும் அதற்குரிய சகல வசதிகளும் நிறைந்து இருக்கின்றது. கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் எதற்கு எனக்கு?

பத்துவருடங்களுக்கு முன்பு உங்களை நான் சந்தித்திருந்தால்...?

உங்களில் என்ன இருக்கின்றது? உங்களுக்குமுன் நான் ஏன் என்னை இழக்கின்றேன்.

நீங்கள் மந்திரவாதியா? என் இல்லம் வந்தவர்கள் என்னை எவ்வளவு இம்சைப்படுத்தியிருப்பார்கள், சுய திருப்த்திக்காக.

நீங்கள் மட்டும்? நீங்கள் எனக்கு குரு.

இனி நான் இந்த நகரத்தில் இருக்க மாட்டேன். உங்களைச் சந்திக்கமாட்டேன். எனக்குத் தெரியும் என் சந்திப்பால் உங்கள் வாழ்வு பாழாகின்றது. உங்களுக்குச் சமுதாயத்தில்இருக்கும் மதிப்பு மங்குகின்றது என்றால் பனைக்குக் கீழ் இருந்து பால் குடித்தாலும் குடிகாரப் பட்டந்தான் கிடைக்கும். ஆனால் உங்கள் நினைவை, உருவை, நட்பை என்னால் மறக்க முடியாது; இழக்கமாட்டேன். இந்த நகரத்தில் இருந்தால் உங்களுக்கு நிம்மதி இருக்காது நான் போய்விடுகின்றேன். அதற்காகத்தான் உங்களை அழைத்தேன் என் கடைசி ஆசை இதை அழிக்காதீர்கள்.

அவள் கண்களிற் திரண்டிருந்த கண்ணீரைப் பார்த்தபடியே தேனீர் கிளாசைக் கையில் எடுத்தான் தேனீர் அவலாகஇருந்தது. கண்ணீரின் இடையே அவள் முகத்தில் மலர்ச்சி உதட்டில் புன்னகை அவனில் கால்களைத் தொட்க்டு கண்களின் ஒற்றிக்கொண்டாள் அதை அவனால் தடுக்க முடியவில்லை.

அதன்பின் அவளை அவன் காணவில்லை. அவனைப் பொறுத்தவரை அவள் இறந்தவள் அவளைக் கடைசியாகச் சந்தித்து ஐந்து வருடங்களாகின்றன. அவள் நினைவு அவனைப் பிரமையாக்கி அலைத்தது. பேயாக அலைந்தான் அவன் சாந்தியைச் சந்திக்கும்வரை அவன் மனதில் அமைதி இல்லை. சாந்தி சந்தித்திராவிட்டால் அவன் வாழ்வு? அவன் வாழ்வைக் கண்டிருக்க மாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கட்டுரை:

இயக்கமும் இலக்கியமும்

கா. சிவத்தம்பி

வேட்டுவ நிலையில் மிருகங்களைக் கொன்று தின்ற மக்கள், மிருகங்களை வளர்ப்பதன் மூலம் கடினமற்ற வாழ்வை நடத்த முடியுமென்பதைக் காலக் கிரமத்தில் உணர்ந்தனர் என்பது வரலாறுப் பொது விதி. சுயமாக உணவை உற்பத்தி செய்யாது காட்டிற் காணப்பட்ட உணவுகளைத் தாமே உற்பத்தி செய்யும் பொழுது விவசாயிகளாக மாறுகின்றனர். மிருகவேட்டை நிலையிலிருந்து மிருக வளர்ப்புக்குமாறுவதுடன் இணைந்தே இம்மாற்றம் வரும். இம்மாற்றம் தான் முல்லை நிலநாகரிகம் எனத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறுகின்றது. மேல் நிலை வேட்டுவ வாழ்வினைத் தொடர்ந்து வருவது ஆயர் நிலை வாழ்வு அந்த ஆயர் நிலையிலும் இரு நிலைகள் உள என்பர்.

முதல்நிலை- காட்டுமிருகங்களை வீட்டு மிருகங்களாக மாற்றல்

இரண்டாவது நிலை- மிருகங்களைப் பிடித்து வளர்த்தல் சிறிதளவு விவசாயம்

முல்லைக்குரியகருப்பொருட்களைகப் பார்க்கும் பொழுது ஆயர் நிலை வாழ்வின் இரண்டாம் நிலைக்குரியதுஎன்பதுபுலனாகின்றது. காட்டு மிருகங்களைப் பிடித்து அவற்றை நன்குபழக்குவதாகும் இரைதேடுவதும் அதற்காக அவற்றை மேய்ச்சல் நிலங்கட்குஇட்டுச்செல்வதும்ஆண்களின் தொழிலாகும். முல்லைத்திணையில் இதனைநாம்காணலாம் முல்லைத்திணையில்காணப்படும் விவசாயம்முக்கியமானது. முல்லை நிலநாகரிகத்தில் கிழங்கு அகழ்தல் கைவிடப்பட்டுத்தானிய விவசாயம் தோன்றும் என்று அறிஞர் கூறுவர். இதனை நாம் முல்லைக்குரிய கருப்பொருட் தொகுப்பிலா காணலாம். பயிர்ச் செய்கைக்காகக் கோவலர் காட்டையழித்துக்கட்டைகளைக் கொழுத்துவது பற்றியும் கொல்லை கொல்லையாக விவசாயம் செய்வது பற்றியும், சிறு பயிர்கள் பேணி வளர்க்கப்படுவது பற்றியும், கலப்பை கொண்டு உழுது பயிரிடுதல் பற்றியும், சங்க இலக்கியங்களின் குறிப்புக்கள் காணப்படுகின்றன. மருதநில நாகரிகத்தின் ஆணிவேராக அமையும் நெற் பயிர்ச் செய்கை முல்லையிற் தொடங்குகின்றது. கொல்லைகளாகத் தொடங்கிய விவசாயம் பழனங்களாக விரிகின்ற பொழுது, சொத்துடைமை யடிப்படையில் ஆட்சி தோன்றுகின்றது.

இந்தச் சமுதாயத்தில் ஆண்கள் தாம் வாழும் சிறு குடிப்பாக்கத்திற்கு வெளியே போக வேண்டியவர்களாகின்றனர். முதலில் மிருகங்களைப் பிடிப்பதற்கும், பின்னர் விவசாயம் முன்னேறிய நிலையில், ஊர்ப்புறக் காவலுக்கும் செல்வர். முல்லைத் திணைப்பாடல்கள் பெரும்பாலும், வேந்தன் காரியம் முடித்து வரும் தலைவர் கூற்றாக அமைவதை அவதானிக்கவும்.

இவ்வாறு ஆண்கள் பிரிந்து சென்ற காலங்களில், பெண்கள் அவ்வப்பகுதிகளிலே தங்குவர். ஆண்கள் மிருகம் பிடித்தல், ஊர்க்காவலாகிய கடின வேலைகளில் ஈடுபடும்பொழுது, இல்லத்தில் தங்கியிருந்து மட்பாண்டம் வனைவர், பெட்டி கடகம் செய்வர், சிறு மண்வெட்டிகொண்டும் களைக்கொட்டுக் கொண்டும் பயிரிடுவர். பெண்களே முதன் முதலில் விவசாயிகளாக இருந்தனர். அந்த அடிப்படையிலேயே சில இந்தியக்குடிகளிடையே தாய்வழிமை நிலவுகின்றது. மாடு பூட்டிய கலப்பை வந்த பிறகே, விவசாயம் ஆணின் விவகாரமாக மாறிற்று. முல்லை நிலப் பொருளாதார அமைப்பின் தோற்றத்திற்கும், ஆரம்பகால வளர்ச்சிக்கும்பெண்களே காரணகர்த்தராக விளங்கினர். அதனால் இந்நில நாகரிகத்திற்குப் பெண்கள் 'இருத்தல்' அவசியமாகின்றது. ஆரம்பத்தில் அவ்வாறிருந்த பெண்கள், சொத்துரிமை வளர்ச்சியின் பின்னரும், அரசியல் வளர்ச்சியின் பின்னரும் பெண்கள் இல்லில் இருந்து, மிருகங்களைப் பராமரித்தனர், ஏவலாளர்களைக் கட்டுப்படுத்தினர். மேலும் சொத்துரிமை வளரும் பொழுது, குடும்பத்தை ஓம்புதல் முக்கியமான ஒரு பொருளாதார நடவடிக்கையாகும். சொத்துரிமை, குடும்பம் முதலியன வளரும் பொழுது ஏகதார வழக்கம் தோன்றும். பிறக்கும் குழந்தைகள் ஒரே கணவன் மனைவியருடையதாகவே இல்லாதிருக்குமானால் சொத்துரிமைப்பிரச்சினைஏற்படும். எனவே தனிமனித சொத்துரிமைக்குப் பெண்ணின் கற்பு முக்கியமானது. இன்னும் வருடத்திற் பெரும்பகுதி ஊருக்கு வெளியிலேயே ஆண்கள் தமது காலத்தைக் கழிக்கவேண்டியிருந்தமையால், பெண்களது கற்பு நிலையை வலியுறுத்த வேண்டிய தேவையுமிருந்தது. எனவேதான் முல்லைசான்ற கற்பாயிற்று.

அடுத்து மருதத்தினைப் பார்ப்போம்.

மருதத்தினை விளக்கும் பொழுது 'வயலும் வயல் சார்ந்த இடமும்' என்று கூறுவார்கள்.

தானிய உற்பத்தி முறைமை பெரிதாக வளர்ந்து நின்ற காலம் மருத நில நாகரிகக் காலம். விவசாயம் வளர்ந்ததின் காரணத்தினால் சொத்துரிமையும் வளர்ந்து விடுகின்றது. நிலக்கிழார் எனும் பட்டமும் வந்து சேர்ந்து விடுகின்றது. உற்பத்தி முறைகள் மாறி, முற்றிலும் ஆண் அதிகாரமுடைய ஒரு சமுதாயமாகவே மருதம் காட்சியளிக்கின்றது. கலப்பை கொண்டுழவு செய்தும், பலபேர்களை வைத்து வேலை செய்வித்தும் தனது செல்வத்தைப் பெருக்குகின்றார். முல்லையில் தொடங்கிய சொத்துரிமை இங்கு பெரிதாக வளருகின்றது. இது காலவரை பிரயோகத்திலில்லாத உற்பத்தி முறைகள் கையாளப்பட்டபடியால், வருமானம் கூடுகின்றது. அதனால் இலாபம் ஏற்படுகின்றது செலவழிக்கப்படாத ஒருதொகை நிலக்கிழாரிடத்து வளர்கின்றது. இதன் காரணமாகப் பணக்காரர், ஏழை என்ற பிரிவு உண்டாகின்றது. நிலவுடைமை ஆட்சி நிறுவப்படுகின்றது. இந்த அடிப்படையில்தான் வேள்மான் முதலிய மருத நில அரசர்கள் தோன்றியிருப்பார்கள். இந்தச் செல்வங் கொழிக்கும் சூழ்நிலையிற் தான் அரசனே தோன்றுகின்றான் என்பதை முன்னர் பார்த்தோம்.

இந்த மருத நில நாகரிகத்திற் தான் வேறு பல முக்கியமான மாற்றங்களையும் நாம் காண்கின்றோம். அவற்றுள் முக்கியமானது பெண்ணின் நிலையில் ஏற்படும் மாற்றமே. குறிஞ்சி, முல்லை நாகரிகங்களில் பொருளாதார முக்கியத்துவம்நிறைந்த தொழில்களையாற்றிக் குடும்ப முன்னேற்றத்திற்கும், சமூக வாழ்விற்கும் கடமையாற்றி வந்த பெண், முற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலும் மாறிய பொருளாதார அமைப்புக் கொண்ட மருதத்தில் வெறுமனே வீட்டுப் பெண்ணாக, முன்பிருந்த உரிமைகளற்றவளாக வீட்டோடு அடைபட்டுக் கிடக்கின்றாள். புதிதாகத் தோன்றிய உற்பத்தி முறைகளைச் சொல்வதற்கு வேண்டிய பண்பும் பலமும் அற்றவர்களாக விளங்கியமையாலே தான் இம்மாற்றம் ஏற்படுகின்றது. சமுதாயத்தின் இருப்புகளிலும் நிலமுடையோர், நிலமற்றோர், இம்மாற்றம்காணப்பட்டது. இதனாலே தான் மருதத்தில் தலைவனின் தயவில் வாழ்பவளாகக் காணப்படுகின்றாள். கணவன் பரத்தையர் வீடு சென்று திரும்ப அதற்காக ஊடுவான் என்று விரிப்பர்.

பரத்தையர் என்ற புதியதொரு 'இனமும்' மருதநில நாகரிகத்தில் தான் தோன்றுகின்றது. மருதநிலத் தலைவனின் போகப் பொருளாக விளங்கியவர்களே இம்மாதர்கள். மகப்பேறு, பிள்ளை வளர்ப்புப் போன்ற சமுதாய நல காரியங்களுக்கு அத்தியாவசியமாக இருந்த பெண், செய்து வந்த அந்தக் கடமைகளுக்காகப் போற்றப்பட்ட பெண் மருதத்தில், நிலவுடைமையாட்சியில் போகப் பொருளாக மாறுகிறாள். கலைஞர்கள் கூட்டத்திலேயே இம்மாற்றம் முதன்முதலில் ஏற்பட்டது. பூர்வீக சமுதாயஅமைப்பில்தனது பாடல்களால் மக்களை மகிழ்வித்து வந்த பாணனது நிலைமை படிப்படியாகக் குறைந்து வருவதை நாம் சங்க இலக்கியங்களிற்காணலாம். சமுதாய அமைப்புமான இவர்கள் வீரன் புகழைப் பாடுபவர்களாகவும், அரசன் புகழைப் பாடுபவர்களாகவும் மாறுகின்றனர். மக்கள் கவிகளாக மக்களுடன் வாழ்ந்த இவர்கள் வீரரைப் புகழ்பவராக மாறுவதைத் தமிழ் நாட்டுப் பாணர் வரலாற்றில் மாத்திரமல்லாது, கிரேக்க நாட்டுப் பாணர்கள் வரலாற்றிலும், இரஷ்ய நாட்டுப் பாணர்கள் வரலாற்றிலும் நாம் காண்கின்றோம். மருதநில நாகரிகத்தில், பாணர் விறலியர், முக்கியத்துவம் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

புதிதாகத் தோன்றிய சமுதாய அமைப்பில் இவர்கள் இடமற்றுத் தவித்தனர். சமுதாய உறவில், அன்றாட வர்ழ்வில் முக்கிய இடம்பெற்ற கலை இப்பொழுது அந்த நிலையிலிருந்து விடுபட்டது. பொருளும், பொழுதுமுடையவர்களே இவற்றிலீடுபட முடிந்தது, எனவே நிலங்கள் பலவற்றைச் சொந்தமாகவுடையவனே இந்த மகிழ்ச்சிக் கருமங்களில் ஈடுபட முடிந்தது. கலையின் பண்பும் பயனும் மாறுகின்றது; கலையின் ரசனை மாறியது போலவே, கலையையுடையவளும் போகப்பொருளானாள். குலமாது, விலைமாது என்ற வித்தியாசமேற்படுவதற்கான அடிப்படைக் காரணம் இதுவே. வீட்டுப் பெண் வேறு, தலை தெரிந்த விறலி வேறு, இருவரும் பெண்களே எனினும் ஒருத்தி கணவனுக்கு அடிமைப்பட்டவளாக இருக்க வேண்டும், மற்றவள் விவாகபந்த மற்றவளாய் வருபவரை உபசரிக்க வேண்டுமென்றும் வழக்கங்கள் தோன்றின. ஒரு திட்ட வட்டமான சமுக அமைப்பில் வாழும் கலைஞர்கள், அவ்வமைப்பு மாறும் பொழுது பெரும் இன்னல் அடைவர் என்பதற்குப் பிற்காலக் கோயில்முறையழிந்த பின்னர் தேவதாசிகள், ஊர்வேசிகளாக மாறியதும் நல்ல உதாரணமாகும்? மருதநிலத் தலைவனுக்கு மகிழ்நன் என்பது பெயர், இதுவே அந்த வாழ்வை எமக்குக் காட்டிவிடுகின்றது. எனவே ஊடல்என்பது மருதத்தின் பண்பு மாத்திரமல்ல, தவிர்க்க முடியாத நியதியென்பதையும் நாம் காணலாம்.

மக்களிடையேயிருந்து தோன்றிய நிலக்கிழான் (கிழான்-உரிமையுடையவன்) தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குப் பல வழிகளைக் கையாண்டு தனது கட்சியை நிறுவுகின்றான். இது நிலப்பிரபுத்துவ ஆட்சியில் காணப்படும் பண்பு. ஐரோப்பிய வரலாற்றில் மாத்திரமல்ல தமிழ்நாட்டின் வரலாற்றிலும் இது தெரியக் கிடக்கின்றது.

மருதம் எனும் மரம் இன்றும் நீர்வளமுள்ள பகுதிகளில் வளருவதை நாம் காணலாம். பண்டைத் தமிழ் நாட்டில் நெற்செய்கை செழித்தோங்கிய இடங்களிலொன்றான, தாமிரவருணி நதிக்கருகே இன்றும் இம்மரங்கள் காணப்படுகின்றன. வயற் செய்கைக்கு வாய்ப்பான நிலத்தில் வளர்ந்த மரம், வயற் செய்கையையே குறித்து நின்றது எனவே மருதம் ஆகுபெயர் மற்றவையும் இவ்வாறே.

கடலையும், கடல் சார்ந்தஇடங்களையும் கொண்ட நெய்தல், தமிழ்நாட்டு வாழ்விலும், வரலாற்றிலும் மிக முக்கியம் பெறுகின்ற ஒரு பிரதேசமாகும். தமிழ் நாட்டுக் கடற்கரையோரத்தில்—நெய்தலில், இரு முக்கிய பிரிவுகள் காணப்பட்டதை நாம் அவதானிக்க வேண்டும். கடற்கரைக் கருகே வாழ்ந்து, கடலில் மீன் பிடித்து வாழ்ந்து வந்த மக்கள் ஒரு சாரார். கடல் வழி சென்று வணிகம் செய்தவர் இன்னொரு சாரார். உடுக்க நல்லஆடையற்ற குழந்தைகள் விளையாடிக் கொண்டு நிற்கும் உப்பங்கழியும் நெய்தல் தான். உரோமாபுரியிலிருந்து வந்த பொன்னும் பணமும் இறங்கிய துறைமுகமும் நெய்தல் தான். இந்தப் பொருளாதார வேறுபாட்டைப் பட்டினப் பாலையில் நாம் நன்கு காணலாம். ஆனால் தமிழ் நாட்டு வாழ்க்கையைக் காட்டிய இலக்கியங்களைக் கொண்டு பொருளிலக்கணம் வகுத்த சான்றோர், நெய்தல் வாழ்வு எனும் பொழுது கடலை நம்பி வாழும் மீனவர் வாழ்க்கையையே குறித்துள்ளனர் என்பதை நெய்தற் கருப்பொருள் காட்டுகின்றது. நாட்டின் உட்பகுதியிலேற்படும் மாற்றங்கள், நெய்தல் நிலத்தில் காணப்படும் அந்த வாழ்வைப் பெரிதும் பாதியா. அன்றிருந்த அறிவு நிலை கொண்டும் பொருள் நிலை கொண்டும் பார்க்கும் பொழுது அவர்கள் வாழ்வு பின்தங்கியதாகவே யிருப்பது தெரிகின்றது. மீனை விற்றும், உப்பை விற்றுமே மக்கள் வாழ்ந்து வந்தனர். மற்றெந்தத் தொழிலும் அதிகம் காண முடியாத நித்திய அபாயம் அவர்கள் தொழிலில் உண்டு. அந்தச் சமுகத்தில் ஆண் முக்கியமானவன். அவன் பலம் கொண்டு, கொண்டு வருவதைத் தான் பெண்விற்கின்றாள். எனவே அந்நில வாழ்வில் 'இரங்கல்' தோன்றுமென்பதற்கு நீண்ட விளக்கம் அவசியமில்லை.

ஆனால் நெய்தலின் மற்றொரு துறையான வணிகம் மிக முக்கியமானது. தமிழ் நாட்டினர் கிரேக்க உரோம நாடுகளுடன் தொடர்வுபடுத்தி, உலகத்திற் தோன்றிய முதல் தேசப் படத்திலேயே தமிழ் நாட்டிற்கு முக்கிய இடந் தேடித் தந்தது இந்த வணிகமே. முசிறி, புகார், கொற்கை, தொண்டி முக்கியமான துறைமுகங்கள். நாம் இதுவரை பார்த்த வாழ்வின் பண்புகளிலிருந்து வேறுபட்ட ஒரு வாழ்வு முறையைத் தமிழ் நாட்டிற்குள் புகுத்திய வாயில்கள் இவை. உள்நாட்டுப் பொருளாதார வாழ்வில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியிருக்கக் கூடிய பொன்னையும் பொருளையும் குவித்திருந்த பகுதிகள் இவை. பண்டைய பிற நாட்டு வணிகம். தமிழ்நாட்டுப் பொருளியல் வாழ்வில் ஏற்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய மாற்றத்தினை ஆராய்தலவசியம். இக்கண்ணேட்டங் கொண்டு இதுவரை பேராராய்ச்சிகள்நடத்தப்படவில்லையே. திணைமயக்கம் எனத் தொல்காப்பியர் கூறும் பண்பு (ஒரு நிலத்தில் நடக்க வேண்டிய ஒழுக்கங்கள் இன்னெரு நிலத்தில் நடத்தல்) துறைமுகத்தைச் சார்ந்த பகுதிகளிலேயே தோன்றியிருக்க வேண்டும். மேலும் வணிகம் காரணமாகவே பொருளாதார வளர்ச்சி ஒருமுகப்படுத்தப்படும். அந்த வகையிலும் இந்த வணிகத்துறை பெரும் தொண்டாற்றியுள்ளது. தமிழ்நாட்டு அரசியல் வாழ்வில் மாற்றங்களேற்பட்ட காலத்தும் வணிகத்துறை பொன்ருத் துணையாக விருந்திருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக. அடுத்தடுத்த காலப்பிரிவுகளில் அகத்திணை எனப் பகுக்கப்பட்ட பகுதியில் இவ்வளர்ச்சியினைக் கண்ட நாம் புறத்திணையிலும் அதனைக் காண முடியும்.

இலங்கையர்கோன் நினைவு

நாடகப் போட்டி

பரிசு தங்கப் பதக்கம்

அமரர் இலங்கையர்கோன் நினைவாக நடாத்தப்படவிருந்த சிறுகதைப் போட்டியை கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கம் மிகவும் விரிவான முறையில் நடாத்துவதற்கு விசேட ஒழுங்குகள் செய்திருப்பதால், நாடகப் போட்டியாக நடாத்துவதென தேனருவி முடிவு செய்துள்ளது. ஆகவே குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இப்போட்டியிற் பங்கு பற்றி ஒத்துழைக்குமாறு எழுத்தாள அன்பர்கள் அனைவரும் வேண்டிக் கொள்ளப்படுகின்ருர்கள்

நிபந்தனைகள்:-

1. ஒருவர் எத்தனை நாடகங்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். நாடகம் தழுவலாகவோ, மொழிபெயர்ப்பாகவோ இல்லாது சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.

2. நாடகம் காட்சிகள் குறைந்ததாகவும், இரண்டரை மணித்தியாலங்கள் மேடையில் நடித்துக் காண்பிக்கக் கூடியதாகவும் — நடிகர்களின் எண்ணிக்கை குறைந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

3. நாடகம் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி 15—12—62.

3. நாடகம் அனுப்ப வேண்டிய முகவரி.

ஆசிரியர், "தேனருவி"
31/3 ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு—6.

கவிதை பிறந்த கதை—5

- இ. நாகராஜன் -

''கவிதையது பிறந்திட்ட கதையை இங்கு
கழறிடுக!' என்றெனக்குக் கடிதம் மூன்றைச்
சுவையாக எழுதியுள்ளீர், தொடர்ந்து மக்குச்
சோதனையைத் தருதலழ கல்ல, நிற்க...
எவைகவிதை இயற்றுதற்கு ஏது? என்று
எண்ணுகின்றேன் காலத்தில் பதினைந் தாண்டு
குவையாகக் கூடிற்றுக்-கழிந்த பின்பும்
குன்ருத நினைவுக்குச் சாவும் உண்டோ?

* * *

மார்கழி மாதக் கடுங்குளிர் வையக
மக்கள் உறங்கு நிசிவேளை
கூரை அழிந்த குடிசையின் வாசலில்
கூனல் விழுந்த குறைநிலவில்
பேரறி யேனெரு பேய்நிழல் ஒப்பிடப்
பெருகிய வேதனை உருகிவர
யாரையோ அவளெதிர் நோக்கு கிருளதை
நானறி யேன்கதை ஏதறியேன்!

''பசிபசி!'' என்றெரு பாலனின் குரலது
பளிச்சென ஒலிக்கத் திரும்பிடவே
''நிசியினில் தொல்லையா? போய்ப்படடா!''வென
நேர்மை யிலாவகை திட்டுகிருள்
''பசிபசி'' யெனுமொலி அடங்கின தோ;வவன்
படுத்தன ணுஉடல் முடக்கினனே?
விசையுடன் முதுகினில் விறுவிறு எனஅறை
விழுந்தது வோ;பறை முழங்கியதோ?

''அப்பனைக் கேளடா தப்பிலி நா''யென
அதட்டு கிருளவள் மிரட்டுகிருள்
''இப்ப பசிக்குது'' என்னுகி ருன்பயல்
ஏச்சொ டடியது மிஞ்சுகுது;
எப்படி ஆகிய தோவவன் சத்தமே
என்செவி தன்னதில் எட்டவில்லை;
கப்பிய பசியுடன் வேதனை காட்டிய
கண்ணிய மற்றிடு காரியத்தை—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றனன் எண்ணினன்; நெஞ்சிடை மண்ணதில்
நிறைந்திருப் போர்பல பசித்தவரா?
இன்றல என்றுமே இந்நிலை ஓங்கியே
இன்னலே துன்னி இருந்துவிடில்,
என்று பசித்தவர் இலாதொழி வர்?புவி
ஏற்ற இறக்கம் ஒழிந்திடுமா?
ஒன்றலக்-கோடி வினாவும் எழுந்தது
ஒன்றி உளத்தினில் ஊன்றியதே!

மாடதா? மனிதனா? என்ன நிலையிதோ?
மண்ணதை மேடையாய்க் கொண்டவனா?
பாடுகிறான், மரம்சாடுகி றான்,அவன்
பள்ளமும் மேடதும் பார்த்தறியான்,
ஆடு கிறானவன், மரங்களை மக்களாய்
ஆக்கு கிறான்,பல கேட்குகிறான்
வீடெது? எதையவன் நாடி நடக்கிறான்?
மெள்ள அவனையே பரார்த்தனனே!

கூரையி லாதவக் குடிசையின் வாசலைக்
குறியெனக் கொண்டவன் ஏகுகிறான்;
யாரை யவள்எதிர் பார்த்த னளோபசி
ஆற்றக் குழந்தையைத் தேற்றினளோ?
சீரறி யாதவித் தப்பிலி கூலியை
தீய்த்துக் குடித்துச் சீரழித்துப்—
பாரறி யாதவிவ் வேளை நடக்கிறான்
பார்த்திருப் போர்பசி தீர்ந்திடுமோ?

''அப்பன் வருவனாம், அவன்தரு வானெனக்
கான உண''வென ஆற்றினளோ...?
அப்பனா? அன்றி அடவியின் மாவிதா?
அறிவு திறம்பிய பேயிதுவா?
எப்படி வாழுவாள்? மைந்தனைப் பேணுவாள்?
என்ன உலகமோ? மனிதர்களோ?
கப்பிய வேதனை உப்பிப் பருத்திடக்
காத்திர மாங்கரு ஆக்கியதோ?

ஓசை நிரப்பியோ, கவிக்குயர் வானதாம்
உத்திகள் ஏதெதோ அன்றறியேன்
'தூசெ'ன வாகிய வாழ்வினில் குத்திய
துன்ப அனுபவ முள்ளதனால்
காசினி மீதினில் யான்கவி பாடிட
கண்ட கருவுருக் கொண்டதனால்
தேசு மிளிர்ந்திடு செந்தமிழ் ஊறிடத்
தீங்கவி பாடினன் தேர்ந்திடுவீர்!

பங்கம்

எஸ். பொன்னுத்துரை

திருவாளர் சிவக்கொழுந்து கட்டிலில் படுத்திருந்தார். அதே அறையில், திருமதி புனிதம் சிவக்கொழுந்து தரையில் விரிக்கப்பட்டிருந்த பனையோலைப் பாயில் சயனித்தாள்.

அவர் உத்தரதேவியில் ஊர் திரும்பியவர். இரவு பதினொரு மணிக்குத்தான் உத்தரதேவி யாழ்ப்பாணம் வந்தது. மூக்கு முட்டிய 'கலை'. வீட்டில் விரதம். சாப்பாடும் கிட்டவில்லை. பிரயாண அசதியுடன், வெறும் வயிறாக, கால்களைக் கட்டிலின் சட்டங்களில் எறிந்து எறிந்து 'அலட்டி'க்கொண்டு படுத்திருந்த சிவக்கொழுந்து கண்களை விழித்தார்.

தாவணிப் போர்வைக்குள் சரக்கூட்டையாகச் சுருண்டு கிடக்கும் மனைவியைப் பார்த்தார்.

'எணேய்!'

'...ம்...' மறுபக்கம் புரண்டாள்

'என்னணை புதுநாணயமா நித்திரை கொள்ளுறாய். விடிஞ்சல்லை போச்சு.'

திருமதி சிவக்கொழுந்துவின் செவிகளில் அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் விழுந்தன. கோடிப்புறமிருக்கும் நாவல் மரத்தில் 'அடை'யும் கோழிகள் கூவியதும் அவளுக்குக் கேட்டது. அந்நேரத்திலேயே துயிலெழுந்து, தன் வீட்டு அலுவல்களைச் சுறுசுறுப்பாகக் கவனிப்பது அவளுடைய வழக்கம். இன்று அவளால் எழுந்திருக்க இயலவில்லை. தேகமெல்லாம் பச்சைப் புண்ணாக நோகும் அலுப்பு. அவருடைய குரல் காதில் விழுந்த பின்னர், 'சீ, மூதேவி வாலாயம் கூடாது' என்ற எண்ணம் உதித்தது.

''ஓமப்பா நித்திரை சரியா அமத்திப் போட்டுது'' என்று சமாதானம் கூறியவாறு எழுந்து, சேலையைச் சரிசெய்தாள். அவர் தலைமாட்டில் கிடந்ந லோட்டா தண்ணீரை மிடறு முறிக்கும் தாளத்துடன் குடித்துவிட்டு, மறுபக்கம் புரண்டு கண்களை மூடிக்கொண்டார்.

புனிதத்திற்குத் தலையைச் சுற்றியது. சுமையேற்றப்பட்ட வாக்கில் தலைப்பாரம். செமியாக்குணக்கோலத்தில் வயிற்றைக்குமட்டிக்கொண்டும் வருப் உணர்வு இத்தனைக்கும் வெள்ளியும் சனியும் விரதம்; ஒரு நேரச் சாப்பாடு கிணற்றடிப் பக்கம் விரைந்தாள். வெகு பிரயாசையுடன் சத்தத்தை அடக்கி, எலுமிச்சம் மரத்தின் கீழ் வாந்தியெடுத்தாள். கால்களால் புழுதியை எத்தி மூடினாள். எலுமிச்சம் பழமொன்றைப் பறித்து மோந்தாள். நிலை சற்றே சீரடைந்தது. பற்களில் உமிக்கரி போட்டு மினுக்கி, முகம் கால் கழுவி, கிழக்கு நோக்கி விபூதி பூசி, வீட்டுப்பணியில் ஈடுடாள்.

பானையில் அடைத்திருந்த புளியம் பழமொன்றை உப்பில் தோய்த்து வாயில் திணித்துக்கொண்டு, குசினிக் கதவடியில் நின்று வீட்டறைப்பக்கம் பார்த்தாள். திருவாளர் எழுந்து வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிலமனை'க் காணவில்லை. உலையில் நீர் மலமலத்துக் கொதித்தது... தேங்காய்ப்பாதியைத் துருவி எடுத்து, பிட்டுக்கும் மாக்குழைத்து முடிந்த பொழுது தான், கிணற்றடியில் அவஸ்தையுடன் ஓங்காளிக்கும் சத்தம் கேட்டது. விரல் நுனிகளிற் தன் உடல் பாரத்தை ஏற்றி, குறுக்கு வேலியால் எட்டிப் பார்த்தாள். சிவக்கொழுந்து விரல்களைத் தொண்டைக்குள் திணித்து, பித்தத்தை இறக்கி முகம் கழுவிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

கெதியாக முட்டைக் கோப்பியைக் கலந்தெடுத்தாள்.

'என்னணை, முட்டைக் கோப்பியே? இண்டைக்கு ஏதோ விரதம் கிரதமாக்குமெண்டு நினைச்சன்.'

'உங்களுக்கு வருஷத்திலை முன்னூத்தறுபத்தைஞ்சு நாளும் பச்சை மீன் வேணும். நேத்துத்தான் புரட்டாசிச் சனி விரதம்'

'விரதத்தோடை ரயில் பயணக்காரனையும் பட்டினி போட்டிட்டாய்'

'உன்னாணை மத்தவங்களில் குத்தம் கண்டு பிடிக்கிறதுக்கு உங்களைப்போலை ஆளில்லை. இன்னநாளைக்கு வாறதெண்டு ஒரு விசளம் எழுத மூண்டுசேம் கிடைக்கேல்லை. பேந்தென்ன? வந்தாக் கண்டுகொள்ளுவம்'.

கோப்பையை உதட்டோரம் வைத்துக் கோப்பியில் ஒரு மிடறு உறிஞ்சிக் குடித்தவாறே, 'எங்கை, கொம்மாவைக் காணம்?' என்றார்.

'எப்பவும் நெக்கு ஊழிவம் செய்யுறதெண்டு அவவுக்குத் தலையெழுத்தே? தனிய இருக்கிறதெண்டு துணைக்கு இருந்தவை. வீரபத்திரரைக் கண்டதும், ராத்திரியே அவ தம்பியோடை அண்ணன் வீட்டுக்குப் போயிட்டா.'

'அதுக்கு, நடுச்சாமத்திலையே போறது? அந்தக் கிழடிக்கு என்ர நிழலும் புடிக்காது.'

கோப்பியைக் குடிக்கிறார்.

'மருமேனிலை மாமியாருக்கு அவ்வளவு மரியாதையாக்கும்.' வார்த்தைகளை அரையும் குறையுமாக விழுங்கிக் கொண்டே குசினிக்குள் நுழைந்தாள்.

நேற்றுத்தான் இளங்கன்றுச் சாணகத்தால் நேர்த்தியாக மெழுகப்பட்டிருந்த தரையை, விளக்குமாற்றினால் கூட்டி, அடுக்களையை ஒதுக்கினாள். 'துருவலை'க் குற்றியை எடுத்துப் போட்டு அதன் முன்னால் பெரிய பருத்தித்துறைப் பெட்டியொன்றைக் கவிழ்த்து வைத்தாள். அதன் மேல் தலைவாழை இலைத்துண்டு ஒன்றைப் போட்டு, தண்ணீர் தெளித்துக்கொண்டே, 'பேப்பர் படிச்சது போதும். வாருங்கோவன்' என்று அழைத்தாள்.

கைகளைக் கழுவிக்கொண்டு, சிவக்கொழுந்து குற்றியில் அமர்ந்தார். மூன்று பிட்டுகளை இலையில் வைத்து உதிர்த்திவிட்டு, முட்டைப் பொரியலையும் எடுத்து வைத்தாள்.

அவர் சாப்பிடத் தொடங்கினார்.

திருவாளருக்கும் திருவாட்டியாருக்குமிடையில், மௌனச் சுவர் எழுந்து நின்றது.

'சோக்கா இருக்கப்பா. இப்பதான் வீட்டுச்சாப்பாடு. சிங்களச் சாப்பாட்டிலை நாக்கு மரத்துப் போச்சு.'

நிமிர்ந்து பார்த்தபொழுது, அவள் மாட்டுக்கொட்டில் பக்கம் பார்த்து, ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது.

'என்னெணை நீட்டுக் கயித்தினை யோசிக்கிறாய்?'

வெப்பமான நெடுமூச்சு.

'இல்லை, பத்து மாசமா மாத்தறையில் இருந்து யாழ்ப்பாணப் பக்கம் கோச்சி வரேல்லையாம்.'

'கோச்சி வந்ததுதான் எனக்குத்தான் லீவு கிடைக்கல்லை.'

'நான் காத்தைக் குடிச்சுக் கிடப்பன் எண்டு நினைச்சியளாக்கும்.'

'எனக்கிருக்கிறகடன் தனிஉனக்குத் தெரியுமே?'

'ஆருக்காகப் பட்டனியள். அந்த மாத்தறைச் சிங்களத்திக்காகத்தானே?'

'பேக்கதையள் கதைச்சுக் கோவத்தைக் கிளப்பாதை.'

'கோழ்வம் கோழ்வமெண்டு நெடுகப் பேக்காட்டுறதே? உங்களிட்டை வந்த தம்பையா அண்ணைட்டை என்ன சொன்னனியள்?'

'அவன் ஒரு கோள்மூட்டி'

'பத்து வருஷமா அவள் என்னத்தைப்பெத்தாள்? அந்த மலடியோடை நான் வாழமாட்டன். காசும் அனுப்பமாட்டன், எண்டு அவரிட்டைச் சொன்னனியளோ, இல்லையோ?'

'சும்மா ஒரு கோவத்திலை சொன்னதை இவ பெரிய இது எண்டு சொல்லுறாள். தம்பையா அண்ணை வரக்கே என்னை வேலையிலிருந்து நிப்பாட்டி வெச்சாங்களெண்டு தெரியுமல்லே?'

'கங்காணியெண்டால், ஆஸ்பத்திரியிலை கங்காணி வேலையைப் பார்க்க வேணும். சிங்களக் கங்காணியளை மேய்ச்சால் விடுவாங்களே? ஒரு சிங்களத்தாறையைக் கிளப்பி வெச்சிருந்தியாம். எப்படிப் பாடு?'

'அவளாலை—அவள் சொன்ன சாட்டியாலை தான்—என்ர உத்தியோகம் திரும்பிக் கிடைச்சுது. எனக்கு ஒண்டும் தெரியாது.'

'அதுகிடக்க, அவளுக்கு—என்ர சக்களத்திக்கு எண்டாலும்—புள்ளைப் பூச்சி வெச்சிருக்கே?'

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் திருவாளர் சிவக்கொழுந்துவைக் குடைந்தெடுத்தது. நிதானம் தடம் புரண்டது.

'மலட்டுப்...... மலட்டுக் கதையள் தானே வரும்.'

'இஞ்ச! உந்தக் கோழ்வத்தைக் கொண்டுபோய் நீ மேய்க்கிற சிங்களத்தியளிட்டைக் காட்டு. ஆர் மலடி?...நான் வேறையொருவனைக் கட்டியிருந்தால், அதுக்கிடையிலை ஐஞ்சாறு பெத்திருப்பன்.'

தேகத்தை உலுப்பி ஆட்கொண்ட கோபாவேசத்துடன், குற்றியை இடறி எழுந்தார். பெட்டி உதையில் நசிந்தோடி, அடுக்களை வாசலில் கிடந்தது. வெளியால், சருவக் குடத்திற்குப் பக்கத்தில், பிட்டு மணிகள் சிதறிக் கிடந்தன. காகங்கள் விழுந்தடித்துக் கொண்டு இரைச்சலுடன் கொறிக்கின்றன.

'அதுதானே, உந்த வேசையின்ர முகத்திலை முழிக்காமல் அங்க நிற்கிறனான்.'

ஈச்சேரில் வந்து படுத்தார். புகையிலையைக்கிழித்து, ஒருசுருட்டுச் சுற்றி எடுத்தார். அதைப் பற்ற வைத்தார்.

புயலின் புத்திரப் பாக்கியமான நிசப்தம் ஆட்சி செலுத்தியது.

அந்தச் சுருட்டைப் புகைத்து முடிப்பதற்கிடையில், பதினைந்து இருபது நெருப்புக் குச்சிகளைச் செலவழித்தார். சுருட்டுக் குறளை எறிந்தார். வெற்றிலைத் தட்டைத் தேடிப் பிடித்தார். வெற்றிலை வாடிக் கிடந்தது. கறட்டிச் சுண்ணாம்பு. ஒருவகையாகச் சமாளித்து. ஒரு வாய்க்குத் தாம்பூலம்தரித்தார். சேட்டை எடுத்து மாட்டி, சால்வையைத் தோள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ளில் எறிந்தார். வெளியே புறப்படும் ஆயத்தம்.

அவரை வழி மறிப்பதைப் போல, எதிரில் வந்து நின்றாள் புனிதம். ஆத்திரம்-சினம் ஆகியவற்றின் சுவடுகள் தூர்ந்திருந்தன. முகமும் முகமும் நேராகச் சந்தித்தன. புதிதாகக் காணப்படும் அவளுடைய கவர்ச்சியில் அவருடைய விழிகள் ஒரு கணம் நிலைத்தன. இப்பவும் கல்யாணச் சந்தையில் 'செல்லும்' குமரி. அவளுடைய கழுத்தில் சிவக்கொழுந்து தாலி கட்டிப் பத்து ஆண்டுகளாயினும், சென்ற வைகாசியிலே தான் இருபத்தியெட்டு வயது பூர்த்தியாயிற்று. தனக்கட்டுகள் சதை கூட்டிக் கொழுத்த வாக்கில் நிமிர்ந்து, சௌந்தர்யப் பொலிவு காட்டின. குலை தள்ளிய வாழையின் நிறைவுடன், இரத்தம் ஊறிய வாக்கில், முகத்தில் மலர்ச்சி. கன்ன உச்சிக்காரி இப்பொழுது நேர் வகிடுவிட்டு வாரத் தொடங்கியிருந்தாள். இந்த 'உத்தி' முகத்தை உருண்டையாக்கிக் காட்டியது. சிரிக்கும் பாசாங்கில், நாக்கு நுனி உதட்டை நனைத்து மீண்டது.

'நீங்கள் ஆள் சுறுக்கர்தான். துலைக்கே புறப்பட்டுட்டியள்?'

பதிலில்லை.

'இஞ்சாருங்கப்பா. ஒருக்காச் சின்னக்கடைப் பக்கம் போயிட்டு வாருங்கோவன்.'

'சின்னக் கடைக்கே? என்னத்துக்கு?'

'இண்டைக்கு நாயித்துக்கிழமையல்லே? கட்டைக் காலன்தானே உங்களுக்குப் பிடிக்கும்?' சற்று முன்னர் நடந்த சண்டையின் சாயல் எள்ளளவும் இழையாத இதயம் குழைத்துப் பேசி, ஒரு ஐந்து ரூபாய்த்தாளை அவருடைய கைக்குள் வைத்தாள். அவருடைய நாக்கில் கடல் ஆமை இறைச்சியின் சுவை ஊர்ந்தது. கோபமெல்லாம் அடங்கிற்று.

சால்வையை ஈச்சேரின் சட்டத்தில் எறிந்து, மறுபடியும் குந்தினார்.

'கொஞ்சம் பச்சைத் தண்ணி கொண்டாணை.'

செம்பில் தண்ணீர் வந்தது. வாயில் குதப்பப்பட்ட வாடல் வெற்றிலை ஒருமாதிரிக் கசந்தது. வாயை நன்றாக அலம்பிக் கொப்பளித்துத் துப்பிவிட்டு, 'அண்ணாக்காக'த் தண்ணீர் குடித்தார். செம்பிற்குள் பார்வை தட்டுப்பட்டது.

'இங்க செம்புக்கை வெத்திலை கிடக்கு.'

'ஓம். வாடாமல்போட்டு வைச்சனான்.'

'அப்ப வெத்திலைத் தட்டையும் தா. சுண்ணாம்புக் கறண்டைக்கை கொஞ்சம் தண்ணி விட்டு இழகப் பண்ணு.'

புனிதம் மடித்துக் கொடுக்க, பத்தியமாகத் தாம்பூலம் தரித்தார். நாக்கும் நன்றாகச் சிவந்தது.

'இஞ்சேருங்கோ, கெதியாப் போனாத்தான் நல்லதாய்க்கிடைக்கும்.'

'எநக்குத் தெரியாத சின்னக் கடையே? கொஞ்சம் பொறுத்துப் போவம்.'

'நீங்கள் மாத்தறைக்குப்போன ரெண்டு வருஷத்துக்குள்ளை யாழ்ப்பாணம் தலைகீழா மாறீட்டுது.'

புனிதமும் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

'உனக்கும் நல்லாச் சிவந்திருக்கலை.'

'இதிலை தெரியும் நான் எட்பிடிப்பட்டவளெண்டு. எப்ப வேலைக்குத் திரும்பிப்போறியள்?

'நான் ஒரு கிழமை லீவிலை வந்தனான்''

'மழைதான் பெய்யப்போகுது'

தன்னுடைய உத்தேசத்தைத் தெரிவிக்க இதுதான் சமயமெனச் சிவக்கொழுந்து நினைத்தார்.

'எல்லாத்தையும் மறந்திடுவம் உன்னை என்னோடை கூட்டிட்டுப் போகத்தான் லீவுபோட்டு வந்தனான்.'

'இவ்வளவு காலமும் இல்லாத கரிசனை இப்பதான் புதிசாய் முளைச்சிருக்கு...ஏன் இப்ப அந்தச் சிங்களத்தி கைவிட்டுட்டாளே.'

'உந்த விண்ணானம் கொட்டுற பொம்புளையளோடை கதைச்சுத் தப்பேலாது. நான் ஒரு சிங்கள வைப்பாட்டி வெச்சிருக்கிறன் எண்டு ஆரோ தட்டுவாணியள் கதை கட்டியிருக்க வேணும்.'

'பேந்து கதைப்பம். கெதியாய் கடைக்குப் போயிட்டு வாருங்கோவன்.'

அந்தச் சமயம், 'சங்கட'த்தால் சைக்கிளை ஏற்றி, படலையைத் திறந்து கொண்டு, ஒரு வாலிபன் வந்தான். சாக்கினால் மறைபோடப்பட்டிருந்த ஒரு பெரிய போத்தல் 'கரி'யரில் கட்டப்பட்டிருந்தது, பக்குவமாகச் சைக்கிளை ஸ்டாண்டில் நிறுத்தினான். சைக்கிள் 'கான்டி'லில் தொங்கிய பையைக் கையில் எடுத்தான்.

'அது மரஞ்சீவுறவன்.'

'இப்ப இவங்களுக்குக் காசு மெத்தி, ஊர் பிடிபட்டு, கெப்பர் மிஞ்சிப் போச்சு. அவன் சின்னவன் கத்திக்கூடு கட்டி, முட்டிகள், தீட்டுத்தடி எல்லாத்துடனும் உடுப்புப் போட்ட மாதிரித்தான் வருவான். உவன்ர சோக்கைப் பாருங்கோவன்...' என்று வாய்க்குள் புறுபுறுத்தார்.

சேட்டைக் கழற்றி, கொடுக்குக் கட்டி, கத்திக்கூடு மாட்டி, தளைநாரையும் முட்டியையும் கையில் எடுக்கும்வரை, அவனையே அவதானித்தார் சிவக்கொழுந்து ஈச்சேரில் படுத்துத் தன்னைக் கவனிக்கும் அவரை இவனும் உற்றுப் பார்த்தான்.

'என்ன அப்பிடிப் பாக்கிறாய் செல்லத்தம்பி? இவர்தான் எங்கட இவர்.'

'ஐயாவே? அப்பிடித்தான் நினைச்சன். எப்பிடி ஐயா மாத்தறைப் பக்கம் மழை தண்ணி?' என்று சம்பிரதாயமாகக் குசலம் விசாரித்தான். அவர், அவனுடைய நெஞ்சில் சடைத்திருந்த ரோமத்தையும், உருண்டு திரண்டு கிடந்த தேகக் கட்டையும், விடுப்'புப் பார்த்தார். அப்புறம் தான், ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே என்கிற மரியாதைப் பண்பு ஞாபகத்திற்கு வந்தது.

'நீ சின்னவனுக்குச் சொந்தமே?'

'ச்சா...நாங்கள் கொட்டடிப் பகுதி.' உரையாடலை நீட்டாமல், 'அப்ப வாறன் ஐயா, இண்டைக்குப் பாளை தட்டுமுறை' என்று கிணற்றடிப் பக்கம் போக அவசரம் காட்டினான்.

'இந்த வளவிலை எத்தினை மரம் கட்டியிருக்கிறாய்?'

'அஞ்சு'

'எதெது?'

'கிணற்றடி கறுப்பிக் கன்றுகள் ரெண்டு, கக்கூசடி உசரியும், வளுக்கலும், கோடிச் சிவப்பி...' சிரத்தையின்றிப் பாடம் ஒப்புவிக்கும் வாக்கில் சொன்னான்.

'நாவலடிச் சிவப்பி நல்லா ஊறுமெண்டு சின்னவன் சொல்லுவான்.'

'அது பாளை மாறிப் போச்சுது, ஐயாவுக்கு எங்கடை தொழில் முறையும் நல்லாத் தெரியுதே?' என்று 'பொடி' வைத்துப் பேச்சை முறித்துக்கொண்டு, கிணற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடிக் கறுப்பியை நோக்கி நடந்தான்.

'இந்தக் கோசு ஏன் மரங்களைச் சின்னவனுக்குக் குடுக்கல்லை?' என்று மனைவியை விசாரித்தார்.

'சீவிய உருத்து எண்டு சொல்லி அம்மாதான் இவனுக்குக் குடுக்க ஒத்தக்காலிலை நிண்டவ. மரத்துக்கு எழுவது ரூவா மேனி மூன்னூறம்பது ரூவா தந்தவன். அந்தக் காசிலை வாங்கிவிட்ட பசுவாலும், கோழியளாலும் தான் பிச்சை எடுக்காமல் மானத்தைக் காப்பாத்திச் சீவிக்கிறன்.

'இவன் ஐயம்புள்ளை ஆக்களின்ரை பகுதியாக்கும். அவங்கள் காசுக்காரர்.'

'ஆனாலுமப்பா, சனியனுக்கெறு அகராதி பேசுறவன். அண்டைக்கு முத்தத்து மரத்திலை பழுத்திருக்கிற குலையைப் புடுங்கிவிடு எண்டு சொல்ல, 'தேங்காய் ஆயிறவனைப் பாருங்கோ. அவனும் புழைக்கவேணும்' எண்டு சொல்லீற்றுப் பேசினான்.'

'இப்ப இந்தக் கீழ்சாதியளுக்குத்தானே நடப்பு. என்னோடை அவன் அருளானந்தம் - அவன் தான் கொய்யாத்தோட்டத்து நளவன்—மாத்தறைக்கு வேலை மாாறி வந்தான். பேந்து ஒரு மாசத்திலை இலங்கை திரும்பி வந்துட்டான். நானும் மூண்டு மாசமாப் பிடிக்கா எம்பியளை எல்லாம் பிடிச்சு ஒரு மாறுதலுக்குப் புழுத்திப் பார்த்தனே!'

'என்னப்பா, கதையிலை குந்தீட்டியள். எப்ப இறைச்சி வாறது. எப்ப காய்ச்சிறது, எப்ப சாப்பிறது?'

'ஓமப்பா, வெய்யிலும் ஏறீட்டுது. நான், அவன் ராசான்ரை கடையிலை ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துட்டு, ஓடியாறன். நீ உலையை வெய்யன்.'

சிவக்கொழுந்து புறப்படும் பொழுது, கிணற்றடி மரத்தில் பாளை தட்டும் சத்தம் கேட்டது.

சின்னக்கடையிலிருந்து சிவக்கொழுந்து திரும்புவதற்கிடையில் அவரைத் தேடி சரவணமுத்துவும் திருநாவிக்கரசும் வந்திருந்தார்கள் அவர் கடைக்குச் சென்ற சமாச்சாரத்தை புனிதம் தெரிவித்தாள். அவர்களிருவரும், படலைகு முன்னால், வீதி த்ருத்குவித்திருந்த கல்லுக்குப் பக்கத்தல் குந்தியிருந்தார்கள். அப்பொழுதுதான் செல்லத்தம்பியும் சீவலை முடித்துக் கொண்டு புறப்பட்டான்,

அவர்களுக்கும்அவனுக்குமிடையில் ஏதோ வாக்குவாதம் நடந்தது.

திருமதி சிவக்கொழுந்து உற்றுக் கேட்டாள்.

'இன்ச பார் சரவணமுத்து. உன்ர பெருமாகோயில் சண்டித்தனத்தை எள்ளெண்ணைச் சட்டி எரிக்க வாறதுகளிட்டைக்காட்டு. நான் கொட்டடியான். இனிமேல் என்னட்டைச் சேட்டை விட்டால், பாளைக்கத்தியாலை உன்ர குடலை எடுத்துப் போட்டுத்தான் வழக்குப் பேசுவன்.' செல்லத்தம்பியின குரல் உரத்துக் கேட்டது.

புனிதம் வேலியால் எட்டிப் பார்த்தாள். அதற்கிடையில் அவன் சைக்கிளில் ஏறிப் போய் விட்டான்.

அந்நேரம் சிவக்கொழுந்து அங்கு வந்து சேர்ந்தார். இருவரும் அவருடைய காதைக் கடித்து ஏதோ சொன்னார்கள்.

'அப்பிடியே சங்கதி. நான் கறியைக் குடுத்திட்டு வாறன்' என்று படலையைத் திறந்து உள்ளுக்கு வந்தார். புனிதம் ஒரு தேங்காயைக் கொடுவாக் கத்தியில் பிறத்தியால் அடித்துக் கொண்டிருந்தாள்.

சிவக்கொழுந்துவின் முகம் கறுத்து, வியர்த்துக் காட்சி தந்தது.

கறி உமலை, அவளுடைய கால்களில் பட்டும் படாமலும் விழ வீசியெறிந்தார். பேசாமல் திரும்பினார்.

'துலைக்கே?'

'கறியைக் காச்சு, வாறெறன்'

'வெய்யிலுக்கை போட்டு வந்து என்ன அவசரம்? கால் ஆறிப் போகலாமே?'

'கண்கெட்டுப்போவாளே, படலைக்கை சரவணமுத்தனும் திருநாவுக்கரசும் நிக்கிறது தெரியல்லையே.' அவங்களோடை ஒரு அலுவல்'

'அப்ப இண்டைக்குச் சாப்பாட்டுக்கும் ஆளில்லையாக்கும். அந்தக் குடிகாரங்களோடை சேந்து குடிகுடியெண்டுகுடிச்சுப்போட்டு ராவைக்குத்தான் வாறதாக்கும். இங்கையல்லே உங்களுக்கு முட்டியிலை கள்ளு வாங்கி வெச்சிருக்கிறன்'

'ஒவ்வொரு கதைக்கும் நீ மாத்துக்கதை கதைக்காதை. நீ கெதியாக் கறியைக் காச்சு. நான் சுறுக்கா வந்திடுவன்'

படலையை அடித்துச் சாத்திவிட்டு, சிவக்கொழுந்து வெளியேறினார்.

புனிதம் எப்பொழுதும் சமையலில் சுறுசுறுப்பு. இன்றைக்கு இனந்தெரியாத பதற்றம். கத்தியில், இறைச்சியை அறுத்தாள். 'வார்'களைக் குறுணியாக்க முடியவில்லை. வெடுக்கு மணத்தில் அருவருப்பு. பெரிய துண்டுகளாகப் போட்டாள்.

ஆமைக் கொழுப்பையே உருக்கி, கடுகு-சீரகம்-கறிவேப்பிலை-அரிந்த வெங்காயம், பச்சைமிளகாய் எல்லாவற்றையும் போட்டுத் தாழித்து, இறைச்சியைப் போட்டு வேகவைத்தாள். உப்பும் மிளகாய்த்தூளும் போட்ட பின்னர், தேங்காயின் முதற்பாலையும் விட்டுக் கொதிக்கவைத்த பொழுது, பெரிய வேலையொன்றைச் செய்து முடித்த திருப்தி ஏற்பட்டது. இதற்கிடையிலேயே இருலில் சொதியும் கூட்டி வைத்தாள். குழம்பை இறக்கிவிட்டு சொதியை அடுப்பில் ஏற்றவேண்டியதுதான். மரக்கறியில்லை.

குழம்பை இறக்கித் திருகாணியில் வைத்து, தேசிக்காய்ப் புளியை ஊற்றிப் பிரட்டிச் சட்டியால் மூடிவிட்டு, சொதிச் சட்டியை அடுப்பில் ஏற்றினாள்.

அப்பொழுது, சிவக்கொழுந்து அடுக்களைக்குள் நுழைந்தார். சாமான் பெட்டிகள், சட்டிகள், விறகு-மட்டை முதலியன விரித்தபடியே கிடந்தன. இன்னமும் அவற்றை அடுக்கி ஒதுக்கவில்லை. துருவு பலகைக்குப் பக்கத்தில் கிடந்த சிரட்டையொன்றை எடுத்துக்கொண்டு, பனை மட்டையைத் தட்டி எழுந்து நின்ற அரைக் குந்தில் குந்தினார். 'ஆளுக்கு நல்ல ஏத்தம்.'

'இதிலை கொஞ்சம் இறைச்சி போடடி' என்று சிரட்டையை நீட்டினார்.

'நெக்குத் தெரியுமே அந்தப் பாழ்பட்டுப் போவாங்களோடை போனால், இப்பிடித்தான் ஆட்டத்திலை திரும்புவியளெண்டு...' அகப்பையால் கோலி இறைச்சித் துண்டுகளைச் சிரட்டைக்குள் போட்டாள்.

'டேயே, வாராத் தெரிஞ்சு போடு.'

'சரி பிடியுங்கோ' என்று சிரட்டையைக் கொடுத்தாள்.

தோலை முன்பற்களால் உரித்துத் துப்பிவிட்டு, வாரைச் சப்பினார். பெரிய துண்டு; பல்லுக்குக் கொஞ்சம் கஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நான்தானே சொன்னனான் இங்கை கள்ளு வேண்டி வெச்சிருக்கெண்டு'

இறைச்சித் துண்டு ஒன்றைக் கொடுப்புப் பற்களுக்கிடையில் சப்பிக்கொண்டே, 'நான் அந்த நளவன் சீவிற கள்ளைக் குடிப்பனெண்டு நினைச்சியே' என்றார்.

ஆணிக்குடல் துண்டு ஒன்று, அவருடைய வாயில் ரப்பராக இழுபட்டது.

'இவளுக்கிப்ப சோகை புடிச்சுப்போச்சு. உப்புப் புளிக் கணக் கொண்டும் தெரியுதில்லை.'

மடிக்குள் மறைத்திருந்தபோத்தலை உருவி வெளியே எடுத்தார். அரைப்போத்தலில், அரைவாசிக்குச் சாராயம் இருந்தது. கிளாஸ் கூடத் தேடாமல், போத்தல் கழுத்தை வாயில் வைத்து ஒரே மடக்காகக் குடித்தார். அஷ்டகோணமாகிப் பிளந்த இதழ்களினால் குழம்புடன்கூடிய இறைச்சியைச் சூப்பி, அதனைச் 'சாப்பதே' விழுங்கி, ஒரு முறை இருமி, அவஸ்தையைத் தணித்தார்.

'அதுதானே பாத்தனான். கறுப்பன் கையோடை இருக்கேக்கிள்ளை ஏன் கள்ளை?'

'நானும் பாக்கிறன், வேசைக்கு நாக்கு நீண்டு போச்சு. இப்பவே ரெண்டிலை ஒண்டு தெரியவேணும்.'

'என்னத்தை?'

'நீ என்னோடை மாத்தறைக்கு வாறியா, இல்லையா?'

'உன்னை அப்பா புண்ணியம் கிடைக்கும். போய் முழுகிட்டு வந்து சாப்பிடு. எல்லாத்தையும் ராவைக்குக் கதைக்கலாம்.'

'குந்திலிருந்து எழுந்தார். அவளுடைய முகத்திற்கு எதிராகத் தன் முகத்தை வைத்துக்கொண்டு, 'ராவிலை' கள்ளப் புருஷனோடை தான் படுக்கிறது. இப்ப எனக்குப் பதில்வேணும்.'

சாராய நெடியும், கடல் ஆமை இறைச்சி வெடுக்கும், 'பக்'கென்று புனிதத்தின் மூக்குத் துவாரங்களில் ஏறின. அருவருப்பு உணர்வு. வயிற்றைக்குமட்டியது.

அடுப்பில், சொதி கொதித்துத் திரைந்தது. அவளுக்குத் தலையைச் சுற்றியது,

குசினியிலிருந்து முற்றத்திற்கு ஓடிவந்து, பொன்னுருக்கிலன்று நாட்டப்பட்டுத் தழைத்துவளர்ந்திருந்த முள்முருக்கம் மரத்தில் கைகளைத் தாக்குக் கொடுத்துக் குனிந்தாள்.

'வூஓக்...வூஓக்...' வாந்தியெடுத்தாள்.

'என்னடி மாய்மாலம் கொட்டுறாய்...என்னடி உனக்குச் சத்தியும் வருத்தமும்; சொல்லன்டீ; நீ என்னோடை வாறியா. இல்லையா?'

களைப்புடன், வீட்டுத் திண்ணையில் அமர்ந்தாள்.

'என்னடி நான் கேக்கிறன். நீ உன்ர பாட்டுக்கு இருக்கிறாய்?'

'நீ கேக்கிற கேள்விக்கு மறுமொழியும் தேள்வையே? இந்த வீடு வாசலை மாடு கண்டை விட்டுட்டு, இரவல் புடவையிலை பெரிய கொய்யகம் வெச்சுக் கொண்டு, கூப்பிட்ட இடத்துக்கு இவருக்குப் பின்னாலை திரியவேணும்...நான் செத்தாலும் இந்தப் படலையைத் தாண்டி உன்னோடை வர மாட்டன்.'

'சரவணமுத்துவும் திருநாவுக்கரசும் எழுதினதும், சொன்னதும்...எல்லாம் சரிதான்.'

'அந்தக் கோள்காவி நாரதர்கள் என்ன சொன்னவை? இனிமேல் அவங்கள் இந்த வீட்டுப் படலைக்கு வரட்டும்.'

'இப்ப சண்டித்தனமும் அல்லோ காட்டுகிறாள்.' ஆவேசத்துடன் கையிலிருந்த இறைச்சிச் சிரட்டையை அவள்மீது 'எறிந்தார். குறி தவறாது அது சரியாக அவள் நெற்றியில்பட்டது. இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

'ஐயோ, இந்தப் பாழ்பட்டு போவான்—குறுக்காலை தெறிப்பான் என்னைக் கொல்லுறானே' என்று கூவித் தணிந்தாள்,

அமைதி.

'கடைசியாச் சொல்லுறன், கேட்டுக் கொள்ளும். இந்த ரெண்டு வருஷமா நீர் உழைச்சுத் தந்ததில்லை சீவிக்கேல்லை. இது என்ர வீடு வளவு. நீர் உன்ர ஆக்களோடை போகலாம்.'

'என்னடி சொல்லுறாய்' என்று கேட்டவண்ணம், துருவலை'ப் பலகையை ஓங்கிக்கொண்டுவந்தார்.

'ஏன் நிக்கிறீர்? அடியுமன். மலடன்களின்ர சண்டித்தனம் பெண்டுகளிலைதானே?'

'நான் மலடன் எண்டால், நீ மலடிதானே?'

'நீதான் மலடன்...நான் மலடியல்ல...'

இந்நேரம் படலையைப் பிடுங்குவது போலத் திறந்துகொண்டு, அவசர அவசரமாகத் திருநாவுக்கரசு ஓடிவந்தான்.

'சரவணமுத்துவை முச்சந்தியிலை வெச்சு நளவன் செல்லத்தம்பி அடிச்சுப் போட்டான்' என்று முற்றத்தில் நின்று கத்தினான்.

'இண்டைக்கு ரெண்டிலை ஒண்டு முதலிலை அவனை முடிச்சுப்போட்டுத்தான், இவளின்ரை கணக்கைத் தீர்க்க வேணும்.' என்று, கொடுவாக்கத்தியை எடுக்கக் குசினிப் பக்கம் பாய்ந்தார். நிதானமற்ற கால்களுடன், குசினிப்படியில் தடக்குப்பட்டு, தடாலென்று கீழே விழுந்தார். துருவுபலகையின் பற்கள் கிழித்துக் கன்னத்திலிருந்து இரத்தம் கோரமாக வடிந்துகொண்டிருந்தது.

'வடுவா! நீங்கள் பிரிச்சு வைச்ச மாதிரி உங்கடை கூட்டாளியைத் தூக்கிக்கொண்டாச்சும் போயிடு. ஆனால் ஒண்டு. இண்டையிலையிருந்து நீயோ சரவணமுத்துவோ என்ர வீட்டுப் படலை துறந்தால் விளக்கு மாத்தாலைதான் அடிப்பன்' என்று ரௌத்திர காளி போல புனிதம் கூச்சலிட்டாள்.

கலையரசி கவிதை பொழி!

"பரமஹம்ஸதாசன்"

கருங்குவளை மலர்விழியிற் கருணையேந்திக்
கமலமுகத் தெழில்நகையிற் தமிழையேந்திப்
பெருங்கருணை வளர்தனத்தில் அமுதையேந்திப்
பேரின்பப் பூங்கரத்தில் வீணையேந்திச்
சரிந்துவிழுந் துடியிடையிற் கலைகளேந்தித்
தகதகெனும் மேனியெலாம ஞானமேந்தி
வருந்திருவே! எனதிதயத் தமர்ந்துசாகா
மணிக்கவிதை பொழிகதமிழ் வாணித்தாயே!

(ஈழத் தமிழகத்தின் தேசிய கீதம் பாடிய கவிஞர் ''பரமஹம்ஸதாசன்'' வாயால் உதிர்ந்த முதற் கன்னிக்கவிதை. 1945-ம் ஆண்டு பாடியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக் காசு

....சொர்ணன்....

கணபதிப்பிள்ளையின் வீடு பிள்ளையார்கோவிலையடுத்தாற்போல் அந்தப் பரந்த காணியில் நடுநாயகமாக விளங்கியது. தென்னை மரங்கள், பனை மரங்கள் சூழ்ந்துகொள்ள இருந்தது அச் சிறு வீடு.

இரண்டு ஆடுகள் அதன் தாழ்வாரத்தில் குழைதின்றுகொண்டிருந்தன. இப்பொழுது கணபதிப்பிள்ளையின் கவனமெல்லாம்இவற்றின் மீதுதான். மனிதர்களிடம் எதிர்பார்ப்பதை விட மிருகங்களிடம் எவ்வளவோ பலனை எதிர்பார்க்கலாம் என்ற எண்ணம் போலும்.

இந்த வயதுபோன காலத்திலும் மனைவி பக்கத்துணையாக இருந்து கவனித்துக்கொள்ளும் பாக்கியம் கிட்டியதையிட்டு ஓரளவுபெருமை கொள்ளாமலில்லை. அடித்துழைத்த தேகம் என்ற காரணத்தாலோ என்னவோ, நோய் நொடியில்லாமல் காலந் தள்ளக் கிழவனாலும், கிழவியாலும் முடிகிறது.

'ஏதோ சீவியம் ஒருமாதிரிப் போகுது' என்கிறார்களே, அந்த வாக்கியத்துட்தான் இவர்களுடைய வாழ்க்கையும். மகன் மாதந்தோறும் அனுப்பும் காசுக்கு முன்னதாகவே 'பட்ஜெட்' தயார் செய்து வைக்கும் பழக்கமுடையவர் கணபதிப்பிள்ளை. இப்பணந்தான் வயிற்றைக் கழுவி வந்தது.

அது நிலவுகாலம். ஆனால் எங்கும் ஒரே 'கும்' இருட்டு. மாரிகாலத்தை நினைவுறுத்தியது. பகல் முழுவதும் பெய்த மழை விட்டிருந்தது.

கணபதிப்பிள்ளை அன்று பகல் சமைத்தவற்றில் ஏதோ சாப்பிட்டுவிட்டு, வீட்டினுள் மழை ஒழுக்குக்காக வைத்திருந்த பாத்திரங்களை அப்புறப்படுத்தினார். தனக்குரிய பாயைக் கொண்டு வந்து விரித்து, தலைமாட்டில்உயரமாக ஒரு பலகைத்துண்டைப் பாயின்கீழ் வைத்ததும் 'முருகா' என்ற பெருமூச்சோடு சரிந்தார்.

'இஞ்சாரும்! நாளைக்கொருக்கா கந்தையாண்ணையிட்டைப் போக வேணும்: வீடு எல்லாப் பக்கத்தாலும் ஒழுகுது. காசு கொஞ்சம் மாறிக்கொண்டு வந்தாத்தான் சரி. அதோடை இந்தச் சில்லறைக் கடன்களையும் தீர்த்துப் போட்டுச் சும்மா கரைச்சலில்லாமல் இருக்கவேணும். நாங்கள் ஆருக்குத் தேடி வைக்கப் போறம்?'

மனைவி சின்னாச்சி பேசாமல் மூலையில் முடங்கிக்கிடந்தது கணபதிப்பிள்ளையின் கோபத்தைத் தூண்டியது.

'ஏய்! என்ன மாடு மாதிரிக் கிடக்கிறாய்? நான் என்னவோ சொல்லுறன்.' அப்பொழுதுதான் நினைவுக்கு வந்த சின்னாச்சி 'இப்ப என்ன வேணும்?' என்று கேட்டு வைத்தாள்.

'இஞ்சை பார்! நாளைக்கொருக்கா என்னை வெள்ளன எழுப்பி விடு' மற்றது தட்டியெல்லாம் கட்டிப் போட்டியே? கறிச் சட்டியளை உறியிலை எடுத்து வைச்சனியே?' இவையனைத்தும் பழக்கமான கேள்விகளான படியால், சின்னாச்சி பேசாமலிருந்துவிட்டு 'அதெல்லாம் எனக்குத் தெரியும் இப்ப படுங்கோ' என்றாள்.

கணபதிப்பிள்ளை பக்கத்தில் இருந்த துப்பல் சிரட்டையிற் துப்பிவிட்டு, வாயில் இருந்த குறைச்சுருட்டை வீசாமல், ஒரு மூலையில் வைத்தார். தலைமாட்டில் பொல்லுக்கிடக்கிறதா என்பதையும் பார்த்துக்கொண்டார்.

மற்றது முற்றத்தில் சுருண்டு கிடக்கும் சொறிநாய்...எல்லாம் சரியாயிற்று.

இத்தனை ஒழுங்குகளின் பின்தான் நித்திரை.

இத்தகைய ஏற்பாடெல்லாம் கணபதிப்பிள்ளையின் திரவியங்களைப்பாதுகாக்கவல்ல. அந்தஇரு ஆட்டுக்கடாக் களுக்காகத்தான். களவெடுத்து, வெட்டி, இறைச்சியாக்கி, அதில் ஒரு பங்கைக் கணபதிப்பிள்ளைக்கே கொடுத்துவிடக் கூடிய நிபுணன்கள் மிகவும் மலிவு அதைப்பற்றித்தான் சற்றுப் பயம்.

* *

விடியற்காலை 5 மணிக்கு சீமென்ற் பாக்டரி சைரன் ஊதுவதற்கு முன்னதாக எழுந்துவிட்டார்,

காலையில்எழுந்திருக்கவேண்டிய கஷ்டத்தைப் பக்கத்து வீட்டு புவனத்தினுடைய குழந்தை போக்கி விட்டது. திடீர் என்று விடியற்புறம் வீரிட்டுக் கத்திற்று. ஏதோ பயங்கரக் கனவு கண்டதனாலோ, என்னவோ குழந்தையின் அழுகை நின்ற பாடில்லை. இந்நிகழ்ச்சி கணபதிப்பிள்ளையின் தூக்கத்தைக் கலைத்தது.

ஒரு மாதிரியாக எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு ஆறு மணிக்குப் புறப்பட ஆரம்பித்தார்.

'செல்லையாவின்ரை லோண்டிரி எத்தனை மணிக்குத் திறப்பான்' என்று கேட்டார் சின்னாச்சியை.

'அது ஏழு ஏழரை செல்லும்; அதுமட்டும் நிக்கப்போறியளே.' 'என்ன செய்யிறது இருந்த வேட்டியை அவனிட்டைக் குடுத்திட்டன். அவன் ஏதோ 'எக்ஸ்பிரஸ்' லோண்டிரி எண்டு போர்ட்டுப் போட்டிருக்கிறான். அங்கை ஒரு இழவும் இல்லை. நேற்றுத்தாறமெண்டவன் தரேல்லை.'

லோண்டிரி திறக்கு முன்பே கடை வாசலில் தவம் புரிந்து ஒருவாறு அவனைச் சந்தித்தார். மடியில் வேட்டித் தலைப்பில் முடிந்து வைத்திருந்தசில்லறைகளைக்கவனமாக எடுத்தார். வெளுத்த வேட்டியையெடுத்து உடுத்துக்கொண்டு' தான் உடுத்திருந்த வேட்டியை அவிழ்த்துக் கொடுத்தார். அவனுக்குரிய சில்லறையைக் கொடுத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தார் பஸ்டான்டிற்கு. பஸ்டான்டிற்கு முன்னால் ஒரு வாடகைச் சைக்கிள் கடை. இது 'பஸ்டிப்போ'விற்கு அருகில் இருக்கின்ற காரணத்தால் அங்கு பஸ் ட்ரைவர்கள் கண்டக்டர்கள் 'டியூட்டி சேஞ்ச்' ஆகும் நேரத்தில் இவ்விடத்திற்றான் சல்லாபமடிப்பது வழக்கம்.

கணபதிப்பிள்ளையை கிழிந்த குடையுடன் நிற்பதைக் கண்ட ஒருவர், 'இஞ்சை பாரடாப்பா! உந்த ஆளை, மோன் பெரிய உத்தியோகமாம் கொழும்பிலை. உந்தாளும் மனிசியும் இஞ்சை கிடந்து காயிதுகள். ஏதோமோன் தன்ரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பத்துக்குக் கொழும்பிலை யாரோ வேறை சாதிப் பெட்டையை முடிச்சதுக்கு உந்தக் கிழவன் அட்டகாசம் பண்ணிச்சுதாம். பிள்ளை மோன் இந்தப் பக்கம் வாறதுமில்லை, கொண்டாடுறதுமில்லை. மாதா மாதம் காசு ஐம்பதோ, அறுபதோ அனுப்புறான் போலை இருக்கு. உந்தக் கிழட்டுப் பயலுக்கேன் இந்த வேலை. உலகந் தெரியாததுகள்' என்று நண்பனுக்கு அறிமுகம் செய்தார்.

இவை கணபதிப்பிள்ளையின் காதில் விழுந்தனவோ இல்லையோ முகம் ஒரு மாதிரியாய் இருந்தது. பஸ்ஸும் வந்தது...

* *

கந்தையா மலேயன் பென்சனர். வயது அறுபதைத் தாண்டி அதிக நாட்களாயின. மக்களெல்லாம் படித்து ஏதோ அங்கினும் இங்கினுமாக ஒவ்வொரு தெல்லியில் இருக்கின்றனர். வீடு வெறிச் சோடியிருந்தது. மனித நடமாட்டமில்லாததால் இக்குறையைப் போக்கவோ என்னவோ அவர் வட்டிக்கடை வைத்திருந்தார்.

மக்கள் நடமாட்டத்திற்குக் குறைச்சலில்லை, பெட்டியும் நிறைந்தது...

கணபதிப்பிள்ளை வருவதைக் கண்ட கந்தையா... "ஏது, ஏது, வா! வா!, எப்படி மகன் காசெல்லாம் ஒழுங்காய் அனுப்புகிறான் தானே. நான் அவனைக் கொழும்பிலை கண்டு சொல்லியிருக்கிறன்" என்று தொடர்ந்து என்னவெல்லாமோ பேசினார். கணபதிப்பிள்ளை எதுக்கெல்லாமோ தலையாட்டினார்.

கதை போன போக்கில் வந்த வேலைக்கே இடமில்லாமல், 'அப்ப பின்னை நான் வாறன்' என்ற வார்த்தையுடன் திரும்ப வேண்டியதாயிற்று. வீடு திரும்புவதற்காக, புறப்பட்டுக் கொண்டிருந்த பஸ்ஸைப் பிடிப்பதற்குச் சற்று வேகமாக ஓடினார் வேறு பக்கங் கவனமில்லாமல்.

* *

'ஆண்டி ஏது பச்சைக் கமுகு, ஆருக்குத் தறிச்சுக் கொண்டு போறாய்' என்று வைத்திலிங்க வாத்தியார் கேட்டார்.

ஆண்டி நாணயக் கயிற்றை இலேசாக இழுத்து வண்டியை நிறுத்திவிட்டு...

'அது பாருங்கோ, அந்தக் கோயில் வளவுக் கணபதிப்பிள்ளை நேற்றுக் கார் அடிச்செல்லோ செத்துப் போச்சு. அதுதான் தெரியாதே...மற்றது நீங்கள் அண்டைக்குக் கதியால் வெட்டிப் போட வேணுமெண்டு என்னட்டை வந்தனிங்களாம். இப்ப மழை தண்ணி பெஞ்சிருக்கு. நாளைக்கு அந்தப் பக்கம் வாறன்' என்று கூறி நாணயக் கயிற்றை இழக்கி விட்டான்.

கணபதிப்பிள்ளையின் மகன் மாத்திரமே செத்த வீட்டிற்கு வந்தான். அவன் எவருடனும் பேசவில்லை. எவரும் அவனுடன் பேசத் துணியவுமில்லை. அடுத்த நாள் தாயிடம் சென்று தனிமையில் ஒரு 'நோட்டை' நீட்டி விட்டு அவன் போய்விட்டான்.

* *

சின்னாச்சி வாழ்க்கையை ஓட்ட மிகவும் சிரமப்பட்டது மகன் கவனியாது கைவிட்டதால் என்றே கூறலாம்.

பல கடன்களுக்காக ஆஸ்தியாகக் கிடந்த ஆடு முதல் கொண்டு விற்று முடிந்தன.

மகன் கடிதத்தில் காசு இனி அனுப்ப முடியாதென்றும், விரும்பினால் தன்னுடன் வந்து தங்கலாம் என்றும் கூறியிருந்தான். 'இனி என்ன செய்கிறது, போய் இருப்பம்' என்று தோன்றும் கணநேர எண்ணத்தை கணபதிப்பிள்ளையின் ஞாபகம் வந்து மறையச் செய்து விடும். கடைசியில் சின்னாச்சி இப்பொழுது பக்கத்து வீட்டுப் புவனத்தினுடைய வீட்டுத் திண்ணையிற் தான் சீவியம். சின்னாச்சி மேல் அவள் காட்டும் அன்பை அவளுடைய குழந்தை குட்டிகளின் தொல்லை குறைத்து விடவில்லை.

புவனம் சின்னாச்சியின் மருமகள். அன்று பருவப் பெண்ணாக இருந்த பொழுது சின்னாச்சியின் மகனுக்குத்தான் கல்யாணம் பேசினார்கள். புவனமும் அவனையே விரும்பினாள். ஆனால் அவனோ?...

அப்பொழுது சின்னாச்சிதான் புவனத்திற்கு ஆறுதல் கூறியதும் அவளுடைய வாழ்க்கையை ஒரு நல்ல பாதையில் திருப்பியதும். இன்று அவள் இன்பமாக இல்லறம் நடத்தும் குடும்பப் பெண்.

அன்று மாலை புவனத்திடம் 'வெளியில் போய்விட்டு வருகிறேன்' என்று சொல்லிக் கிளம்பினாள் சின்னாச்சி.

'புவனத்தின்ரை உதவியாலை நான் நெடுக இருக்கப் பிடிக்கவில்லை; எனக்கெடா தம்பி உந்தக் 'கவுண் மேந்து' குடுக்கு தெல்லே பிச்சைக் காசு; அது எடுக்கிறதற்கு ஏதேனும் வழி சொல்லடா மோனை' என்று சின்னாச்சி உள்ளூர்க் கிராம விதானையைக் கேட்ட பொழுது, அவர் கையை விரித்து 'எணை அது வந்து அநாதையளுக்கு. ஒருவருங் காப்பாத்தஏலாட்டித்தான் குடுப்பினம். உனக்குத்தானே மலை போலை மோன் இருக்கிறானே. உனக்கெனை எப்படித் தருவினம்' என்றார்.

மீண்டும் புவனத்தின் வீட்டிற்கே வந்து கொண்டிருந்தாள் சின்னாச்சி.

அன்புதான் அழகு!

மேதை என்பது வாதாடுவதில் இல்லை. அது சிருஷ்டிக்கும் சக்தியை உடையது.

பிறரைச் சுத்தமாக்கினாலன்றி நான் சுதந்திரனாக முடியாது.

உலகத்தை வென்றவர் யார்? அன்பின் ஆற்றல் மிக்க புத்த பிரானேயன்றி அலெக்சாண்டர் அல்ல.

சத்தியத்திற்காக உயிர் விடுபவர்கள் சிரஞ்சீவி ஆகின்றார்கள். அப்படியே தேசம் முழுவதும் உண்மைக்காக உயிர் துறந்தால் அதுவும் என்றும் சாசுவதமாகவே விளங்கும்,

ரூபமான புலன்களுக்கு விஷயமாகாமல் நம் புனிதமான உள்ளத்தில் பிரவேசிக்கும் போது தான் தன்னை மறக்க முடியும். அன்புதான் அழகு! சந்தேகங்கள், வாதங்கள் யாவற்றையும் மீறியது அந்த அழகே! இதுவே பரிசுத்தமான இனிய கீதம்.

— ரவீந்திரநாததாகூர்.

[அனுப்பியவர்; ஈழத்துலக்ஷ்மி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நான்காம் இயல்)

காமனும் கடவுளரும்

— 'மஹாகவி' —

தூண்களும் இன்றியே தொடர்ந்து நீண்டதாய்த்,
துப்புர வானதாய்த், துணிந்து நாளையைக்
காண்பவன் மனத்திலே தோன்றி இன்றைய
கண்ணெலாம் வியப்பினாற் பிதுங்க வைப்பதாய்,
வீண் நினை வுகளென விரிந்த மண்டபம்;
வீற்றிருந் தனர் பலர்; விழிகள் தீட்டிய
ஆண்களின் வரிசையைக் கண்ட காமி தன்
அன்பனின் அருகினில் அமர்ந்தும் அஞ்சினாள்.

'காட்டிடை வாழ்பவர் இலர் என் றோதி,நீர்
காட்டினீர் குகைசில இந்தக் கோளினில்
நேற்றுநாம் நடக்கையில்?' என நிகழ்த்திய
நேத்திரம் கண்டவன், முகட்டைப் பார்க்கிறான்;
'மாற்றமுண் டதுநிலம், நாங்கள் தூங்கிப்பின்
மறுபடி விழிக்குமுன்! மனிதர் என்பவர்
ஆற்றல் கொண்டவர்களோ இன்னும்?' என்றவா
றங்கொருத் தியைக்கண்ணிற் பற்றி உண்கிறான்.

முகட்டினில் விசிறியா? முகடும் இல்லையே!
மூண்டுயர்ந் தெழுந்துள கூரை பார்வையில்
அகப்படாத் தொலைவினில் அமைந்ததோ எனும்
அப்படி இருந்தது (இருக்கவில்லை?). தான்
திகட்டின் ளோஎனத் திரும்பிப் பார்த்துளம்
திடுக்கிட மனிதையைக் கண்டு கின்றனள்
நகத்தை, வான் நடிகை! தன் ஆளன் தோளினில்
நாட்டத்து மலர்களைப் போட்டுக் கூப்பிட்டாள்.

எதிர்ப்புறத் தப்பொழு தெழுந்த தோர் திரை;
'ஏ!' எனத் திரும்பினான் இளைய காமவேள்;
குதிப்புறம் உயர்ந்ததால் நடையி லேபுதுக்
குழப்பம் உற் றிட,ஒரு குமரி தோன்றினாள்;
புதுப்புதுக் குனிதல்கள் நிமிர்தல், நெஞ்செனும்
பொருப்பினிற் குலுக்கங்கள், வயிற்றி லே,சில
பதிப்புகள் எழுப்புகள், இடைத் துடிப்புகள்—
பலப்பல சுவைபடப் படைக்கப் பட்டன.

கழுத்தினிற் சுற்றிய துணியைத் தொட்டதைக்
கதிரையில் எறிகிறாள்; கைகள் ஊர்ந்துபோய்
அழுத்திட ஒருதெறி அகன்று விண்டதும்,
அடிப்படைச் சதைப்புலம் விலாவிற் கண்டதே!,
ஒழுக்கமே லாடைகள் என்னத் தக்கன
ஒவ்வொன்றாய் அடுத்தடுத் துரியப் பட்டன;
ஒழுக்குகள் நேர்ந்தன சபையில்; ஆணினம்
ஒத்திற்று நெற்றியில் ஊறும் வேர்வையை;

திகைத்ததன் சிந்தையும், திமிறும் உள்ளமும்,
திருப்பிடிற் திரும்பிடா விழியும், பக்கத்திற்
பகைத்ததன் மனைவியுமாக நின்ற பாற்
படைக்கதி பதிஉடல் வெடவெடக்கிறான்;
புகைத்தன அறி;வினிப் புடை பரந்ததாய்ப்
புலப்படும் பிறப்பிடம்' என்ற போதினில்,
நகைத்தன விளக்குகள் நாற் புறத்திலும்;
நடிப்பு மேடையிற்திரை விழுத்தப் பட்டது.

அழுத கண் ணீரிடை அலர்ந்த மென்னகை
அழகிய வசந்தியின் விழியில் நீந்திற்று;
தொழுதனள்; 'நாம் இனித் தொலைந்து போவதே
தூய'தென் றாள்; அவன் துடித்துப் போயினான்;
கழுதை என் றெண்ணினான் அவளை; ஆயினும்
கைஅவள் கைகளிற் கோத்து மேற்சென்று,
'பழுதெதும் நிகழ்ந்ததா? இல்லையே!' எனப்
பார்வையிலே கொடும் பழிப்பைக் கொட்டினான்.

நிகழ்ச்சிகள் முடிந்ததால் எழுந்த மாந்தர்கள்
நிறைத்தனர் நடையினை, நெரிக்க லாயினர்;
நெகிழ்ச்சியை அடைந்த ஓர் உளத்து மாரனோ
நித்திரை விரும்பிய மாரி நீங்கிப் போய்த்
துகிற் சில உரிந்த வெண் தொடைகொண் டாளினைத்
தொடர்ந்திடத் துணிந்தனன்; தூரக் கண்டதும்,
புகழ்ச்சிகள் கோத்துத் தன் விழியில் எய்கிறான்;
புறப்படும் அவள் வழி யோடும் போகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது வாழிடம் அகன்ற பேரறை;
ஆயிரம் அழகிய பொருள்கள் கொண்டது;
தவளைகள் போல் ஒரு பெட்டி பாடிடும்,
தரும் சில காட்சிகள்; வாசக் குப்பிகள்,
பவளம் செய் வனவிரல் நகத்தை, வாயிதழ்
பழுக்கவைத் திழுக்கிற வண்ணப் பூச்சுகள்—
இவைகளைக் கண்டிறு மாந்த காமுகன்
இவ்வுல காட்சிதன் னதுவென் றோர்கிறான்.

ஏதிவண் புகுந்த?' தென்றியம்பி னாளினை
இமைப்பிலா விழிகள் கொண்
டெதிர்கொண் டான் அவன்;
'காதலின் கடவுள் நான்!' என்று கூறித்தன்
கன்னத்தி லேஒரு குழியைக் கிண்டினான்;
'ஆதலின்?' என்றனள் அழகி; ஆண்மையை
அவமதித் திடுதல் கண் டவிந்தும் ஆசையால்
'நீதரும் இன்பத்தை நத்தினேன்!' என
நேரடி யாகத்தன் நினைப்பைக் கூறினான்.

தொகை ஒன்றைத் தெரிவித்தாள்; தெய்வ நிந்தனை
துணுக்குறச் செய்தது? பணமில் லாததால்,
நகை ஒன்றை அவன்தர நாரி பெற்றனள்;
நடவடிக் கைகள் சில எடுக்கப் பட்டன;
பகைஒன்றைப் பகை சென்று மோதல் போலவே
பசையற்ற உடல்களும் சேரலாகுமோ!
முகைஒன்றை மலர்த்தினாள் மனிதை; மாரனோ
'முத்தம் ஒன் றிரன்',டென முதலிற் கேட்கிறான்.

'இரண்டுசொல் லேனும் நீ இனிக்கப் பேசுக;
இப்படி என்னைப்பார்!' எனமொழிந் தனன்;
சுரண்டினள் புருவத்தை அந்தச் சுந்தரி;
சுவைப்பிது புதிய தென் றெண்ணிச் சோர்ந்தனள்;
மிரண்டனள், ஆயினும் மிடுக்குப் பார்வையாள்,
'மேனியிற் சிறந்த தோ மொழி?' என்றாய்கிறாள்;
புரண்டனர் இருவரும் பிறகு; காலமை
புலர்ந்தவர் முகங்களிற் புளிப்பைக் காட்டிற்று!

படுக்கைவிட் டெழுந்த காதலன் அக்காரிகை
படைத்த ஊர்ப் பானத்தைப் பருகி, வீதியில்
உடுப்பினை அணிந்துகொண் டிறங்க லாயினான்;
'உருப்பளிங் காயினும், ஊமை யாகத்தன்
இடுப்பினுக் கின்பமே நல்கி னாளன்றி,
இன்னுயிர்க் கெவ்வகைச் சுவைகி டைத்த?' தென்
றடுத்ததாய் மனையவள் நினைவு வந்திட,
அவள்விழி யோ டிதை ஒப்பு நோக்கினான்!

'பார்த்தின்பம் அடைவதோ டமைதல் இன்றியே,
பழையஓர் பாணியில் உடல் இரண்டினைச்
சேர்த்தின்பம் விழைந்த அச் செய்கை யாளர் நம்
செகத்துக்குப் புதியவர் போலும்; நன்று, நான்
வேர்த்தஞ்சி விழுந்திலேன்! அவர்தந் தேகிய
வெள்ளைக்கல் மோதிரம் விலை உயர்ந்ததே!
போர்த்திக் கொண் டவள் பின்னும் புதைக்கும்கட்டிலிற்
போய்விழுந் தமைதியாய்த் துயில் தொடங்கினாள்.

விடுதியிற் தங்கிய வேணி லாளையோ
விருப்பொடு சூழ்ந்ததோர் இளைஞர் நீள்படை;
அடிபிடிப் பட்டுள்ளே நுழைந்த வர்களுக்
காசனம் தருமுன்னே அமர்ந்து கொண்டனர்;
படபடத் தெழில்உடல் பதறி நின்றவள்
பரிதவிப் பிடையிற் தன் பதியை எண்ணினாள்;
'கொடுப்பதில்!' எனச் சில கேள்வி கேட்டது
கூட்டம், அவ் வலமந்த பாவை யாளிடம்.

'சடுதியிற் திரும்புதல் நோக்க மோ?'-'இன்றேல்,
சற்றிந்தப் புவியினைச் சுற்று வீர்களோ?-
'தொடை, இடைச் சுற்றள வென்ன?'-'மார்பகம்
தூக் கிக் கோர் விளம்பரம் தருதல் கூடுமோ?'-
படமெடுப் புகளிடை இந்தப் பாங்கினிற்
பலபல விடுப்புகள் வேண்டப் பட்டன;
'விடுக, இப் பொழுதெனைத் தனிய!' என்றவள்
வெறுப்புடன் விளம்பினாள், விலகி னார் அவர்!

கணவனுக் காய்வெந்து காத்தி ருக்கிறாள்;
கதவினைத் திறந்தவன் கரத்தைக் காண்கிறாள்;
பிணமெனத் தெரிந்ததப் பெரியன் வாண்முகம்
பிரிவினாற் தானெனப் பேதை கொள்கிறாள்;
இணைவதற் காய்எழுந் தருகில் ஏகினாள்;
இருமலர்த் தொடை இடை இறுக்கப் பட்டனன்;
'மணம் எனப் படுவது மடமை!' என்றந்த
மாரனோ பொன்மொழி ஒன்று திர்க்கிறான்!

'எப்படி?' என்றவள் எதிர்த்துக் கேட்கவும்,
'ஏனடி, தொடுவதால் அடங்கும் மையலை
அப்படி அப்படி யேவ ளர்க்கிற
அருமையை எனது பேராணைக் குட்படும்
இப்படி யார் கள் கண் டிருக்கி றாரடி;
என்னையும் மிஞ்சினார் இவர்கள்; நீமட்டும்
ஒப்பிடு, நம் மண ஒப்பந் தத்தினை
ஒடித்து நாம் தனித்து வா ழலாம்!' என்றோதினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உடல்களாய் மக்களை உடைத்தம் மேலவர்
உணர்வையும் உயர்வையும் ஒழித்த தாங்கள் இம்
மடமையை மெச்சுதல் மரபொன் றாயினும்,
மறுபடி உளறுதல் தவிர்த்தி டீர், ஐய!
கடவுளின் ஆணையைப் புறக்கணித்தொரு
கயமையை நிலத்தினில் நீர்ந டத்திடக்
கடவிரோ?' எனச்சில கருத்தைக் கூறித்தன்
கண்களிற் சேலையின் தலைப்பைத் தேய்க்கிறாள்'

அயலவன் ஒருத்தியை நேற்றுக் கூடிய
தறியவைத் தான் அவன்! அதற்குப் பின்னரும்
புயலடித் தொருநெடும் பொழுது போயிற்று;
'புரளியிற் தேர்ந்தவர் தாங்கள்; தங்கள் அம்
மயலினிற் பிறக்கிற மகவை நான்கொள்ளும்
வரம் அளிப் பீர்!' என்றம் மலரி கோரினள்;
'வயது வந் ததும், கரு அறுத்துக் கொண்டதால்,
மனிதையர் உன்னைப்போல் மல!'டென் றான் அவன்.

இருவிழிக் கடல் மடை உடைத்துப் பாயவும்,
இனிய கற்பனை என மிதந்த பூண்முலை
பொருமலுக் கிடையிலே பொங்கி வீழவும்,
பொழுது பட் டதுவென முகம் இ ருட்டவும்,
எருமையைக் கண்டநீர் எனக் க லங்கினாள்;
'இதுபெரும் பழி!' என இடிந்து வீழ்கிறாள்;
ஒருநில நூலினை எடுத்துப் போய் அவன்
ஒதுக்கமாய் இருந்துகொண் டதைப் புரட்டினான்.

'இறப்பிந்தப் புவிமிசை இல்லை யாதலால்,
இனிப்புக்கு மட்டுமே காதலாம்; பிள்ளை
பிறப்பிக்க நாம் என்ன புழுக்க ளா?' என்றும்,
'பெருப் பித்தல் 'குடும்ப'த்தைப் பிழை!' என்றும்பெரும்
திறத்துக்குச் சிகரமே சமைத்த மக்களின்
திருத்தியும் புதுக்கியும் பதிக்கப் பட்டுள
'அறத்திரட்' டினிற்கண்டவ் வழகன் பூரித்தான்;
ஆனந்தி வெறிகொண்டாள் போல நிற்கிறாள்!

'பேழையிற் குழந்தைகள் பெறுவிக் கும்தொழில்
பெரியதாய் நிகழ்ந்ததுண் டெனினும், இன்றந்த
ஏழமைப் பாற்பட்ட நிலைமை போய், மக்கள்
இருப்பவர் வாழ்வழி தரும் விஞ் ஞானநூற்
தோழரைப் போற்றுதும்!' என மு டிந்ததைத்
தொடர்ந்திரு முறை படித் தறிந்து கொண்டவன்,
'வீழுக, விழி நுதல் வீம்பெலாம்!' என்றோர்
வீரிய வாசகம் தனை மு ழக்கினான்.

'நிறுத்துக கூச்சலை, நில்லும்; வீண்தொழில்
நினைப்புகள் அகற்றுங்கள்!' என்ற பெண்ணின்பால்,
'தொறுத்திது வரைஉனைப் புணர்ந்து வாழ்ந்தது
போதும்!' என் றுரைப்பினான், புறப்பட் டான்; பகல்
கறுத்தெங்கும் இருண்டது காமத் தாள் முன்னர்;
காலினில் வீழ்ந்தனள், கதறினாள்; அவன்
'வருத்தங்கள் சேர்த்தனை வாழ்வில் நீ; பின்னும்
வசனங்கள் விளைப்பதேன்?' எனவிட் டேகினான்.

கோயிலின் உட்புறம் புழுக்கம் என்றொரு
கொள்கையால் வெளிவந்த தெய்வம் போல், அதன்
வாயிலின் எதிர்ப்புறம், மாவின் கீழ், இன்னும்
வற்றிப்போய் விடாத சிற்றோடை ஓரத்தில்
போயிருந் தென்னவோ புனைந்தி ருக்கும்ஓர்
பொடியனைக் கண்டவன் காமன், பொங்கினான்;
'நீஅவ னவன்?' என்று புருவ வில்லினை
நெரித்தனன்; அறிஞனோ நிமிர்ந்து நோக்கினான்.

(தொடரும்)

தேனருவி

இலங்கையர்கோன் நினைவுவிழா

அமரர் இலங்கையர்கோன் நினைவு விழாவை சிறப்பான முறையில் கொழும்பில் கொண்டாடுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை தேனருவி—விழாக் குழுவினர் செய்து வருகின்றனர்.

மேற்படி விழாவில் இலங்கையர் கோனின் 'மிஸ்டர் குகதாஸன் நாடகத்தை, இலங்கை வானொலி தமிழ் நாடகப் பொறும்பாளரான திரு. எஸ். சண்முகநாதன் அவர்கள் தயாரிப்பில்—'ஈழக்கலை மன்றம்' மேடையேறுகின்றது.

மேலும் விழா பற்றிய விபரங்களை 'தேனருவி' கார்த்திகை ஊற்றில் எதிர்பாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சில் எனினும்...

அட்டை சொல்லும் கதை

'நுஃமான்'

கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் தன்னந் தனியாக உட்கார்ந்திருக்கிறேன். மலைமுகட்டில் இருந்து சரியும் அருவியின் வேகத்தில் உணர்வலைகளைப் புரட்டி விளையாடும் இன்ப நினைவுகள். பச்சைத் தளிர்க் கொடியில் அலர்ந்து, தென்றலின் அலைவில் இதங்கண்டு இன்மணம் பரப்பும் மலரின் குளுமை உணர்வோடு கலந்து, வயம் பிறழா வகையில் இதயத்தின் உணர்ச்சித்தந்திகளை மீட்டுகிறது.

பக்தர்களின் வரவால் நிறைந்து அமைதியில் மூழ்கி, சாந்த சொரூபியாய் நிமிர்ந்து நிற்கும் மருதியின் காவலில், எதிரே பரந்து கிடக்கும் வளைகுடா. அலைகளுக்கு மட்டும் ஒறுப்பு. இருந்திருந்தாற் போல் ஒன்று சலார்...!! பாதத்தை நனைத்துச் செல்வதில் இன்பம்.

மற்றும்படி; 'களுக்...! களுக்...!

வாலைக்குமரி உணர்ச்சி மயக்கத்தில் உதிர்க்கும் சிரிப்பைப் போன்று. குடாவின் அந்தத்தை விட்டுச்சற்று உயரத்தில் புடமிட்ட பொன் தட்டைப் போல் ஒளிரும் பூரணச் சந்திரன்; வெண் பஞ்சுக் கூட்டம் ஒட்டிய பளிங்குத் தட்டைப்போல் பளபளக்கும் வானத்தகடு. வானமெங்கும் சிதறிக் கிடக்கும் முத்துப்பரல்கள். எந்தக்குபேரன் குவித்து வைத்தானோ? அவற்றை ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கும் பிரவத்தனத்தில்' காலத்தை வியர்த்த மாக்கும் தென்றலின் உருவில் சற்றுத் தடித்த ஊதல் காற்று.!

குடாவில் பொற்குழம்பு கொதிக்கிறது!

சந்தேகத்தில் அள்ளிப் பார்க்கிறேன். வெறும்நீர்தான்! உவர்நீர்!

சந்திரனின் எக்காளச் சிரிப்பில் சிதறும் ஒளிக்கற்றைகள்!

என்னை ஏமாற்றியதில் பெருமிதமோ?

''என்ன செஞ்சிக் கிட்டு இருக்கீங்க?''

காந்தள் விரல்களின் தீண்டுதலில் மெய்சிலிர்த்து யாழின் மெல்லிய நரம்புகள் உமிழும்தொனி,

அவள் வந்து விட்டாள்.

என் தலை தானாகவே திரும்புகிறது.

என் இதயத்தைக் கவ்விப் பிடிக்கும் காந்தத் துணுக்குகள் தான் அவள் விழிகளா?

என்நெஞ்சைத் துளைத்து அங்கு எதைத் தேடுகிறாள்?

ரோஜாவின் மிருதுவில் தோய்ந்த அவள் கன்னக் கதுப்புகளில், என்பார்வை செஞ்சந்தனக் குழம்பைத் தடவுகிறது,

தங்கக் கடைசலின் பளபளப்பில் மினுங்கும் அவள் அழகின் ரம்மியத்தில் மனங்கிறங்கி, வான முகட்டைத் தேடிப் பறக்கும் வெண்புறுவாக என்மனம் மேலே...மேலே... செல்கிறது. அதன் பாதங்களை நினைவுறுத்தும் அவள் செவ்வரத்தை அதரங்களில் வெடித்து உதிரும் முறுவல்......... மதங்கொண்டு அலையும் என்மனதை, அடக்கிப் பிடிக்கும் அங்குசத்தை நெகிழ்த்தி வேடிக்கை பார்க்கிறாளா.?

''உன் நினைவுதரும் போதையில் மயங்கிக்கிடக்கிறேன்.''

இதயத்தின் ஆழத்தைத் துருவிடும் என்வார்த்தையில் இழைபாடும் தாகத்தைப் புரிந்து கொண்டாளா?

அதே முறுவல்—!

''இப்படி வந்து உட்காரேன்!''

அவள்கையைப் பற்றிப் பக்கத்தில் இருத்துகிறேன்.

எண்ண அலைகள் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி — பிரசவத் அடிப்பு!

என்றுமில்லா உணர்வுக்கு முறல்கள்.

''நீ இப்படியே தினந்தினம் வந்தால் வீட்டில் ஒருத்தரும் கேட்கிறதில்லையா''?

நா பிரசவிக்கும் வெறும் வார்த்தைகள். அவள் வராவிட்டால்—?

''எல்லாரும் தூங்கினத்துக்குப் புறகுதானே வாறன் ஒருவருக்கும் தெரியாது''!

''தெரிந்தால்என்னசெய்வே''?

'நான் உங்களைத்தான் கல்யாணஞ் செஞ்சிக்கப்போறன் எண்டு சொல்லுவன்.'

'அதுக்கு அவங்க சம்மதிக்காவிட்டால்...?'

இன்னு கண்ணுக்கு மெய்யாக் கிடக்கே இம்மிட்டுப் பெரிய கடல்...!'

வைரத்தில் பாய்ந்த ஆணியா அவளின் அன்பு?

'உஸ்...'

என் விரல்களில் அவள் இதழ்கள் புதைகின்றன.

'நீங்கள் என்னை உட்டுட்டுப் போயிர மாட்டீங்களே?'

அம மனதில் உளறும் ஏக்கத்தின் பிரதிபலிப்பு!

'சீ அசடு குழந்தை மாதிரி!'

வானத்துச் சந்திரன் அறுந்து கடலில் விழுந்து விடுமா?

அவள் சிரிக்கிறாள். சிந்தை மயங்கும் சிரிப்பு.

வானில் நெளியும் ஒளித்துளிகளுக்கும் அவள் பல் வரிசைக்கும் நெருங்கிய ஒற்றுமை.

'அவளின்றி வாழ்க்கை நகருமா?'

ஒரு கணம் சிந்திக்கிறேன்.

மனக்கண்ணில் ஒரு சூன்யவளையம் மின்னி மறைகிறது.

ஊரின் கொள்ளிக் கண்களில் மண்ணைத்தூவி அவளை நான் சந்திக்கப்படும் அவதி...?

அவளின் விழிக்கடை பேசும் ஒரே ஒரு வார்த்தைக்காக வெறிநாய் போல் அவள் வீட்டைச் சுற்றி அலைந்த நாட்கள்; தனிமையில் அவளைச் சுற்றியே குதிர்ந்த எண்ணங்களின் தினவைத் தாங்க மாட்டாது தவித்த இரவுகள்! மாலை மங்கையின் குளிர்ந்த பார்வையினால் வெப்பம் தணிந்து கிடக்கும் நெருப்புக் கோளம் கக்கும் குங்குமப் புகையில் அவள் உருக் கண்டு, அக்நித் தகிப்பில் வெந்து கருகிய நினைவுகளெல்லாம் இப்போதுதான் என் நெஞ்சில் குதிர வேண்டுமா?

அந்த நினைவுகளில் தான் எவ்வளவு இதவு!

'சலார்...!!'

நீட்டிக் கிடக்கும் பாதங்களை முந்திச் செல்லும் அலை.

'களுக்...!களுக்...!!

உணர்ச்சித் திமிறலில் நெகிழ்ந்து, இன்பநாதம் இசைக்கும் இதமான தொனி.

அவளா? அலையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளியும், அலையும் கட்டிப் புரளும் லாவண்யம்.

காந்தளும், என் கரமும் உறவாடுவதில் இன்பக் குளுமை.

காற்றின் வருடலில் நெளியும் விளக்குச் சுடரைப்போல், இன்ப வேட்கையில் துடி துடிக்கும் மனம்.

பழீலா வின் தலையின் அழுத்தத்தில் என்மடி கனக்கிறது.

நிலாவொளியில் தகதகக்கும் கழைக்கரம் என் கழுத்தை வளைந்து...

அவள் அதரங்கள் நறையின் ஊற்று.

கடலும், தரையும் பின்னிப் பிணைந்து...

சந்திரன் மேகக் குமரியைக் கட்டி அணைக்கிறான்.

நாணத்தால் குப்பென்று அடைத்துக் குருதி சுரந்து சிவந்த வதனத்தில் மின்னும் வியர்வைத் துளிகளுக்குப் போட்டியாக, ஆள்கொல்லிப் புன்னகை உதிர்க்கிறது.

2

கழுத்தறுபட்டுத் தலைகீழாகத் தொங்கும் அரைவட்ட நிலா. மகரவிடாயில் எண்ணை எல்லாவற்றையும் குடித்துவிட்டுக் குருடுபத்தும் விளக்கைப் போன்று, மரணவஸ்தையில் துடிக்கும் வானத்து மீன்கள். சந்திரனை அணைக்கப்போய், கன்னத்தில் அறைபட்டு கன்றிக் கறுத்தமுகில் என் மனமும் அதே முகிலா?

நேஞ்சைக் குமட்டிவரும் பெருமூச்சின் வெப்பத்தால் கடல் வற்றிவிடாது.

தூரத்தே ஒலிபரப்பியின் அலறல். போதாக்குறைக்கு மேளதாளம், நாதஸ்வரம்... காற்றில் ஊர்ந்து வருகின்றன.

அரக்கனின் வெறிக்குரல்போல் தொனிக்கும் அந்த ஒலி என் செவிப் புலனைக் கிழித்து, என் நெஞ்சத்துள் வெறித்தனமாகப் புகுந்து என் ஆசைகளை, எண்ணங்களை, இன்ப நினைவுகளைக் குத்திக் குதறிப் பிய்த்து எறிகிறது. பழீலாவுக்குத் திருமணம்!

உள்ளத்தையும் உடலையும் என்னிடம் அர்ப்பணித்துவிட்ற அவனுக்கு எதைக் கொடுக்கப்போகின்றாளோ?

'பாவம் பழீலா!'

அடி வயிற்றில் இருந்து சுழியோடிவரும் பெருமூச்சோடு கலந்து மறையும் வார்த்தை.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றிவைக்கும் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து பார்த்தால்; பழீலாவின் தந்தை செய்தது மகா தவறு.

நான் என்ன ஒன்றுக்கும் லாயக்கற்றவன் என்ற நினைப்பா?

என் உழைப்பின் ஆழத்தில், மிதக்கும் என் குடும்பத்தை ஒரு முறை நினைத்துப் பார்த்தால் ஒருவேளை என்திறமை புலப்படக் கூடும்.

வேலி இடுக்குகளின் துளையூடே என்னையே துருவித்துருவிப் பார்க்கும் வண்டு விழிகளை எண்ணித்தான் என் அழகை மதிப்பிட வேண்டுமா? அத்தனையும் வெறும் பித்தலாட்டம்.

'உன் விருப்பத்துக்கெல்லாம் மசிந்து கொடுக்க என்னால் முடியாது' என்ற அசட்டுக் கௌரவத்தில் ஜனித்த வைராக்கியத்தில், பணத்திமிரில், புதுமாப்பிள்ளை தேடி மகளுக்குக் கலியாணம் செய்து வைத்து அவளின் விழி நீரில் அழகு காணும் பழீலாவின் தந்தையின் சுயரூபம் என் மனக் கண்ணில் விரிந்து விஸ்வரூபமாகி...

'சை மனிதன்'!

என்ற தொனியில் மடிகிறது.

தலை உச்சியில் விண்ணென்ற வலி.

மகளின் கலியாணத்தில் தலையிட்டுக் குழப்பியதாகக் குற்றஞ் சுமத்திப் பிழந்த தலைவெடிப்பு இரணத்தில் சுரக்கும் தினவை வெறும் விரல்களின் வருடல்தணித்து விடுமா?

'அவளின்றி என் வாழ்க்கையில் சாந்தி நிலவாதா'?

அதே சூனிய வளையம் மின்னி மறைகிறது.

'கேட்டியாடி புள்ள செய்திய''

'என்னயாங்காது'?

'உடையார்ர பழீலாப் பொட்டைக்கு வவுத்தில நாலுமாச மாண்டி'!

'அடியலாத்தா! போனமாயந்தானடி அவளுக்குக் கலியாணம் முடிஞ்ச'!!

'எல்லாம் அல்லாடகுதறத்துடி. இல்லாட்டி புரியன் காறன் அவளத் தலாக்குச் சொல்லிப்போட்டு ஊட்ட போய்ப்படுப்பானு'?

சந்திக்குச் சந்தி படலைக்குப் படலை இதுதானுபேச்சு'?

ஏழனப் பார்வை சிந்தும் கண்களின் தாக்குதலில் என்மனப் பறை அதிர்கிறது. மனவேக்காட்டில் உள்ளம் குமைகிறது.

இந்தச் சம்பவம் தரும் அதிர்ச்சியை அவளால் தாங்க முடிகிறதா?

இதயம் சுக்கல் சுக்கலாக நொருங்கிச் சிதறிவிடாமல் வைரம் பாய்ந்து இருப்பதற்குக் காரணம் அவள் வயிற்றில் உறையும் என் நினைவுச் சின்னமா?

மாலையின் பிரசவ நோக்காட்டில் இரவு ஜனிக்கிறது.

தன்மானம் காய்ந்த சருகாக உதிர்ந்து விட்டதாக உடையாரின் உள்ளம் உறுத்துகிறது. இழந்த தன்மானத்தைத் திரும்பப் பெறும் முயற்சியில் உடையார் வீட்டிற்குள் நுழைகிறார்.

தந்தைக்குந், தந்தைக்கும் வார்த்தைப் பரிவர்த்தனை.

'உடையார் உங்கட மகளுக்கு மாப்பிள்ளகேட்டு எனக்கிட்டயே வாறங்களே நீங்க செஞ்ச காரியங்களை கொஞ்சமாவது யோசிச்சிப் பாத்தங்களா'?

'ஆண்டவனுக் காவண்டி அதயெல்லாம் மறந்துட்டு...'

எண்ட சொத்தையில் செருப்பால அடிச்சாப்பில சொன்னதை எல்லாம் மறந்துட்டு, ஊரெல்லாம் காறித்துப்பற அந்தப் பொட்டய எண்ட மகன் கலியாணம் பண்ணிக்கணும் எண்டு சொல்றங்க என்ன?'

உடையாரின் முகம் சுண்டி, உடல் கூனிக் குறுகி...

அதை என்னால் சகிக்கமுடியும் ஆனால்...? ஆனால்...?

'பழீலாவை நான் கலியாணம் செய்துக்கிறேன்.'

'டேய் உண்ட தலையப் புளந்தத இதுக்கிடையில மறந்துட்டயா'?

வார்த்தை தடித்துப் பறக்கிறது.

'அவள் எனக்கு ஒரு துரோகமும் செய்யவில்லையே'!

'எலிகடிச்ச பழம் எங்கறதை நினைச்சிப் பாத்தயாடா?'

'அந்த எலியே நான் தான் என்ற திருப்தி போதும்.'

'துலைஞ்சிபோ! நீ எக்கேடு கெட்டாத்தான் எனக்கென்ன'

மசிந்து கொடுக்காததில் இரும்பு வளைகிறது.

உடையாரின் கண்களில் மின்னும் கனிவு இதற்கு முன் எங்கு போய் இருந்ததோ?

'களுக்...!' பழீலாவின் இதய நாதம்.

என் இருதயத்தைக் கப்பிக்கிடக்கும் இருளைக் கிழித்து, செவிப் புலனில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கிறது.

(யாவும் கற்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை-தக்ஷிண கான சபா

கானலோலன்

இன்னிசையாலே ஈசன் மனதை எளிதில் உருக்கி இன்னருள் வரம் பெற்ற இலங்கை வேந்தன் இராவணன் ஏத்திய தாக இயம்பிடும் எழில் மிகு தலமே திருகோணமலை. மேடை ஏறித் ''தொம், நம்'' என்று ராகம் தானம் பாடின் சபையோர் கை கொட்டிக் கூச்சல் போட்டு ஒவ்வொருவராய் எழுந்து, கடைசியில் வெற்று மண்டபத்திற்கே பாடவேண்டிய நிலையில், இருபதாம் நூற்ருண்டிலும் ஒரு காலத்திலே திருகோணமலையிலும் இருந்ததுதான் என்று இன்று சத்தியம் செய்யினும் நம்ப முடியாத நிலையில் இருக்கிறது திருகோணமலைப் பெருமக்களின் கலை ஆர்வம். அன்று இராகத்தைக் கண்டு எள்ளி நகையாடிய மக்கள், இன்ருே இது என்ன கச்சேரி? இராகம் ஸ்வரம் பாடத் தெரியாத நிலையில் இவர் எதற்காக மேடையேறிஞர்? என்றெலாம் கேட்டு, இன்ன ராகம் பாடப்படுகின்றது என ஊகித்துக் கொள்வதற்குத் துடிக்குந் நிலைக்கு வந்துவிட்டனர் என்ருல், அதில்பெரும் பங்கு திருகோணமலையில் சென்ற பதினன்கு வருடங்களாக உழைத்து வரும் '**தக்ஷிண கானசபா**'விற்கே உரியது.

1947-ம் ஆண்டு பங்குனிமாதம் நான்கு மாணவிகளுடன் உயர் திரு. சுவாமி நடராஜானந்தா அவர்கள், சம்பிரதாயப்படி இச் சபாவிலே சங்கீத வகுப்புக்களை ஆரம்பித்தார். நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்த இக்கலாசாலை மூன்று வாரங்களுக்குள் ஏராளமான குழந்தைகளைத் தன்னுள். அடையப் பெற்றது. செல்வி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்கள் எதுவித வேதனமும் பெருது, இறைவியின் பணியாய், இசைக்கலையை வளர்க்கும் பொருட்டு, இலவசமாய் வாய்ப்பாட்டுச் சொல்லி வைப்பதாலே பல தர்ம கர்த்தாக்களின் நன்கொடைகளுடன் 1947-ம் ஆண்டு ஆடி மாதம் வயலின் உபாத்தியாயர் ஒருவரை நியமித்தனர். இக் கலாசாலையில் உபதலைவராய் நின்று உயிர் கொடுத்த திருவாளர். இராமச்சந்திரா அவர்கள் (திருகோணமலை இந்துக் கல்லூரியிலிருந்து மாறிய தலைமை ஆசிரியர்) சங்கீத அறிவுள்ளவர். மாதமொருமுறை குழந்தைகளைப் பரீட்சித்து, அவர்களின் வளர்ச்சி கண்டு பெரிதும் பாராட்டினுர். இசைப்பணியின் வளர்ச்சி கண்ட சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள் வகுப்பு நடாத்த இந்துக் கல்லூரியில் ஓர் அறையைக் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். கலாசாலையில் வருடாந்தப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு மாணவியர் வகுப்பேற்றப்பட்டனர்.

1948-ம் ஆண்டு வீணை கற்பிப்பதற்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்னும் பிராமணர் ஒருவர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு முகாந்திரம் பாலசுப்பிரமணியம் அவர்களால் போசனமும், இருப்பிடமும் இலவசமாய்க் கொடுக்கப்பட்டதால் நூற்றைம்பது ரூபா வேதனம் பெற்றுக் கற்பித்தார். இப்பணம் அவ்வப்போது நடாத்திய விழாக்களிலே சேர்க்கப்பட்டதே. இக் கலாசாலையின் பரிசுத்த நோக்கத்தையும், உண்மையான சேவையையும் கண்டு நாளாந்தம் மாணவியர் வந்து சேர்ந்த வண்ணம் இருந்தனர். இரு வருடங்களுக்குள் எழுபத்தொரு மாணவியரைப் பெற்ற இக்கலாசாலை 1951-ல் வட இலங்கை சங்கீத சபையினர் நடாத்தும் பரீட்சைகளிற் கலக்க மாணவியரை அனுப்பியது. இப்பரீட்சைகளிற் பங்குபற்ற ஒரு சில வருடங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டாலும் பின்னர், 'வட இலங்கை சங்கீதசபை'யோரை தக்ஷிண கான சபையோர் பலமுறைகளில் வேண்டியதால் தற்பொழுது ஆசிரியர் பரீட்சை தவிர ஏனைய பரீட்சைகள் திருகோணமலையிலேயே நடாத்தப்படுகின்றன, வருங்காலத்தில் ஆசிரியர் பரீட்சையையும் திருகோணமலையில் வைப்பதற்கு அவர்கள் மனங் கனிந்து உதவுவார்கள் என்பது திண்ணம். அம்பாள் உள்ள நிறைவே நோக்கமாகக் கொண்டு நடக்கும் இவ்விசைக் கல்லூரி இறைவி அருளால் இதுவரை நூற்றுக்கு நூறு சித்திகளே பெற்று வந்துள்ளது. நாளாந்தம் மாணவர்கள் அதிகரித்ததால் ஆசிரியர் பற்ருக்குறை ஏற்பட்டுள்ளது. திருவாளர்கள். எஸ். அருள்நந்தி, கே. கனகரெத்தினம், புரக்டர் சிவசுப்பிரமணியம், இறைவனடியெய்திய திருகோணமலை—முன்னுட் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. சிவபாலன் முதலியோரின் உதவியோடு சென்ற இருவருடங்களாக வருடத்துக்கு 1800-00 ரூபா வீதம் நன்கொடையாக அரசாங்கம் வழங்கி வருகின்றது. கலை ஆர்வத்துடன் ரூபா 150-00 பெற்று இசை கற்பிக்கத் திறமை வாய்ந்தவர்களை அமர்த்துவது தான் இக்கலாசாலைக்குப் பெரும் பொறுப்பாகி விட்டது.

1957-ம் ஆண்டு ஆசிரியர் பரீட்சைக்கு செல்வி. பொ. கமலாதேவி என்னும் பெண் தோற்றுவிக்கப்பட்டுச் சித்தியெய்திஞர். இவ்விசைக் கல்லூரியினுல் இந்திய சர்வ கலாசாலைக்கு அனுப்பப்பட்ட இரு மாணவிகள் தற்பொழுது ''டிப்ளோமா'' பட்டம் பெற்று வந்துள்ளனர். அவர்கள் செல்வி. இராஜேஸ்வரி, சந்திரசேகரம், செல்வி. விஜய சௌந்தரி, தாமோதரம்பிள்ளை ஆவர். இவர்களில் ஒருவர் வேதனத்தின் தரம் பாராது ஆசிரியையாகக் கடமையாற்றுவதும், ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு மாணவியும் ஆசிரியையாகக் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கன.

இக்கலாசாலை மாணவியர் இங்கு பலபோட்டிகளிலும் பங்குபற்றிப் பல பரிசில்கள் பெற்றுப் புகழீட்டித்தந்துள்ளனர். இம்முறை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் நடாத்திய இசைப் போட்டியிலும் கலந்து பரிசில்கள் பெற்று மக்களின் பாராட்டுதலையும் பெற்றனர். காரியதரிசியின் அறிவித்தலை ஏற்று எத்தனையோ கஷ்டங்களிருந்தும் அவற்றைப் பொருட்படுத்தாது இசைத் திறமையைக் காட்ட எண்ணிக் கொழும்புக்குச் சென்று போட்டியில் பங்கு கொண்டனர். அதிலே ஏமாற்றம்? திரைமறைவில் நடந்தவை சந்திக்கிழுக்க வேண்டியதில்லை. சுருங்கச்சொல்லின் அங்கு திறமை மதிக்கப்படவில்லை. ராகம், தானம், பல்லவி பாடி, கேட்டவற்றிற்கெல்லாம் திரிகாலமும், நான்காம் காலமும் அனுலோமம் பிரதி லோமம் செய்து கேட்டபடியெல்லாம் இராக மாலிகையாக்கிய ஒரு பெண்ணை விலக்கி ''ஹம்ஸத்வனி'' இராகம் பாடத் தெரியாது தத்தளித்து, தாரஸ்தாயியில் மத்யமம் சேர்த்து ஸ்வரம் பாடிய பெண்ணைப்பரிசுடன் அனுப்பிய செயல் திருமலை மக்

கட்கு மட்டுமல்ல, அவர்களின் அரங்கேற்றத்தைக் கொழும்பு மேடையிற் பார்த்த பல சங்கீதாபிமானிகளுக்கும் முகத்திலே கரி பூசியதாக முடிந்தது. (இசையின் மகத்துவம்பாதிக்கப்பட்டது என்றும் இயம்பலாம்) கொழும்புச் சங்கீத ரசிகர்கள் இந்நிலையை நன்குணர்ந்து தாமாக முன் வந்து ஆறுதல் வார்த்தைகள் இயம்பியதையிட்டு தக்ஷிண கான சபையினர் கொழும்பு வாழ் ரசிகர்களின் பெருந் தன்மையைப் பாராட்டுகின்றனர்.

இக்கலாசாலை எதுவித வேதனமும் பெருது இசைத் தொண்டு புரிந்தும், பல விழாக்களிலும், கோயில் உற்சவங்களிலும் பங்கு கொண்டு சிறப்பித்தும், பணம் போதாமையால் **விருத்தியான** முறையிற் காரியம் ஆற்ற முடியாது தவிக்கின்றது. பல இசை, நாடக விழாக்கள் நடாத்திச் சேகரித்த பணம் கலாசாலையின் பெயரால் மிகுந்திருப்பதால் பல தர்ம சீலர்களின் உதவியுடன் ஒரு கட்டடம் எழுப்புவதே இக் கலாசாலையின் தற்போதைய குறிக்கோளாகும். கோணேசர் பூமியில் இயங்கும் இக்கலாசாலையின் தினவரவுப் பதிவுப் புத்தகத்தில் தற்போது நூற்றிநான்கு மாணவியர் உளர். இத்தக்ஷிண கானசபா செய்து வரும் இந்த இசைத் தொண்டினை ஆதரிக்க வேண்டியது இலங்கைவாழ் சங்கீதாபிமானிகளின் தலையாய கடமையாகும்.

குழந்தை அறிவு

குழந்தைகளை வளர்ப்பது பெரிதல்ல; அவர்களின் அறிவை வளர்ப்பதே அதைவிடப் பெரிது. அல்லது தானே வளரும் அறிவையாவது தடைப்படுத்தாமலிருப்பது நல்லது.

''சோற்றை உருட்டாதே! உருட்டினால் தாய் தகப்பனை உருட்டி விடுவாய்!'' என்று சொல்லாதீர்கள்.

''சோற்றை உருட்டிக் கொண்டிராதே! விரைவாய் சூட்டோடு சாப்பிடு! இன்றேல் செரிக்காது!'' எனச் சொல்லுங்கள்.

''சாப்பிடும் போது ஒரு விரலை நீட்டிக் கொண்டே சாப்பிடாதே! சாப்பிட்டால் குடும்பத்திற்கு ஆகாது'' எனச் சொல்லாதீர்கள்.

''சாப்பிடும்போது ஒரு விரலை நீட்டிக்கொண்டே சாப்பிட்டால் விரல் நகத்தால் கண்ணுக்கு ஆபத்து'' எனச் சொல்லுங்கள்.

''இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே! போனால் சாஸ்திரத்திற்கு ஆகாது'' எனச் சொல்லாதீர்கள்.

''இரண்டு கழுதைகளுக்கு மத்தியில் போகாதே! போனால் எந்தக் கழுதையாவது உதைக்கும்'' எனச் சொல்லுங்கள்.

— கி. ஆ. பெ விசுவநாதம்.

கலைஞன்

— செ. யோகநாதன்

எழுத்தாளர் கந்தசாமி பேனாவை உதறிக் கொண்டார். மனதுள் எழும் ரசவிகாரங்களை எழுத்தில் வடிக்க முடியாத நிலையின் ஆத்திரம் புருவக் கீற்றுகளின் நெளிப்பினில் தெரிகின்றது. அரிச்சுவடியைப் பார்க்கும் அரிவரி மாணவனின் கண் சுழற்சி. வரையறை செய்யாமற் தாள்களில் கீறாயும், வட்டமாயும் கீறுகின்றார். பேனாவிற்கு, எழுதும் வேட்கையின் உற்சாக வேர் அழுகிப்போய் விட்டது.

மேசையிலே **தட்டு வைக்கும்** சத்தம்.

கந்தசாமி நிமிருகின்றார்.

அவன் ஹோட்டல் பரிசாரகன்.

மேசையில் வைக்கப்பட்ட தட்டுகளில் றொட்டியும், இறைச்சியும், முட்டையும் வைக்கப்பட்டிருக்கின்றன.

உணவைப் பார்க்கும் பொழுது வயிற்றின் வெற்றிடம் நிறைவதைப் போன்ற மனப் பொலிவு. ஆனாலும் மன அடித்தளத்தில் தாளமிடும் அந்தக் குரல் ஒலிகள் ......

இன்றைக்கு மலருக்கு அவசியம் கதை தந்து விடுங்கள்...கடைசி நாள்... கடைசி நாள் ... மறந்து விடாதீர்கள்.'

'பசுமை' பத்திரிகை ஆசிரியரின் குரல் செவிப்பறையுள் வச்சிரமாய் ஒட்டிக் கொண்டு விட்டது.

கற்பனையின் ஆக்கிரமிப்பு அவரில் கதிர்மினுங்கா நிலை வெள்ளைத் தாளின் கசங்கல் குப்பைகள் கிழியுண்டும், கசக்குண்டும் சிதறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. விடி நிலாவின் வெளிறல் மனமெங்கும் வியாபிக்கிறது; அதோடு நெடுமூச்சுக்கள். பேனாவை மேசையில் வைத்துவிட்டு, முள்ளுக் கரண்டியையும் கத்தியையும் கைகளில் எடுத்து முட்டையில் குத்தி வெட்டுகின்றார். குருகுருத்துத் துணுக்காகும் மஞ்சட்கரு, கரண்டியின் கூர்நாக்குகளில் படிகின்றது.

2

'சீ! எவ்வளவு துப்பரவுகெட்ட நாய்ப்பிறவிகள்' நினைவுகள் வாழைமடல்களைப்போலக் கழருகின்றன. கடைசியில் மன நிகழ்ச்சிப் பரப்பில் வெறுங்குருத்தாக அந்தச் சம்பவங்கள் அருக்கூட்டுகின்றன.

தலைநகரைக் கிழித்துக்கொண்டு செல்லும் பிரதான வீதியின் இடதுபுற மருங்கிலே உள்ள 'ஹோட்டலின்' இரண்டாவது மாடியில் இப்பொழுது அவர் இருக்கின்றார். குளிர்சாதன வசதி இணைக்கப்பெற்ற அவ்வுல்லாசத் தனியுலகிலே கூட அவருக்கு, கற்பனை கைப்பிடிக்குள் வசப்படவில்லை.

'ஹோட்டல்' வாசலில் ஏறுகின்ற அவர், ஹோட்டலின் மருங்காக ஒரு முறை பார்க்கின்றார். அந்தக் கணத்திலே நெஞ்சிற்குள்ளே யாரோ சாக்கடை நீரை வீசி யெறிந்த உணர்வின் தகிப்பில் அவரது பார்வை அவிந்து சுருங்குகின்றது.

மனம், அருவருப்பில் மூக்கைச் சுளிக்கிறது.

ஹோட்டலுக்கு ஓரமாக உள்ள ஒழுங்கை நீளமெங்கும் பிக்கீஸ் பெட்டித்துண்டுகளால் அடைக்கப்பட்ட சிறுவீடுகள், அவற்றின் வாசற்புறத்திலே நிர்வாணமாக, சளிவழியும் அசிங்கமான முகத்தோடு குழந்தைகள் திரிகிறார்கள்,

'இவைகள் வீடுகளா?'

நெஞ்சப் பற்கள் நரும்புகின்றன. வீட்டு வாசல்களிலே இலையான் மொய்க்கும் மலத் துணுக்குகளும், ஜலவடிசல்களின் வடுக்களும், அழுகிய பதார்த்த அழுகல்களும் நித்திய வாசமாகிவிட்டன. சிக்குப் பிடித்த தலைமயிரோடு பீழைசாறும் கண்களைத் துடைத்துக்கொண்டு அவர்முன் பாத ஒரு பிள்ளைத்தாச்சி குள்ள வாத்துப்போல அசைந்து அசைந்து நடந்து வருகின்றாள். அங்கங்களை மூட முடியாமல் மேலுங் கீழும் கிழியுண்டும், நைந்தும் அழுக்கில் தோய்ந்து கிடக்கின்றது அவளுடைய ஆடை. கடவாய் அவிந்து, வீணீர் படிந்து காய்ந்துவிட்ட அயறுப்பொருக்குகள் வாய் அசைவில் உதிர்கின்றன.

'தொரை...தொரை...'

சொருகுபடர்ந்த அவளின் நெற்றியிலிருந்து, பொருக்கு வெடித்துச் சிதல்வடியும் கால்வரையிலும் அவரதுநோட்டம் வெறுப்புமிழ ஏறி இறங்குகின்றது,

இளஞ்சிவப்பில் ஒரு படம் போல, சுகாதார விழாக் காட்சிகள் அவரின்மனதுள் நீர்க்கோலம் போடுகின்றன. அவர் தான் சென்ற கிழமை நடந்த சுகாதார விழாவில் ஆரோக்கியமான தாய்க்கும் சேய்க்கும் பரிசளித்தார். அதைப் பார்த்த அதே கண்களால்...

அவர் கைகள் நெட்டி முறிக்கின்றன. 'ஆ! இந்த உலகந்தான் எவ்வளவு இனிமையானது. ஆனால் தூய்மையின் தன்மையை நோக்காது, அழுகலில் மனத்திருப்தி அடையும் இவர்கள், இவ்வினிமைக்குக் குந்தகம் ஆகின்றார்களே!'

3

வெள்ளைக்கரு நன்றாக வெட்டப்பட்டுத் தீய்கிறது. நிலவுக் கதிர்களின் உதயம் போல, யன்னல் வழியாக அவருக்குக் கதையின் கரு ஆடி அசைந்து அடியெடுத்து நடந்து வருவதைப் போன்ற மனக் கிளுகிளுப்பு. 'மனித சமுதாயம் இன்பத்தைத் துய்ப்பதற்காகக், கலைஞன் மனித சமுதாயத்திற்குத் தன்னுடையபேனாவின் வன்மையால் உல்லாசப் பூங்கா அமைத்துக் கொடுக்கின்றான்?

நம்பிக்கையின் ஒளி, வார்த்தைகளில் உமிழ்கின்றது.

யன்னலோரமாக அவர் நிற்கின்றார். கைக்குட்டையை எடுத்து, சட்டைக் காலரைமிதத்திக் கழுத்தைத் துடைக்கிறார். ஆயாசப் பெருமூச்சுவிட்ட அவரின் கண்கள் திடீரென வெளியே எகிறுகின்றன.

மீன் கௌவிய தூண்டிலைப் போல, மனம் நம்பிக்கையிற் துள்ளுகின்றது. இலேசான மனத் தூற்றலின் குளிப்பாட்டலிற்சிலிர்க்கும் பசுஞ் செடியாகின்றது மனம்.

பக்கீசு வீடுகளின் புறமாகஉள்ள 'கக்கூஸ்' சுவரிலே, ஒருவன், ஒரு பெரிய படத்தை ஒட்டிக்கொண்டிருக்கின்றான். அது—

நிர்வாணமான பெண்ணின் படம்.

யாரோ அவளை அணையத் துடித்து எதிரே நிற்பதுபோன்ற மோகமயக்கத்தில், அவள் தன்னுடைய உடலை நெளித்து இனக்கவர்ச்சியை அங்கங்களின் ஒவ்வொரு வளைவு நெளிவிலுங் காட்டி நிற்கின்றாள்.

அவருடைய மனம் நெகிழ்வுணர்வில் முறுகுகின்றது. சூரியனை நோக்கித் தாவும் கொடியைப்போல நெடுங்கோடாக மனதின் கற்பனைகள் சிதறுகின்றன.

மேசையை யன்னலோரமாக நகர்த்தி ஒரு வெள்ளைத் தாளில் பேனையை ஓடவிடுகின்றார் எழுத்தாளர்.

'மோகினி'

எழுதிய வேளையில் அவரின் வாயும் முணுமுணுக்கின்றது. 'மோகினி...மோகினி...நீ வெறும் படமில்லையடி...காந்தச் சிலையடி நீ! உன்னை வைத்து என்றுமே அழியாத அமர இலக்கியத்தை நான் படைக்கிறேனே, இல்லையா பார்!'

மீண்டும் அவளைப் பார்க்குந் துடிப்பு. அவளின் அங்கங்களிலே துளும்புவதெல்லாம் வெறும் வர்ணப் பூச்சாக அவருக்குத் தெரியவில்லை. செழுமையான தசையின் மினுமினுப்பில் மனிதரைக் கிறங்க வைக்குங் காந்தர்வ மோகினியாய் அவள் காட்சியளிக்கிறாள்.

எழுத்தாளர் மீண்டும் வெளியே பார்க்கிறார்.

மோகினி!

மோகினிக்கு கீழே—

அவரது கண்கள் ஊசிக் கூர்மையாகின்றன.

மின்னும் கண்களின் பார்வைக்குள் அவர்கள் இருவரது உருவமும் ரம்பக் கூர்மையிற் பாய்ந்து நெஞ்சைத்தாக்குவது போன்ற நெட்டுயிர்ப்பு, நன்னிலைச் சமுதாயத்திற்கு இடங்கள் தரும் முள்ளாணிகளாக அவர்கள் இருவரும் நடந்து வருகின்றார்கள்.

ஆணும், பெண்ணும்.

நெகிழ்ந்து சரியும் உடையிலே அவளின் உடற்பாகங்கள் தெரியத் தவிக்கின்றன. அவளைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு அவன் நடந்து வருகின்றான். தள்ளாடும் அவளுடைய கரங்கள், அவனின் கழுத்தைச் சுற்றியிருக்கின்றது. அவர்களின் நிலையில் குடியும், விபசாரமும் கோடிட்டுத்தெரிவது போல அவர் உணருகின்றார்.

மேலெழுந்து குமுறும் ஆத்திரப்பிழம்புகள், நரும்பலில் சுவாலையிட, கால்கள் தரையை உரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ய்ந்து அழுத்துகின்றன. அந்த ராத்மாவுள் ஒரு பாவ காரியத்தை நேரே நின்று பார்க்குங் குற்ற உணர்வு விஸ்வரூபமெடுக்கின்றது.

'சமுதாயம் நல்வழியிற் செல்லும் வேளையில் இங்கே விபசாரமும்... குடியும்... சாக்கடைப் பிறவிகள்...'

அவரது நெஞ்சம் கொதிப்பில் அனற்சட்டியாகின்றது. அவர்கள் இருவரும் கக்கூசிற்குள் போகக் காலடி எடுத்து வைக்கிறார்கள்.

அவளின் பின்னே அவன் உள்ளே புகுகின்றான்.

4

பேனையையும், தாளையும் அள்ளிக் கொண்டு வெளியே போக விரைந்தவர் மீண்டும் யன்னலடிப் பக்கம் செல்கின்றார்.

கக்கூசுச் சுவரை நோக்கிய கண்கள், திடீரென்று திகைக்கின்றன.

ஒருவன் மோகினியின் படத்தில் கை வைத்து இழுக்கின்றான்.

அகழியைத் தாண்ட விரையும் குதிரையினைப்போல, அவர் முகத்தினில் இன உணர்வுகள் வேகமாய்ப் பொங்கின.

'டேய்'.

அவர் தன்னை மறந்து கூவினார்.

கோபத்தால் அவரின் உடலே ஆடியது,

தட தடவென்று படிகள் எழும்பும் ஓசை, நிகழப்போகும் விபரீதமொன்றிற்கு அர்த்தம் கற்பிக்கின்றது.

5

வீதியின் ஓரத்தில் நின்ற பொலிஸ்காரனை அவர் கைதட்டி அழைக்கின்றார். அவரின் பின்னே அந்த ஹோட்டல் முதலாளி நிற்கின்றார்.

சமூகத்தின் இழிவைத் துடைக்க வீறுகொண்ட அவர்களின் கண்கள், கரங்கள் எல்லாம் இயக்க சக்தியின் உச்ச நிலையில் உழல்கின்றன.

என்றுமே சேரியின் அழுகலுள் நுழையாத கந்தசாமி, சமுதாய ஊழலைச் சுத்திகரிக்கச் செல்லும் வீரனின் பெருமிதத்தோடு முன்னே நடக்கின்றார்.

கக்கூஸ் வாசல்.

மனிதனே நுழையமுடியாத, அசுத்த நிழல் மறைக்கும் நரகம். சுகாதாரத்தின் குரல்வளையை அங்கே நசுக்கிக் கொன்று விட்டார்கள்.

அவரது கண்கள் சாத்தானை இழுத்து அடிக்கும் சாட்டையின் சீற்றத்தோடு, வாசலுள் தாவுகின்றன.

நாற்றம் மூக்கைப் பிய்க்கின்றது.

குமட்டி ஓங்காளிக்கும் வாயை மூடுகிறார் கந்தசாமி. ஆனாலும் நடையின் வேகம் குறையவில்லை.

திடீரென்று வீலென்ற ஒலி.

உலகைத் தரிசிக்கும் சிசுவின் முதற் குரல்.

கந்தசாமி வியப்பில் திடுக்கிட்டார்.

கக்கூஸின் நடுமையத்தில் அவரது கண்கள் சுழன்றன.

நிர்வாணமான ஒரு பெண், சுவர் ஓரமாகச் சாய்ந்து ஒருக்களித்தபடியே தியங்கிக் கொண்டு அனுங்குகின்றாள். அவளுக்குக் கீழே அவளின் பிரசவத்திற்குப் பாயாகக் கிடக்கிறது நிர்வாண மோகினியின் படம். அதன் மேலே கருப்பை கக்கிய திசுத் துணுக்களும், உடைந்த பன்னீர்க் குடமும், நஞ்சுக் கொடியும்...இவைகள் சேறாடித் தளதளக்கும் படுக்கையில் கொப்பூழ் கொடியோடு கிடக்கும் குழந்தை!

மோகினியின் மேல் புதிய மோகினி!

நாற்றம் மூக்கைத் துளைக்கின்றது.

கலைஞர், பொலிஸ்காரனை அழைத்துக் கொண்டு வீதிக்குச் செல்கிறார்.

'நாய்ப் பிறவிகள்!'

மனம் அருக்குளித்துக் குமைகின்றது.

5-8-62 திருமதி சிரோண்மணி பொன்னுத்துரை பிற்பகல் 7-30—8-00 வரை.

சுத்தசாவேரியில் ''தாரணி தெலுசுகொண்டி'' சௌககாலத்தில் அமைந்து விட்டது. அதனால் மேளம் கட்டவில்லை. கெம்பீரமான சாரீரம், சாதகக் குறைவால் அடிக்கடி அடைப்பதும், எடுபடுவதற்கு இருமுவதும் செருமுவதும் கச்சேரியின் அழகைக் கெடுத்தது. சாரீரம் இப்படி அடிக்கடி இடக்குப் பண்ணுவதற்கு இன்னும் எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். இதை அறிந்து விலக்கின் நன்று. மத்யமகால சாகித்யமும் இரண்டு காலத்தில் பாட அமையும் சிட்டைஸ்வரமும் உடைய கிருதியாதலால் முதல் உருப்படியாய் இதைப் பாடகர் தேர்ந்திருக்கலாம். ஆனால் உருப்படி சௌககாலத்தில் அமைந்துவிட்டதே! அடுத்ததாக பைரவி (''ஆசை தீர நினது முகம்'') ராகத்தில் சிறந்த பிடிப்புக்கள் காணப்படினும் சாதகமின்மையால் ஸ்ருதியை விட்டு அங்குமிங்குமாய் விலகியது நின்று நின்று பாட சாதகம் பண்ணின் நன்று. ராகம் ஒரே ஓட்டமாய் இருந்தது. ஆறுதலாகப் பாடியிருப்பின் நல்ல பிடிப்புக்கள் சோபித்திருக்கும். தாரஸ்தாயிபஞ்சமம் வரை சுத்தமாய் சாரீரம் பேசியது. மூச்சுத்தட்டப்போகின்றது என்பதற்காக வாயினால் ஸ்ருதியுடன் இணைந்து சில நிமிடம் நிற்கமாட்டாரா என்று இருந்தது. நிஸ ரீகரி ஸாரிஸ நீதப என்னும் பிரயோகம் ஓட்டத்தால் தலையில் அடித்தது போல் அபசுரம் கொட்டியது. கேட்போரும் மூச்சைப் பிடித்துக் கேட்கும் இந்த ஓட்ட நிர்ப்பந்தம், வயலின் வாசிப்பில் நிவர்த்தியாக ''அப்பாடா'' என்று சொல்லத்தோன்றியது. பிடில் காரர் தன்னை மறந்து பைரவி மழை பொழிவதும் பாடகர் நேரம் போகின்றதே என்று செருமுவதும், ம், ம் என்று பாடி ஞாபக மூட்டுவதும் தெரிந்தது. அன்பர்கள் மனத்தில்'' என்னும் இடத்தில் நிரவல் ஸ்ருதி விலகி சாதகமின்மையை மறுபடியும் ஞாபகப்படுத்தியது. ஸ்வரத்தில் முதலாம் காலம் அட்சரத்திற்கு 2 ஸ்வரம் அரைமணிநேரக் கச்சேரிக்கு அவ்வளவு நேரம் பாடியிருக்கவேண்டியதில்லை. கடைசியாகப் பாடப்பட்ட ''கந்தனை நினைந்து'' ஹம்ஸநாதம் இப்படியான அபூர்வராகங்கட்கு நிறைய சாதகம் வேண்டும். அல்லாமல் சோபிக்கவே சோபிக்காது. முதலிலிருந்து கடைசிவரை தாளக்கணிசம் நன்றாயிருந்தது. 'மொடியுலேஷன்' அதாவது சாரீரத்தை அவ்வப்போது அடக்கவும், திறக்கவும் கற்றல் வேண்டும்.

புரட்டாதி 23 பிற்பகல் 7-30 திலிருந்து 8 வரை திரு. V. N. பாலசுப்பிரமணியம்.

கச்சேரி மத்தியமாவதியில் 'வினையகுனி' என்னும் கிருதியுடன் ஆரம்பித்தது. மத்தியமாவதியின் தன்மை குறை நீக்குதல். அதனால் பெரியோர்கள் கச்சேரியின் முடிவில் மத்தியமாவதி பாடுவதற்கு உகந்தது என்று வகுத்தனர். இங்கு இப்பாடகர் கிருதி என்பதாலும் இதைத் தேர்ந்திருக்கலாம். ஆனால் ஒரு கோணத்தில் இருந்து மட்டும் பார்ப்பதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கச்சேரியை சோபிக்கவைப்பதற்கு ராகத் தேர்வு ஒரு முக்கிய அம்சம். சாரீரம் ஸ்ருதியுடன் இணைந்து சோபித்தது. இன்னும் சற்று மத்யம காலத்தில் பாடியிருக்கலாம். 'தியாகராஜா நீ ஸ்ருதய' என்னும் இடத்தில் அதீத எடுப்பில் ஸ்வரம் சோபித்தது டன் தியாகராசா பக்தியையும் எடுத்துக் காண்பித்தது. இந்த உருப்படியைக் கடைசியாய் பாடி இருப்பின் தியாகராஜா என்னும் இடத்தில் ஸ்வரம் கச்சேரிக்கே மகுடம் சூட்டியிருக்கும்.

அடுத்தபடியாக 'அத்தருணம்' என்னும் பைரவிக்ருதி ராகம் சில இடங்களில் மெச்சக் கூடியதாக இருந்ததாயினும் கலப்பின்றிப் பாடக் கற்றுக் கொள்ளல்வேண்டும். ராகலக்ஷணம் கற்கும் போது ஓர் ராகம் பாடுவதாயின் இன்னும் ஓர் ராகத்தின் சாயல் கூடத்தென்படாவண்ணம் பாடுவதே முறை என்பதே முக்கியமெனக் கற்பிக்கப்படுகின்றது. ஆனல் இங்கு பாடகர் பாடும் போது ராகம் பைரவியாய் ஆரம்பித்து முதல் ஆனந்த பைரவி சாயை காட்டி பின் முகாரியில் தோடியும் கலந்து விட்டதே. 'மதபத' என்னும் பிடிப்பில் தோடி சாயை பேசியதால் அடுத்த பிடிப்பாக 'பதநிஸ' பிடிக்கப்பட்டபோது இந்த குறையை நிவர்த்தி பண்ணிய வயலின் வித்வானின் பைரவி பேருற்றைப் போற்றுதிருக்க முடியவில்லே. பாடகர் சாகித்தியத்தின் கருத்தை உணர்ந்து பாடியது இங்கு குறிப்பிடத்தக்கது. தற்கால இலங்கை வானெலி வித்துவான்களில் சிலர் தேவாரங்களிற் கூட கொச்சை கொச்சையாய் உச்சரிக்கும் இந்த சகாப்தத்தில் அழுத்தம் திருத்தமாய் சொற்களை உச்சரித்தது போற்றவேண்டியதே. க்ருதி சுமாராய் அமைந்தது. 'உத்தம பிறவி' என்னும் இடத்தில் ஆரம்பித்த நிரவலே தாரஸ்தாயிவரை சென்று நிரவியிருப்பின் கருத்தை வெளிப்படுத்தப்பாடிய முறைக்கு கேட்போர் க்குரஞ்சகமாய் அமைந்திருக்கும். ஸ்வரம் பாடும்போது தான் பாடகர் தன்னை மறந்தார். ஸ்ருதியும் மறைந்தது. ஸ்வரம் அவ்வப்போது ஸ்ருதி துளி அத்தனை விலகிய தல்லாமல் மற்றுப்படி சுமாராய் அமைந்தது. கடைசியாய் 'நீதுமகிம' என்னும் ஹம்சாநந்தி கிருதி பல்லவிக்கு ஸ்வரம் சோபிதமாய் அமைந்தது. இப்பாடல் பாடப்பட்ட வேகத்தில் விஜய குனியை இந்த இடத்தில் பாடியிருப்பின் கச்சேரியின் தன்மையே மாற்றமடைந்திருக்கும்.

பொதுவாக ஊக்கப்படுத்த வேண்டிய பாடகர். பெரியோர்களின் கச்சேரிகள் நிறையக்கேட்டு ராகக்கலப்பின்றிப் பாடக்கற்றுக் கொண்டால் சங்கீத உலகில் நல்ல இடத்தைப் பெறலாம்.

—"ஆனந்த பைரவி"

இலக்கியம்

இலக்கியத்தில் பத்தினி இலக்கியம், பரத்தை இலக்கியம் என்று கிடையாது. நல்லவை, மோசமானவைதான் உண்டு.

—ஒஸ்கார் வைல்ட்

"நான் எழுதியவற்றில் என்றுமே திருப்திஅடைந்ததில்லே. நான் எப்போதும் எனது ஆற்றலுக்கு மீறிச் சொல்லத்தான் முயன்றேன்."

—விலியம் போக்னர்

திரைப்பட விமர்சனம்

செந்தாமரை

'ஊடுருவி'

பத்து மாதங்கள் சுமந்து பாடுபட்டுப் பெற்றுள் அன்னே-மகவை.

பத்து வருடங்கள் சுமந்து படாமற் பெற்றெடுத்திருக்கிறது ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ்—'செந்தாமரை'யை.

பிரபல நட்சத்திரங்கள்.
பிரபல டைரக்டர் பீம்சிங்.
பிரபல இசையமைப்பாளர் விஸ்வநாதன்—இராமமூர்த்தி.
—சிருஷ்டி கர்த்தாக்களில் முக்கியமானவர்கள்.

சிவாஜிகணேசன் எப்படி வளர்ந்தார் என்பதை அறிய வேண்டுமா—காண வேண்டுமா? பாருங்கள் செந்தாமரையை. நடிப்பு—வரலாற்றுச் சருக்கம்,

பப்பி அக்கா பத்மினி ஆட்டமில்லே, நடிப்போட்டமில்லே, வாட்டசாட்டம்......?

லலிதா—கமலம் வயதுக்கேற்ற வண்ணம். பூவினுக்கருங்கலமே.

எஸ். எஸ். ஆர்—கே. ஆர். ராமசாமி நடிக்கின்றனர். ஒரு கட்டம் மனத்தைத் தொடுகிறது.

சந்திரன் ஆக வருகிருர் சந்திரபாபு. ஒளிவீசவில்லே. முகில் மறைக்கின்றதோ? இடைக்கிடை வீசுகின்றது.

மற்றவர்கள் வந்தார்கள்.

ஆமா! பாட்டு ஒன்றுதானும் நிலேக்கும்படியாக இல்லேயே! என்ன சங்கதி?

''என்னய்யா பண்ணறது. இத்தனை புகழடைந்த பின் எங்கள் ஆரம்ப கட்டத்தை வெளியிட்டால் பின்னே என்னவாம்?''

வசனம் மலரே—மணமே—பிணமே என்கிறது. கதை காய் மடைந்து விட்டது போலும். 'பிளாஸ்டர்' பண்ணியிருக்கிருர்கள்.

''கட்! கட்!'' வார்த்தையை மறந்து விட்டார்கள். ஓடுகிறது நீளந்தெரியாமல்—நதிபோல—குப்பைகள் இடைக்கிடை மிதக்க.

காட்சிகள்! 'பராசக்தி' காலத்தைப் பிரதிபலிக்கும் பாணியில் அமைத்திருக்கிருர் அரங்கண்ணல். அவர் என்ன செய்யட்டும்.

பெயர்! 'செந்தாமரை'யிலும் பார்க்க 'பட உலகின் பத்தாண்டு' என்பது நன்ருயிருந்திருக்கும்.

நட்சத்திரங்கள் வந்து தாமரையை மலர வைக்க முடியவில்லே. சூரியன் வர வேண்டுமோ? ஓகோ! இது செந்தாமரை அல்லவே.

வெறும் நிழற் ப(ை)டப்—பூ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரமும்-இசைக் குறிப்பும்

*(செந்தமிழ்ச் செல்வர் - சைவசமய சிரோன்மணி வித்துவான் **பாலூர் கண்ணப்ப முதலியார்** எம். ஏ, பி. ஓ. எல். பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், புதுக்கல்லூரி சென்னை.)*

திருஞான சம்பந்தரது இசைக் குறிப்பை உணர்தற்கு முன் அவருக்குத் தமிழ் இசையின் மாண்பைப்பற்றியும், தமிழினைப் பற்றியும் உள்ள மனப்பண்பை உணர்வோமாக. தென்னாடு தமிழ் இசைக்குப் பேர் பெற்றது என்பதையும், தமிழ்மொழியே இசை அமைந்தது என்பதையும் நன்கு எடுத்து இயம்பியுள்ளார்.

''ஊறு பொருளின் தமிழ் இயற்கிளவி தேருமடமாதருடனார் வேறு திசை ஆடவர்கள் கூற இசைதேரும்எழில்வேதவனமே'' என்று பாடிய பாடலின் கருத்து வேதவனமாம் திருமறைக்காடு பிறதேசத்தவர் வந்து இசைப் பயிற்சிக்கு இருப்பிடமாய் அமைந்தது என்பதாம். இது தமிழ் இசையின் மாண்பை இயம்புவதன்றோ? இவர் தமிழிற்கு அடைகொடுத்துப் பேசும் இடங்கள் சிலவற்றுள் பண்ணார் தமிழ், பண்ணார்ந்த தமிழ் என்று பாடியுள்ளனர். இனி அவர்தம் பாடலில் காணும் இசைக்குறிப்பைக் காண்போமாக.

யாழ் என்னும் இசைக் கருவியினைக் குறிப்பிடும்போது இன்னிசை யாழ் என்றும் துளை பயிலும் குழலியாழ் என்று குழல் கருவியையும்குறிப்பிட்டுள்ளார். முழவைப் பற்றிய குறிப்புப் பல இடத்தும் வந்துளது. 'முழவோடிசை' என்றும் 'முழவுள் மந்த ஒலி முழவொடு' என்றும் கூறியுள்ளார். பறையும் இசைக் கருவிகளுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.

'நாவினில் பாடல்' என்ற தொடர் இசைக் கருவிகளுள் ஐந்தனுள் மிடற்றுக் கருவியும் ஒன்றாதலின் அக்குறிப்பினை விளக்க எழுந்ததாகும். அப்பர் போலவும், வள்ளுவர் போலவும் இவரும் பாடலுக்குப் பண் இன்றியமையாதது என்பதை வற்புறுத்தப் பலவேறு இடங்களில், பாடலுக்குப் பண் என்னும் மொழியை அடைகொடுத்தே பாடியுள்ளார். 'பண்ணியல் பாடல்' என்றும், வண்டுகளும் பண்ணியைத்தே பாடின என்பதை 'வண்டு பண்ணின்று ஒலி செய்' என்றும் குறித்துள்ளார். 'பண்டான செலும் வண்டியாழ் செய்' என்ற அடியையும் காண்க. 'பண்ணாரப்பாட வல்லார்க்கு இல்லை பாவமே' என்றும் பாடியுள்ளார். 'பண்கள் ஆர்தரப் பாடுவார் கேடிலர்' என்றும் கூறியுள்ளார். ஏழிசையினை 'ஆருச் சுவை ஏழ் இசை' என்றும், 'பண்ணும் பதம் ஏழ்' என்றும் பாடியுள்ளார்.

சம்பந்தரது பாடலில் மொந்தை என்னும் இசைக் கருவி அடிக்கடி குறிக்கப்பட்டுள்ளது. இது போலவே தக்கை என்னும் கருவியும் காணப்படுகிறது. 'தழங்கும் மொந்தை தக்கை மிக்க' என்றும், 'மொந்தை கொட்ட' என்றும், 'தண்டு உடுக்கை, தாளம் தக்கை சார நடம்பயில்வார்' என்றும், 'தமிழின் நீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல முழவம் மொந்தை மல்குபாடல்' என்றும் 'முழவம் குழல் மொந்தை முழங்கு' என்றும், 'குழலும் மொந்தை விழா ஒலி' என்றும், 'மண்முழவம் குழல் மொந்தை பறைவளர் பாடல்என்றும் குறிப்பிட்டுள்ளார். பேரியும் ஓர் இசைகருவி என்பது 'பேரி முழங்

கக் குலாவி' என்ற அடியால் தெரியவருகிறது.

பண்கள் பல. அவற்றுள் செவ்வழியும் ஒன்று. அதனை இவரது தேவாரத்தில் 'சிறைவண்டு பெடை புல்கிச் செவ்வழி பாடும் குற்றாலம்' என்றும், 'வண்டுசெவ்வழி நற்பண்பாடும்' என்றும் பாடியுள்ளதைக் காண்க. திருஞான சம்பந்தரது மூன்று திருமுறைகளிலும் காணப்படும் பண்கள் கீழ்வருவன. அவை: நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார பஞ்சமம், சாதாரி பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக் குறிஞ்சி என்பன. ஆக 22 பண்கள். இப்பண்கள் முறையில் சம்பந்தர் தேவாரம் பாடப்பட்டன என்பது அவ்வப்பதிகத்தலைப்பில் இப்பண் பெயர்கள் அமைந்திருப்பதால் அறிகிறோம். இப்பண்களின் பெயர்களுள் சில இவரது பாடல்களில் உண்டு என்பதைச் செவ்வழிப் பண் குறிப்பிடப்பட்டிருப்பதை முதலில் கண்டோம். இது போலவே ''காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாட'' என்றும் பாடியுள்ளார்.

பெரும் பண்கள் நான்கு அவை மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலைஎன்பன, இவை யாழ் இயைந்து மருதயாழ், குறிஞ்சி யாழ், நெய்தல்யாழ், பாலையாழ் எனப்படும். யாழ் என்பது பண்ணையும் இதைப்பற்றிய குறிப்புக்களைச் சிலம்பில் காணலாம். சம்பந்தரது பாட்டினும் ''பாலையாழ்ப் பாட்டுகந்தான்'' என்ற குறிப்புக்காணப்படுகின்றது.

ஏழ் இசைகளில் குரல் முதலில் நிற்பது. அதனை இவர் ''பண்புனை குரல் வழி'' என்று குறித்துள்ளனர். கிளி ஏன்னும் இசைப் பெயரை ''கிளிபடும் இன் சொலினார்'' என்றனர். ''துத்தம் நல்லின இசை'' எனத்துத்த இசையினைச் சுட்டியுள்ளார்.

மொந்தை என்னும் இசைக் கருவியினைக் குறிப்பிடும் இடங்களில் பெரிதும் குழலை இயைத்துக் கூறுவதால் அதற்கு இது துணைக் கருவி என்பது தெரிகிறது. ''மொந்தை குழல்'' என்றதைக் காண்க. முழவில் பல உண்டு ஆதலின் மண்முழவு, மண்ணார்ந்த முடிவு என்று குறிப்பிட்டு, அதன் அமைப்பினையும் அறிவிப்பது அறிதற்குரியது.

தெத்தே என்பது இசை ஒலியாகும். வண்டின் ஓசை இவ்விசை ஒலியாகும் என்பதை ''தும்பி தெத்தே எனமுரல'' என்றனர். சல்லரி என்பதும் ஓர் இசைக்கருவி அதனை ''சல்லரி யாழ் முழவம் மொந்தை குழல் தாளமது இயம்ப'' என்று முன் வைத்துச் சிறப்பித்துள்ளார். **கொக்கரை** என்பதும் ஓர் இசைக்கருவி. ''கொக்கரை குழல் முழவு'' என்றதைக் காண்க.

இவ்வாறு பல குறிப்புக்கள் ஞானசம்பந்தரது பாடல்களில் காணப்படுகின்றன. அடுத்தாற்போல சுந்தரரது பாடலிலும் காணக்கிடக்கும் இசைக் குறிப்பினை நோக்குவோமாக.

நம்பி ஆரூரது பதிகங்கள் இந்தளம், தக்க ராகம், நட்டராகம், கொல்லி, கொல்லிக்கௌவாணம், பழம் பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், காந்தார பஞ்சமம், நட்டபாடை, புறநீர்மை, சீகாமரம், குறிஞ்சி, கௌசிகம், செந்துருத்தி, பஞ்சமம் என்ற பண்களிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பட்டன என்பது பதிகங்களின் தலைப்பில் அமைந்த இப்பண்களின் பெயர்கள் மூலம் உணர்கிறோம். இவரது பாடல்களுள் அமைந்த இசை பற்றிய செய்தி யாது என்பதையும் அறிதல் நலமன்றோ.

இசைக்குரிய ஒலிக் குறிப்பினை அழகுற 'தென்னாத் தெனாத் தெத் தெனா என்று பாடி' எனக் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் யாழினைப் பற்றிப் பாடுகையில் 'யாழ் முயன்றிருக்கும் ஆரூர்' என்றார். பேரி முழவும் இவர் பாடலில் காணப்படுகின்றன. 'பேரி முழவொலியும்' என்றனர். 'ஏழ் இசை' என்றதொடர் இவர் பாடலிலும் உண்டு. இவரும் இசைக்குப் பண் இன்றியமையாதது என்பதைக் குறிப்பிடுவாராகி 'பண்ணார் இசைகளது கொண்டு பலரும் ஏத்தும்' என்று பாடுகின்றார். பாடல்கள் பண்ணுடன் பாடப் படுதலின் இன்றியமையாமையினை 'பண்ணார் பாடல் அறா' எனக் கூறுதல் கொண்டு தெளியலாம்.

திருநாவலூரரர் பாடல்கள் நமக்குக் குறைவாகவே கிடைத்திருக்கும் காரணத்தால் இசைகளைப் பற்றிய குறிப்புக்கள் அவர் பாடல்களில் மிகுதியும் அறிதற்கில்லை. ஆனால் கிடைத்த அளவில் இவர் பண்ணைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துப் பாடலுக்குப் பண் இன்றி அமையாதது என்பது புலனாகிறது.

தேவாரம் வெறும் தோத்திரப் பாடல்களின் தொகுப்புமட்டும் அல்ல. அவை ஒரு 'கலைக்களஞ்சியம்'. அவற்றுள் அறுபத்து நான்கு கலைகளையும் காணலாம். அக்கலைகளுள் ஒன்றான இசைக் கலைக் குறிப்பே ஈண்டு எழுதப் பட்டது. சமயம் வாய்ப்புழி ஏனைய கலைகளைப் பற்றி ஆய்வோமாக.

(முற்றும்)

அடுத்த ஊற்றிலே—

அடிகளாருடன் ஆறு நாட்கள்

[ஈழத்துச் சிவானந்தன்]

அற்புத உலகின் கற்பனைச் செய்திகள்
இன்னும் பல இடம் பெறும்.

Edited and published by S. Arunmoli Thever Residing at 31/3. Hampdem Lane Colombo-6 on October 1st 1962 for the proprietor of the THENARUVI and Printed at Rajeswari Press, 18, Prince Street, Colombo.

இலங்கை எங்கிலும் இணையில்லாது
விளங்கும் ஒரே ஒரு பீடி
ராஜ பீடி ஸ்பெசல்



ராஜபீடி ஸ்பெசலை
இன்றே வாங்கி உபயோகியுங்கள்.

"ராஜபீடி கம்பெனி"
399, பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவின்யூ,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Skill that breathed in his father's hand
Patterns that grew with country's soil,
in a colour-language, symbol of life's
changing moments and desires,
the heritage of years is woven
into the wrap and weft
of the Weave ...

[illegible] தோட்டம்
புஸ்தக நிலையம்,
கண்டி.

handlooms

GOVT OF INDIA
7 SEA ST COLOMBO 11.

Branches
47 MAIN STREET JAFFNA
69 COLOMBO STREET KANDY
20 BAZAAR ST. BADULLA

WAA/H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org